கல்கி

KALKI 27-4-80 90 காசு



அரிப்பும் எரிச்சலும் தரும் வியர்க்குருத் தொல்லையிலிருந்து விடுதலை பெறுவீர்!




நைஸில்
உபயோகிப்பீர்
மிகத்துரித
நிவாரணம் அளிக்கும்
வியர்க்குரு பவுடர்





வாங்குவீர் நைஸில்—
விரட்டுவீர் வியர்க்குருவை.
விலை 6 ரூ. 63 பைசாதான்.*

* அதிகபட்ச சில்லறை விற்பனை விலை.
உள்ளூர் வரிகள் தனி.




அரிப்பு, எரிச்சல் போன்ற தொல்லைகளிலிருந்து மிகத் துரித நிவாரணம் தரவல்லது வியர்க்குரு பவுடர் ஒன்றுதான் நைஸில். விசேஷ மருந்துக் கலவையுள்ள நைஸில், எவ்வொரு கட்டத்திலும் வியர்க்குருவை எதிர்த்துப் போராடுகிறது.


1. அதிகம் வியர்க்காமல் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமூட்டுகிறது.

GN-79-364 E Tam

Kalki Shopping Page

நட்சத்திர வடிவம் பரிசுத்திட்டம்!





இங்கு உள்ள துண்டங்களை ஜாக்கிரதையாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு வெள்ளைத் தாளில் ஒன்று சேர்த்து ஒட்டி திரைப் பட நட்சத்திரத்தின் உருவை பின்னமின்றிக் காண முடிகிறதா பாருங்கள். பத்து கல்கி நேயர்கள் மட்டுமே அவ்வாறு காண முடியும். அதிர்ஷ்டசாலிகளான அந்தப் பத்துப் பேருக்கும் தலா ரூ. 25 பரிசு உண்டு. தவிர அந்தத் திரைப்பட நட்சத்திரத்தின் கையெழுத்துடன் கூடிய புகைப்படமும் அனுப்பி வைக்கப்படும். முடிவு தேதியான மே ஏழாம் தேதிக்குள் அனுப்பப்படும் உருவங்களே பரிசீலிக்கப்படும். உறையின் மேல் ''நட்சத்திர வடிவம்'' என்று குறிப்பிடவும். கடிதப் போக்குவரத்துக் கிடையாது. கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் விலாசத்தைத் தெளிவாக ஒட்டப்பட்ட படத்தின் கீழே குறிப்பிட மறவாதீர்கள்!

ஆசிரியர் கல்கி, சென்னை-32



ON THE SPOT

வெள்ளாங் கோயிலில் வெயசில..



பதிஞெரு ஏக்கர் நிலப்பரப்பு என்றாலும் வீடும் அதைச் சுற்றிய இடங்களும் குறைவு தான். வீட்டைச் சுற்றிய சிமெண்ட் தரையில் நெல்மணிகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. பகல் முழுவதும் அந்த நெல்மணிகளின் மீது யாராவது ஒருவர் நடந்து கொண்டே இருக்கிறார். மாலை வேளை வந்ததும் நெல்மணிகள் குவியலாக்கப்பட்டு மூடப்படுகிறது. சிறிது தூரம் தள்ளி நெல்லை வேகவைக்கும் இடம். இவ்வளவுக்கும் சொந்தக்காரர், பாக்யராஜின் சகோதரர் தனராஜுடன் படித்தவரான எம். அர்த்தநாரி. செல்லப் பெயர் மணி.

'பாக்கியம்' என்று குரல் கேட்டாலே அது மணியினுடையதாகத்தான் இருக்கும். ஏனெனில் பாக்கியராஜுடன் சிறு வயது முதலே உடனிருந்தவரல்லவா?

இந்த வீட்டில் படப் பிடிப்பு நடத்த உத்தேசிக்கப்பட்டது. ஆனால் மின்சாரம் நின்று விடவே எவ்வளவு நேரமாகும் என்று கேட்டுக்கொண்டு, சில மணி நேரமாகும் என்று தெரிந்ததால் நேரத்தை வீணாக்காமல் வெளிப்புறப் படப்பிடிப்புக்கு அங்கேயே முடிவு செய்து கிளம்பினார் பாக்யராஜ். போகும் போது, ''நடிப்பது, இயக்குவது இரண்டையும் ஒருசேரச்செய்வது கஷ்டமா?'' என்றேன்.

''கஷ்டம் என்று சொல்ல முடியாது. ஒரு டைரக்டர் தான் எடுக்கும் படத்தின் ஸ்கிரிப்டைச் சரியாக, முழுமையாக அமைத்து விட்டால் என்பது சதம் வேலை முடிந்து விட்டதாக வைத்துக் கொள்ளலாம். அப்படி இருக்கும்போது நடித்து ஏன் இயக்கக்கூடாது? எந்த இயக்குனருக்குமே சில பாத்திரங்கள் தான் சரியாக அமையும். எனக்கும் அப்படித் தான். ராணுவ தளபதியாகவோ இல்லை போலீஸ் அதிகாரியாகவோ நான் நடிக்க முடியுமா? எனக்கு ஏற்றாற்போல் உள்ள பாத்திரத்தை நான் தேர்ந்தெடுத்து நடிக்க வேண்டும்.''

கார் நின்றது. அது ஒரு கரும்புத் தோட்டம். அதைத் தாண்டி ஒரு சிறிய வயல்வெளி. வயல்வெளியில் நாங்கள் பார்த்துக்கொண்டே வர ஒரு குறிப்பிட்ட இடத்தில் படம் பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார் பாக்யராஜ். கரும்புத் தோட்டம் எல்லோர் கண்களையும் குத்த, ''சிவப்பாக இருக்கே கரும்பு, ருசியாக இருக்குமா?'' என்று பாக்யராஜ் கேட்டதுதான் தாமதம். ஒரு டஜன் கரும்புக்கு மேல் வெட்டி இவர் முன் போடப்பட்டது. சாப்பிட்ட சில நிமிடங்களுக்குள் தாகமெடுத்ததால் தண்ணீரையும் குடித்தார். அவ்வளவுதான். நாக்கு ரத்தக் களரியாகிவிட்டது. கரும்பைத் தின்று விட்டுத் தண்ணீர் குடிக்கக் கூடாதாம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நான் ஒரேயடியாகப் பயந்து அன்று முழுவதும் தண்ணீர் குடிக்கவில்லை. படப் பிடிப்பு நடக்கிறது என்று செய்தி பரவி முந்நூறு பேர்களுக்கு மேல் அங்கு கூடிவிட்டார்கள். வசனத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக பாக்கியராஜ் நடிகை பொன்னிக்குச் சொல்லிக் கொடுக்கப் பொன்னி தவறு செய்யும்போதெல்லாம் சுற்றியுள்ள மக்கள் சிரிக்க ஆரம்பித்தனர். இதைப் பார்த்த பாக்கியராஜ் மிகவும் வருந்தினார். 'வெளிப்புறப் படப்பிடிப்பில் இதுதான் ஸார் பெரிய கஷ்டம்' என்று அவர் பார்வை என்னிடம் பேசியது.

மச்சானைத் தேடி நடிகை பொன்னி ஓடுவதாகக் காட்சி. 'மூன்று நான்கு இடங்களைத் தேர்ந்தெடுங்கள்' என்று தம் குழுவிடம் சொல்லிவிட்டுத் தாமும் தேடிப் புறப்பட்டார் இயக்குனர். பொன்னி கையில் மாலை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிவரவேண்டும். வசனங்கள் எதுவும் கிடையாது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொன்னியை ஓடச் செய்தார். முள்ளும், கற்களும் ஆங்காங்கே புதர்களுமாகக் காட்சி தந்த அந்த இடத்தில் பொன்னி ஓடும்போது கீழே விழுந்து எழுந்து சமாளித்துக் கொண்டார். ஆனால் அதற்குள் கேமிராவில் பிலிம் தீர்ந்து விட்டது. அதற்குப் பிறகு நாலு தடவை எடுத்தும் கூட பாக்யராஜுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. ''விழுந்து எழுந்து ஓடுவது

எதிர் பக்கம்:

- கையில் சிகரெட்டுடன் நடராஜ்
- எம். அர்த்தநாரி (மணி), பாக்கியராஜ் >
- பாக்கியராஜ் மாலையுடன், அருகே கே. கே. சௌந்தர்
- நடிக்கச் சொல்லிக் கொடுக்கிறார் இயக்குநர்





இயற்கையாக இருந்தது. பொன்னி பிறகு விழவே இல்லையே'' என்றார் சிரித்துக் கொண்டே.

மூன்றாவது நாள் காலையில் வெகு சந்தோஷமாக இருந்தார் பாக்யராஜ். என்ன என்று கேட்பதற்கு முன்னாலே, ''இன்று நீங்களும் நானும் கிணற்றில் குளிக்கிறோம். சரிதானே!'' என்றார். ''அதற்கென்ன'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டேன். கிணற்றைப் பார்த்தவுடன் உலகிலுள்ள எல்லாக் கடவுள்களையும் வேண்டிக் கொண்டேன். ஏனெனில் கிணற்றில் அதிகம் தண்ணீரில்லை. இருந்த கொஞ்சம் தண்ணீரும் நாற்பது அடிக்குக் கீழே. காயம்பட்டுவிட்டால்? பயந்தது நான்மட்டும்தான். கண் மூடித் திறக்கும் நேரத்தில் பாக்கியராஜ் தண்ணீருக்குள் இருந்தார், ஒரு கல்லையும் சுமந்து கொண்டு! அது ஒரு தற்கொலை சீன்! காட்சி ஓ.கே!


பாரதி ராஜா பாக்யராஜ் என்று திறமைகள் கிளைவிட்டுப் படர்கின்றன. ஒரு கையிலேயே ஓசை என்றால் பாக்கியராஜன் ஆற்றலுக்குக் கேட்கவா வேண்டும்? —சலன்






ஏந்திரிய்யா, நாற்காலியைக் காலி பண்ணு! இனிமே இவர் தான் பாங்கை நடத்துவார்!...
..மூக்காலே அழாதே! இதை வெச்சுக்கோ.. பொழைச்சுப்போ!
நஷ்ட ஈடு
திறமையற்ற நிர்வாகம்
மத்திய அரசு
அரசுடைமையாக்கும் சட்டம்
6 பாங்கு-கள்
ரூ 2356 கோடி
ஏனுங்க, இதெல்லாம் பழைய பேப்பர்காரனிடம் போட்டுட வேண்டியது தானே!
உடன் பிறப்பு
நாற்காலியிலே என் சின்னம் நான் வைப்பேன்!
இல்லே.. என் சின்னம் நான் வைப்பேன்!
தி.மு.க
தமிழக இ-காங்கிரஸ்
முதலமைச்சர் பதவி

1980 ஏப்ரல் 27
ரௌத்திரி சித்திரை 15
மலர்: 38 இதழ்: 39



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

தீராப் பழியிலிருந்து தப்பினோம்!

கத்தியின்றி ரத்தமின்றி விடுதலைப்போர் நடந்த நாடு இது. அஹிம்சையைப் போதித்த மகாத்மா, ''இந்தியா என்று வன்முறையைத் தன் முறையாக ஏற்கிறதோ அன்று அதனை என் தாய்நாடு என்று கூறிக்கொள்ள மாட்டேன்'' என்றார். காந்திக்குக் கிடைத்தது வன்முறை மரணம். நமக்குக் கிடைத்தது தீராப்பழி!

இன்று ஒரு சுயவன் நமது பிரதமர் மீது கத்தி வீசியிருக்கிறான். நல்லவேளை குறி தப்பியது. நம் தேசமும் மற்றுமொரு தீராப்பழியிலிருந்து தப்பியது.

லால்வானி சித்த சுவாதீனம் அற்றவனோ அல்லது அறிவு பூர்வமாகவே செயல்பட்டானோ; தானாகச் செய்தானோ அல்லது துர்ப்போதனையால் அப்படி நடந்து கொண்டானோ எவ்வாறாயினும் தேசத்துக்கு அவமானம் தேடித்தருகிற காரியம் நடந்து விட்டது.

நாகரிகம் உள்ள யாராயினும் கண்டிப்பார்கள். நாமும் வன்மையாக வன்முறையைக் கண்டிக்கிறோம்.

ஆனால் தலைவர்கள் சற்று அல்ல, நிறையவே சிந்திக்க வேண்டும்.

''பிரதமர் மீது கத்தி வீச்சு'' என்ற தலைப்பைத் தாங்கி வருகிற அதே நாளிதழ், ஜகஜீவன் ராமின் பேச்சையும் வெளியிடுகிறது. அதற்குத் தலைப்பு: ''எங்களிடம் துப்பாக்கிகளைக் கொடுங்கள்! எங்களுக்கும் சுடத் தெரியும்!''

ஹரிஜனங்களுக்கு இந்நாட்டில் சில இடங்களில் கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது. மறுக்கமுடியாத உண்மை. அதற்காக இப்படியா மக்களைத் தூண்டி விடுவது? பொறுப்புள்ளவர் பேசுகிற பேச்சா இது? கொஞ்ச காலம் முன்புவரை இந்திராவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்தவர், பிரதமரிடமும் ஆட்சியிலுள்ள மற்றவரிடமும் பேசி, ஹரிஜனங்களின் நல்வாழ்வுக்கு ஆக்கபூர்வமாக வழிவகுக்கக் கூடாதா?

அனைத்திந்தியத் தலைவரோ, மாநிலத் தலைவரோ, வட்டாரத் தலைவரோ யாராயினும் சரி, நாகரிகத்துடன் நடந்து கொள்ளவேண்டும்; பேச வேண்டும். தேர்தல் பிரசாரத்திலோ கொள்கை விளக்கத்திலோ துப்பாக்கி என்ற சொல்லே இடம் பெறத் தேவையில்லையே! மக்களின் அறிவுக்குத்தான் வேலை வைக்க வேண்டுமேயன்றி உணர்ச்சிக்கு அல்ல.

பிரதமரும் சிந்திக்கட்டும். மக்கள் உங்கள் கட்சிக்குப் பெருவாரியாக வாக்களித்தார்கள் என்றால் அது உங்கள் கட்சி அபேட்சகர்களுக்காக அல்ல; உங்களுக்காகவும் அல்ல! ஜனதா குழப்பவாதிகளிடமிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கம் ஒன்று; 'ஜனநாயகப் பற்றுள்ளவர்' என்று உங்களை நீங்களே திரும்பத் திரும்ப வர்ணித்துக்கொண்டது இரண்டு. உங்கள் கூற்றை மக்கள் நம்பி வோட்டளித்தார்கள். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரராக நடந்து கொள்ளுங்கள். யதேச்சாதிகாரப் போக்கைக் கை விடுங்கள். சகிப்புத்தன்மையற்ற சர்வாதிகாரப் போக்கு எதிர்த்தரப்பில் சாந்தத்தை உண்டாக்காது. பலரிடம் அச்சத்தை வளர்க்கும்; சிலரிடம் ஆத்திரத்தைக் கிளறும்.



வட்டமேஜை

ரொம்பத் 'திரில்' ரொம்பத் 'திகில்'!

❍ புத்தாண்டை யொட்டி வந்த கல்கியின் சிறப்பிதழைக் கண்டதும் தோன்றிய அளப்பரிய மகிழ்ச்சியை எப்படி வெளியிடுவது என்றே தெரியவில்லை. சுஜாதாவுக்கு ஒரு ஸ்பெஷல் பாராட்டு. அட்டைப் படம் ஸுபர்ப். அப்படி ஓர் அட்டைப் படம் கல்கியில் போட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதற்காக ஆசிரியருக்கு ஒரு ஷொட்டு

ஆலப்புழை சந்திரசேகரன்

❍ லட்சுமியின் நடிப்புக்கு இணையாக இயக்குனர் கே. பாலசந்தரின் முகபாவம் பிரமாதம்.

சென்னை-15 நெல்லை ஆ. கணபதி

❍ ''ராங் நெம்பர்'' படிக்கப் படிக்க முடிவு என்னவாகுமோ என நினைக்கத் தோன்றிய சஸ்பென்ஸ் நாடகம். இதை சுஜாதா தேர்ந்தெடுத்ததற்கும் ஒத்துழைத்த லட்சுமி — பாலசந்தர் ஆகியவர்களுக்கு நன்றி கூறவும்.

சென்னை—33 கே. பாபு

❍ பல இன்னல்களைத் தாண்டி வீர சாகசங்கள் செய்யும் கமிஷனர் கார்த்திகேயனும் போலீஸில் உள்ளார்; சாந்தா என்ன கதறியும் உதவ முடியாத சப் இன்ஸ்பெக்டர் இனியனும் போலீஸில் உள்ளார். என்னே விந்தை!

சென்னை-25 சிவராம நமசிவாயம்

❍ கார்த்திகேயனைப் பற்றி சுஜாதா எழுதிய கட்டுரையைப் படித்ததும் ஒரு மர்மச் சிறுகதையினைப் படித்து முடித்த திகில் உணர்வுதான் ஏற்பட்டது.

திருச்செந்தூர் ஏ. கணேஷ்

❍ பெங்களூரிலிருந்து வெளிவரும் தமிழ் தினசரியின் பெயர் தினச் சுடர். தினமலர் அல்ல!

பெங்களூர்-5 அ. குமார்

❍ ஒரு 'ஸ்கிட்ஸோப்ரீனியா'வின் கதையை ஒரு சாதாரண வாசகன் கூடப் புரிந்து கொள்ளுமாறு அருமையாக எழுதியுள்ள சுஜாதாவுக்குப் பாராட்டுக்கள், பாலசந்தருக்கு எழுதியிருக்கிறீர்கள். Still the greatest என்று. சுஜாதா Ever the greatest அல்லவா!

மைசூர் திவ்யா

❍ வரப்போகும் ரௌத்திரி வருடம் எப்படி இருக்கப் போகிறது என்று கோடி காட்டத்தான் ''திகில்'' சிறப்பிதழ் தந்தீரோ?

விழுப்புரம் க.சி. குமார்

❍ கொஞ்சம் திகில்!.... கொஞ்சம் த்ரில்! என்று சொல்லிவிட்டு நிறைய த்ரில்லையும் திகிலையும் கதைகளிலும் துணுக்குகளிலும் கொடுத்து 'சுஜாதா' எங்களை நடுங்க வைத்து விட்டார்!

மதுரை—1 என். ராம்

❍ பக்கத்துக்குப் பக்கம் ஒரே ஆவி மயம். பேசாமல் ''ஆவிகள் சிறப்பிதழ்'' என்று போட்டிருப்பதுதானே?

சென்னை பூவை விமலன்

❍ என்னதான் நம்பிக்கை உள்ளவர்களின் உணர்வுகளை மதிக்கிறதாய் இருந்தாலும் 'பிளாக் மாஜிக் செய்திகளுக்கும், பேய் பிசாசுக் கட்டுக் கதைகளுக்கும் இவ்வளவு முக்கியத்துவமா? அதுவும் 'கொள்ளிவாய்ப் பிசாசு' பற்றி விஞ்ஞான உண்மையைச் சரித்திரக் கதையான 'பொன்னியின் செல்வ'னிலேயே அடித்துச் சொன்ன கல்கியின் பத்திரிகையில்!

சென்னை—33 சுப்ரபாலன்

[அதே கல்கிதான் இதே இதழில் வெளியான நீர்ப்பு கதையையும் எழுதியிருக்கிறார்!] ஆர்.

❍ 'மலை ஏறும் போட்டி' மறக்க முடியாத காட்சி. மறக்க முடியாத கட்டுரை. புகைப் படங்கள் ஒவ்வொன்றும் தத்ரூபமாக இருந்தன. மலையேறுவது சாதனைதான். 'கல்கி' மலையேறும் போட்டி நடத்தியதும் சாதனைதான்.

சென்னை—7 எஸ். ராஜேந்திரன்

❍ ஒரு ஐக்யூ கேள்விக்கு விடை தவறாகப் பிரசுரமாகியுள்ளது. இரண்டரைக்கு ஐந்து மடங்கு மூன்றுக்கு நான்கு மடங்கு எப்படி ஆகும் எனப் புலப்படவில்லை.

தஞ்சை வி. சம்பத்

❍ ஐ க்யூவில் உங்கள் கணக்குப்படி என் மதிப்பெண் 148. கணேஷின் ஐக்யூவை விட அதிகமாக்கும்!

மதுரை ரோச்

❍ ஹேமா ஆனந்ததீர்த்தனின் கதை முதல் அத்தியாயத்திலேயே வெற்றி நடை போடுகிறது. மணியன்செல்வனின் படம் அற்புதமாக இருக்கிறது.

மதுரை இரா. நாராயணன்

செய்திகள், வாசிப்பது 'செம்பியன்'

காங்கோவில் கல்வி ஆசிரியர்!

அலை ஓசை கேள்வி பதிலில் இடம் பெறும் பாக்கியம் செம்பியனுக்குக் கிட்டி விட்டது!

பதிலின் தொடக்கத்தில் அலை ஓசையார், ''கல்வி ஆசிரியர் இந்த நாட்டில்தான் இருக்கிறாரா அல்லது காங்கோவிலா?'' என்று கேட்டிருக்கிறார்.

''சரியான போடு போட்டீர் ஐயா!'' என்று அலை ஓசையாரைப் பாராட்டுகிறேன். ஒரே ஆணையில் 9 மாநில சட்ட சபைகளை இந்திரா கலைத்த கொடுமையைப் பார்த்தால் காங்கோவின் மொபுடு ஆட்சி போல்தான் இருக்கிறது!

அதுமட்டுமல்ல,

நேற்று வரை எதிர்க் கட்சியினரே பெரும்பான்மையாய் இருந்த ராஜ்ய சபையில் மாநில சட்ட சபைகளின் கலைப்புக்கு அங்கீகாரம் கிடைத்ததென்றால் நாம் ஜனநாயகத்தில் இருக்கிறோமா அல்லது பணநாயகத்திலா என்று சந்தேகம் தோன்றத்தான் செய்கிறது!

அஸ்ஸாம் மக்களின் மன நிலையைப் புரிந்து கொள்ளாமல் அந்தக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி மேற்கு வங்க அரசைக் கவிழ்க்க நினைப்பதைப் பார்த்தால் கியூபாவில் காஸ்ட்ரோவின் ஆட்சியில் வாழ்கிறோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மறுநாளே அஸ்ஸாம் உயர்நீதி மன்றம் நிறுத்தி வைக்கக்கூடிய அவசரச் சட்டத்தை முதல் நாள் பிரதமர் பிறப்பிப்பதைப் பார்த்தால் துக்ளக் ஆட்சியில் இருக்கிறோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மாநில சட்ட மன்றங்கள், டில்லி மெட்ரோபாலிடன் கவுன்சில், டில்லி கார்ப்பரேஷன் எல்லாவற்றையும் பிரதமர் டிஸ்மிஸ் செய்யும் வேகத்தைப் பார்த்தால் உகாந்தா இடி அமீனின் ஆட்சியோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

உலக ஹாக்கி வீரர்கள் ... ... மனமுற்றோர் நினைத்தன்று குருடர்கள் தேசத் தலைநகரில் போலீஸாரின் தடியடிப் பிரயோகத்துக்கு ஆளான அக்கிரமத்தைப் பார்த்தால் ஹிட்லரின் ஆட்சியோ என்று கதிகலங்கச் செய்கிறது.

ஆனால்....

இந்திரா அம்மையாரும் சஞ்சய்யும் சுக்லாவும் சேத்தியும் தவானும் மனமனவென்று புனிதப்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது இது இந்தியாதான்; பாரத நாட்டில்தான் வாழ்கிறோம்; வேறெங்கும் இவ்வளவு அநியாயம் நடக்க முடியாது என்ற நம்பிக்கை பிறக்கிறது!

மணியான பாடம்!

பாலக்காடு மணி அய்யர் தாம் ஓய்வு பெறுவதை அறிவித்திருக்கிறார். அவரது ரசிகர்கள் அதிர்ச்சியும் மன நெகிழ்ச்சியும் வருத்தமும் ஒருங்கே அடைந்துள்ளார்கள். கொஞ்ச காலம் முன்னதாக ''மைக் முன்னால் இனி வாசிக்கப் போவதில்லை'' என்று கூறி ஓய்வு பெறுவதற்கான முதற் படியில் அடியெடுத்து வைத்திருப்பதை உணர்த்தினார். இப்போது முழுக்கவே ஓய்வு பெற்றுவிட்டிருக்கிறார். கச்சேரிகளுக்கு வாசிப்பதிலிருந்து தான் ஓய்வே தவிர கலையை அப்யசிப்பதிலிருந்தே அல்ல. சிறந்த இளம் கலைஞர்களைத் தோற்றுவிக்க முயலப் போவதாகக் கூறியுள்ளார். இதே இதழின் இன்னொரு பக்கத்தில் வித்யா தானத்தின் சிறப்பை சிருங்கேரி ஜகத் குருவின் அருள்வாக்காகக் காண்கிறோம். அதை நெஞ்சில் இருத்தி மணி அய்யரை வாழ்த்துகிறோம்.

மணி அய்யர் ஓய்வு பெறுவதானது நமது கிழட்டு அரசியல்வாதிகளைச் சிந்திக்க வைக்குமோ? அவர்கள் மனச் சாட்சி அவர்களை உறுத்துமோ? என்று ஒரு கணம் நினைத்தேன். பிறகு சே! அவர்களால் சீராகச் சிந்திக்க முடியும் என்றோ மனச்சாட்சி அவர்களுக்கு இருக்கிறது என்றோ எண்ணுவதே தவறல்லவா என்று ஞானோதயம் உண்டாயிற்று!

இருபது அம்சத்துக்கு பலி!

திறமைக்கும் நேர்மைக்கும் செந்நேர்த்திக்கும் இந்நாட்டில் தண்டனை உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக மேலும் பல வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அரசுடைமை ஆக்கப்பட்ட பதினான்கு வங்கிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு வியத்தகுவிதத்தில் வளர்ந்த ஆறு பாங்குகள் இன்று அரசுடைமையாக்கப்பட்டு விட்டன. மக்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்கள் பணத்தைத் தங்களிடம் சேமிக்கச் செய்வதிலும் அதனைத் திறம்பட நிர்வகித்து நிறுவனத்தின் செல்வத்தைப் பெருக்குவதிலும் ஆற்றல் காட்டியதற்குத் தண்டனையாக அரசு அந்த வங்கிகளை எடுத்துக்கொண்டு விட்டது! இருபது அம்சத் திட்டத்துக்குப் பணம் விரயம் பண்ண வேண்டாமா? அதற்காக இருநூறு கோடி ரூபாய்க்கு மேல் சேமிப்பு வளர்த்திருந்த வங்கிகள் எல்லாம் பலியாகி விட்டன. இருபது அம்சத்துக்கு மொத்தம் இருபது பாங்குகள், கணக்கு நேராகிவிட்டது!

திறமை காட்டி வளர்ச்சி அடையும் பாங்குகளோ இதர நிறுவனங்களோ ஒன்றன் பின் ஒன்றாக அரசுடைமை ஆகுமெனில், வளர்ச்சி பெற வேண்டும் என்ற ஆர்வத்துக்கே அது சாவுமணி அடித்ததாகுமல்லவா?

அரசுடைமையான பின் வளர்ச்சி பெற வேணும் என்ற ஊக்கமோ திறமையுடன் இயங்க வேண்டும் என்ற சிரத்தையோ இராது.

ஆக அரசுடைமைக் கொள்கை, அது அமல் படுத்தப்படுவதற்கு முன்பும் வளர்ச்சியைப் பாதிக்கிறது, அமல் படுத்தப்பட்ட பின்னரும் வளர்ச்சியைப் பாதிக்கிறது. அடாடா! அதன் அபார அழிக்கும் சக்திக்கு ஈடு இணை ஏது?



கதம்பம்

மனிதன் இதுவரை மண்ணைத் தோண்டிக் கீழே செல்ல முடிந்த ஆழம் 20,521 அடி. வயோமிங் எண்ணெய் கிணறுகளுக்காக இவ்வளவு தூரம் பூமியைக் குடையத் தேவைப்பட்டது. சுமார் நான்கு மைல் தூரம் வரை பூமியைக் குடைந்துவிட்ட மனிதன், உலகின் மையத்தை அடையச் செல்ல வேண்டிய தூரத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கை மட்டுமே குடைய முடிந்திருக்கிறது.

—அ. இராமச்சந்திரன்

✖

மகாராணி!

'ராணி' பத்திரிகையைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.

'மகாராணி' பத்திரிகையைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதுண்டா?

பெண்களுக்காக 1887ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட தமிழ் மாத இதழ் மகாராணி. இதன் ஆசிரியர் வி. கிருஷ்ணமாச்சாரியார்.

தகவல்: ஆர். மரகதம்

✖

இன்பம் வேறில்லை

சுத்தமான மனம் என்ற நல்லன கொடுக்



கும் க்கமான தூக்கம் போல இன்பம் வேறில்லை.
—கதே —ஆளம்

×

புராதனம்

உப்புமா உருவெடுத்த
காலை இட்லி சனியனுக்கு
மனைவியைக் கோபித்த
வன்
ஹோட்டலில் ருசித்த பக்
கோடா
முந்தாநாளைய மெதுவடா!

—புவனசந்திரன்

×

அனுபவ நம்பிக்கை!

அனுபவத்தை நம்பிக்கை தோற்கடித்து விடு கிறது என்பதற்கு ஓர் உதாரணம் - இரண்டாவது திருமணம். —லன் -பாபு

×

குழந்தை மனைவி!

"என் மனைவி இன்னும் குழந்தையாகவே இருக்கிறாள் டாக்டர்..."

"அப்படியா? என்ன செய்கிறாள்?"

"நான் லாலிபாப் சாப்பிடும் போது தனக்கும் வேண்டும் என்று அழுகிறாள். நான் பொம்மை வைத்து விளையாடும்போது தன்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அடம் பிடிக்கிறாள்..."

—முத்து

சமயபுரத்து மாட்டுச் சந்தையில் ஒரு ஜோடி உழவு மாடு பிடிக்க அனுக்கூர் கிராமத்திலிருந்து பெரம்பலூர் வந்து இறங்கினான் மன்னாடி. பஸ் ஸ்டாண்டைச் சூழ்ந்திருந்த ஜனத் திரளைப் பார்த்தபொழுதுதான் 'இன்னைக்குச் சந்தை நாளு...' என்று தெரிய வந்தது. வேலாயுதம் கடைப் பக்கம் சென்றவன் டீயைக் குடித்தான். அடுத்த வாரம் அண்ணன் மகளுக்குப் பரிசம் போட முறைக்காரப்பையன் வரப் போகிறான் என்று சில சாமான்கள் வாங்கி வரச் சொன்னது நினைவுக்கு வந்தது. அத்துடன் சனி மூலைக் காட்டில் கத்தரி வைக்கலாமென்ற எண்ணம் தோன்றவே அதற்கான நாற்றும் வாங்கலாமென்ற முடிவில் சந்தைப் பேட்டையை நோக்கி நடக்கலானான்.



அரச மரத்து நிழலில் வேலம்மாள் கடை பரப்பி வியாபாரம் செய்து கொண்டிருந்தாள். குங்குமம், மஞ்சள், சோப்பு, சீப்பு கண்ணாடி, பொம்மைகள் இத்யாதி...

நடையின் வேகத்தைக் குறைத்த மன்னாடி சற்று எட்டிப் போய் நின்று வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேலம்மாளை உற்று நோக்கினான். பார்த்து ஆறு வருஷமாகப் போவுதே!

அதே கட்டுத் தளராத மேனி! இயற்கையான கறுமை நிறம் சற்று மறைந்து சிவப்பேறிப் போயிருந்தது. அந்த நாளிலேயே நெஞ்சை ஒரு குலுக்குக் குலுக்கினால், முழு போதையில் தள்ளாடுபவனைப் போல் நினைவு நிலைகுலைந்து விடும்... இப்பொழுது வளர்ச்சியும், வளமையும் இன்னும் கவர்ச்சியைக் கொடுத்திருக்கிறது!

''வேலம்மா...அஞ்சாறு வருசமா என்னைக் 'கடுக்கா' குடுத்துட்டுச் சுத்திக்கிட்டிருக்கே! உன்னை ஊர் ஊராத் தேடிச் சலிச்சு மறந்து போன நேரத்திலே இப்படிக் கண்ணிலே படுவேன்னு நினைக்கலே... இனிமே நீ தப்ப முடியாது....'' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டவன், பீடி ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு எதிர்ப்புறமுள்ள டீக்கடைப் பக்கம் போய் மறைவாக நின்று கொண்டான்.

சுமார் ஆறு வருஷங்களுக்கு முன்பு வேலம்மாள் அனுக்கூரில் பொற் சிலையாய்த் திரிந்தாள். அந்தக் குக்கிராமத்தில் அவளை விட அழகானவள் இல்லையென்றே சொல்லி விடலாம். அந்த அளவுக்கு அழகும், துடிப்பும் சுடர் விட்டது அவள் மேனியில்!

அவள் தந்தை கேசவ நாயுடு ஊருக்கு வெளியே நடக்கும் சந்தையில் கடை போட்டு வியாபாரம் செய்வது வழக்கம். தாயற்ற மகளைக் கூடவே கூட்டிப் போவதும் உண்டு. சில நேரங்களில் ஊரிலேயே விட்டுப் போவதும் உண்டு.

வேலம்மாளின் தோற்றத்தில் மன்னாடி மயங்கிப் போனான். அதனால் நாயுடுக்கு அவ்வப்போது ஏற்படும் பணப் பிரச்னையை வலிய வந்து தீர்த்து வைப்பான்.

கிராமத்தில் 'முரடன்' என்று பெயர் வாங்கிய மன்னாடி ஊர் விவகாரம், பஞ்சாயத்து போன்ற நல்லது கெட்டதுகளில் முன்னின்று நியாயம் பேசுவது உண்டு. மேலும் அடிக்கடி டவுனுக்குப் போய் வருவதால், விவசாயியானாலும் நாகரிகம் கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்தான். அதனால் வேலம்மாளுக்கு அவனிடம் பேசுவதில் பிரியம் உண்டு.

ஒரு சமயம் சந்தை வியாபாரத்துக்குப் போய் வந்த நாயுடு மார்வலி என்று படுத்தவர், நிரந்தரமாகக் கண்ணை மூடி, வேலம்மாளை அனாதையாக்கி விட்டார். அழுது புலம்பின வேலம்மாளுக்கு உறவு சொல்ல



ஏமாய்!

சிதம்பரம் ராஜகோபாலன்

யாரும் இல்லை. மன்னாதிக்குச் சூழ்நிலை சாதகமாயிற்று.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த மன்னாதி ஒரு நாள் இரவு நேரம் குடிசைக்குப் போனான். அவனுடைய உடும்புப்பிடிகளிலிருந்து தப்பித்துக் கொள்ள, அழகான முத்துப் பற்களை அவன் மீது மேய விட்டு, ரணகளமாக்கினாள். இரவோடு இரவாக இருக்கின்ற வியாபாரப் பொருட்களோடு ஓடிவிட்டான்.

யாரோடு போனாள், எங்கு போனாள் என்ற தடயம் தெரியாமல் தவித்த மன்னாதி காலப் போக்கில் அவளை மறந்துவிட்டான்.

சுமார் ஆறு வருஷங்களுக்குப் பிறகு சமயபுரத்துச் சந்தை அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டது!

இரவு ஏழு மணி. காடா விளக்கொளியில் வேலம்மாள் உட்கார்ந்து கல்லாவை எண்ணிக் கொண்டிருந்தாள். வியாபாரம் இல்லாத நேரம். மன்னாதி கடையை அணைந்தான்.

''கறுப்பு செவப்பு ரிப்பன் நாடா ரெண்டு ஒரு சோப்பு டப்பி வேணும்... எம்மாந்துட்டு ஆவுது....?'' என்று கட்டைக் குரலில் கேட்ட மன்னாதியின் உருவத்தை, வேலம்மாள் நொடியில் அடையாளம் கண்டு கொண்டாள். நடக்கக் கூடாதது நடந்துவிட்ட படபடப்பு அவளிடம் ஏற்பட்டது. விட்டில் பூச்சி ஒன்று காடாவிளக்கொளியில் பட்டுத் துடிதுடித்ததையும் பார்த்தாள்.

குனிந்த தலை நிமிராமல் அவன் கேட்ட சாமான்களைக் கட்டிக் கொடுத்தபொழுது, அவனுடைய கையை ஓர் உலுக்கு உலுக்கி விட்டுச் சிரித்தான் மன்னாதி.

திருஷ்டிக்கு வைக்கப்படும் பொம்மையாய்த் தோன்றிய மன்னாதியைப் பார்க்கவே நடுநடுங்கினாள் வேலம்மாள். சமாளித்துக் கொண்டு 'நீங்க... நீங்க...' என்று இழுத்து நிறுத்தினாள்.

''வேலி... மறந்துட்டியா... இல்லே நான்தான் ஒன்னை மறந்திருப்பேன்னு நெனைச்சியா... அனுக்கூர் மன்னாதியேதான்..... சொகமா இருக்கியா... யாவாரத்திலே நாயினாவை மிஞ்சுட்டியே... என்னைப் பைத்தியமாக்கிட்டுப் பூட்டியே... இது நியாயந்தானா வேலி....'' என்றான் மன்னாதி.

வேலம்மாள் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் மட்டுமே பேசினாள். அவள் எதிரில் குத்துக்கால் போட்டு உட்கார்ந்தவன், என்ன பேசுகிறாள், எந்த விவரத்தைச் சொல்கிறாள் என்றெல்லாம் காது கொடுத்துக் கேட்க மறந்தவனாய் — அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனது தயக்கமும், பயமும் எங்காவது மீண்டும் ஓடிப் போய்விடுவாளோ என்ற சந்தேகத்தை எழுப்பவே, நயமாகப் பேசுபவன் போல் எழுந்தான்.

வேலம்மாள் மாமூலாகத் தங்கும் சாவடியில் தன் மூட்டைச் சுமைகளை வைத்துவிட்டுப் படுத்திருந்தாள். தூரத்தில் தெரு விளக்கு அழுது வடிந்து எரிந்து கொண்டிருந்தது.

மன்னாதி சாவடிப் பக்கம் வந்து ''வேலி... வேலி...'' என்று குரல் கொடுத்தான்.

வேலம்மாள் பதறிப் போய் எழுந்து செய்வதறியாமல் திகைத்தாள். எப்படித் தன் இருப்பிடம் தெரிந்து கொண்டு மன்னாதி வந்து நிற்கிறான் என்று வியந்து போனாள்.

''இந்தா பாரு வேலி... என் ஏக்கம் உனக்குப் புரியாமலா இருக்கும்? இனிமேயும் 'ஜவாப்' சொல்லாமக் கிளம்பு... ஊருக்குப் போய் உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேன்... தீபாவளி நெருங்கிடிச்சு... அலைஞ்சு திரிஞ்சதெல்லாம் போதும்... இனி ஒனக்கு யாவாரமே வேணாம்... ஏரி வயக்காடு வெளைஞ்சு குமியுது... வீட்டோட இருக்கலாம்....'' என்று நிதானமாகச் சொல்லிப் பார்த்தான். இருட்டிலிருந்து பதில் இல்லை.

''இப்ப என்னாடி சொல்றே... வெளியே வர்றியா இல்லியா?'' என்று பெரிதாகச் சத்தம் போட்டான்.

மண்டபத்தில் அவள் மட்டும்தான் படுத்திருந்தாள். உடனிருந்த வியாபாரிகள் இரண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போயிருந்தார்கள். மன்னாதி நிலைமை

சரியில்லாததைப் புரிந்து கொண்ட வேலம்மாள் பரபரவென்று இருட்டில் எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

பொறுமை இழந்த மன்னாதி உள்ளே நுழைந்து அவளைத் தழுவ முனைந்தான்.

அதற்குள் எப்படியோ காடா விளக்கை ஏற்றிவிட்ட வேலம்மாள், "மன்னாதி...மரியாதையாத் தள்ளிப் போ... நான் பழைய வேலம்மா இல்லே... இன்னொருத்தனுக்குச் சொந்தமாயிட்டவ.... வீணா கெட்ட பேர் வாங்காதே..." என்று சீறினாள்.

"என்னாடி அளக்கிறே... என்னை இனிமே ஏமாத்த முடியாது. மரியாதையா சொல்றேன்...கிளம்பு இப்பவே..."

"மன்னாதி... 'ஊர் ஒழுங்குக்கு ஒரு உடையான்'னு பேர் வாங்கின பரம்பரையாச்சே... அதை நீ கெடுக்கப் போறியா... முன்பு ஒரு தடவை நாச்சமுத்துவை ஊர் மத்தியிலே கட்டி வைச்சு அடிச்சியே நினைவிருக்கா... அதுக்காக அனுக்கூர் ஜனங்களே உன்னைப் புகழ்ந்தாங்களே... மறந்துட்டியா? நான்கூட உங்கிட்ட வந்து 'பெரிய துணிச்சல்காரர்'னு புகழ்ந்தேனே எதுக்குத் தெரியுமா? அடுத்தவன் பெண்டாட்டி கிட்ட வாலாட்டினவனுக்கு நீ கொடுத்த தண்டனைக்காக. இன்னிக்கு அதே தப்பை நீ செய்யப் போறியா... இது நியாயமா? நீ என்னை நெனைச்சது தப்பில்லே. இப்ப நெலைமையைச் சொல்லிட்டேன். புரிஞ்சிட்டுப் போயிடு... இல்லே... இந்தக் காடா விளக்கால ஒன்னை...ஒன்னை..." என்ற வேலம்மாள் வெறி கொண்டு கையில் தீப்பந்தமாய் எரிந்து கொண்டிருந்த காடா—விளக்கால் அடிப்பதற்கு நெருங்கினாள்.

விளக்கொளியில் வேலம்மாள் கழுத்தைப் பார்த்த மன்னாதி திடுக்கிட்டுப் பின்வாங்கினான். அவள் கழுத்தில் தொங்கிய மஞ்சள் கயிற்றை அப்பொழுதுதான் பார்த்தான்.

"கடவுளே... எவ்வளவு ஆசையா வந்தேன்... மண்ணைப் போட்டுட்டியே....." என்று நினைத்தவன், ஒரு விநாடி செய்வதறியாமல் திகைத்தான். போட்டிருந்த தண்ணியின் வேகம் போன இடம் தெரியவில்லை. நிலைமை தெளிவாகி விட்டது.

தரகர்: "உங்க பொண்ணுக்கு மாப்பிள்ளை வேணும்னீங்களே.... எப்படிப்பட்ட பையன் வேணும்?"

அவர்: "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உள்ள பையனும் பாரும்!"

-ஞானசௌந்தரி



வேலம்மாளின் அழுகை ஒலி வெகு தூரத்தில் போய்க் கொண்டிருப்பவர்களையும் ஈர்த்தது. மன்னாதி சட்டென்று திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

குல கௌரவத்தைச் சொல்லித்தானே மன்னாதி ஊர் நியாயம் பேசிக் கொண்டிருந்தான். அதனால் அவனுக்கு மதிப்பு உயர்ந்தது உண்மைதான்.

ஆனால் அதே நியாயங்கள் சொந்தப் பிரச்னையில் குறுக்கிட்டுத் தொலைக்கின்றனவே...ச்சீ...

ஒருவேளை நியாயம் பேசப் போகாமலிருந்தால், வேலம்மாளை மடக்கியிருக்கலாமோ என்றுகூட நினைக்கத் தோன்றியது.

மாடு வாங்க வந்தவன் மிகுந்த மனக் குழப்பத்துக்கிடையே ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

• • •

என்ன காரணத்தினால் மன்னாதி இப்படிப் பைத்தியம் பிடித்தவன் போல் காணப்படுகிறான் என்று யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அண்ணன் மகளைப் பார்த்துப் பரிசம்போட வருவதாகச் சொல்லிப் போன முறைக்காரப் பையன், திடீரென்று வேறு இடத்தில் பெண் பார்த்துவிட்டதாக வந்த செய்திகூட அவனைச் சமநிலைக்குக் கொண்டுவர முடியவில்லை.

நல்ல மழை பெய்து, ஊரே குஷியாக வயல்காட்டு வேலையில் ஈடுபட்டபொழுது தான், ஏதோ உணர்வு பெற்றுத் திரும்பியவனாய், மாடு வாங்கப் புறப்பட்டான். தன் மாற்றத்துக்கு யாரிடமும் எதுவும் சொல்லிக் கொள்ள விரும்பாமல் கிளம்பினான்.

மறு சந்தைக்குப் பெரம்பலூர் வர வேலம்மாவுக்குப் பைத்தியமா பிடித்திருக்கும் என்று நினைத்துக் கொண்டவன், அவள் கடை போட்டிருந்த இடத்தையும், சந்தையையும் சுற்றிப் பார்த்துவிட்டுச் சமயபுரம் பஸ் ஏறினான்.

மாடு வாங்கப் போகுமுன், அம்பாள் தரிசனம் செய்து வரக் கோயிலுக்குள் நுழைந்தான்.

முன் மண்டபத்தில் ஏதோ கல்யாணக் கூட்டம். கூர்ந்து நோக்கினான். மணமேடையில் உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது.

"அடிப்பாவி... வேலம்மாளா... நீயா... முன்னாலேயே கல்யாணமானவளாச்சே... மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை ஏமாற்றத் திட்டம் போட்டிருக்கியா... இப்பவே உன் குட்டை உடைக்கிறேன் பார்..." என்று கருவிக் கொண்டே மாப்பிள்ளையைத் தேடினான். மேலும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. தன் அண்ணன் மகளை வேண்டாம் என்று ஒதுக்கிய அவன் முறைப் பிள்ளை — கந்தசாமிதான்!

கந்தசாமியைப் பரபரவென்று சுற்றுப் பிராகாரப் பக்கம் அழைத்துப் போனான் மன்னாதி. அதற்குள் மணப் பெண் மிரள, கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

மன்னாதி சொன்னதை யெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட மாப்பிள்ளை கந்தசாமி நிதானமாகச் சொன்னான்:

''மாமா...! பெரம்பலூர்ச் சந்தைக்கு வந்து உங்ககிட்ட மாட்டிச் சீரழிஞ்சு போகாம தப்பிச்ச கதையை, ஆத்தூர் சந்தையிலே பார்த்தப்ப வேலம்மா சொல்லி அழுதா. அடிக்கடி வேலம்மாளைச் சந்தையிலே சந்திக்கிறதோட சரி... மத்தபடி எந்த தப்பு தண்டாவும் இல்லே... ஆனா நான் உங்க ஒறவுக்காரன்னு அவளுக்குத் தெரியாது.... ஊரு பேரு சொன்னதுக்கப்புறம் நானே ஊகம் பண்ணிக்கிட்டேன். நீங்க அவகிட்ட நடத்துக்கிட்டதுக்குத் தண்டனை ஒத்துக்கிட்டு, இவளைக் கட்டறதா முடிவுக்கு வந்தேன்...

''நீங்க நினைக்கிற மாதிரி வேலம்மா மூன்னாடியே கல்யாணம் ஆனவ இல்லே...

''நெருக்கடியான நேரத்திலே ஆண்டவன் பளிச்சுன்னு அவளுக்கு ஒரு யோசனையைத் தோண வைச்சான். அதன்படி அவ செய்து தப்பிச்சுக்கிட்டா... உங்க புத்தியும் அதுக்கு அனுகூலமா இருந்துச்சு...'' என்றவன் ஒரு நிமிஷம் பேச்சை நிறுத்தினான்.

குழம்பிப் போன மன்னாதி, ''என்னப்பா சொல்றே நீ?'' என்றான். தொடர்ந்தான் கந்தசாமி.

''ஊருக்கு நியாயம் பேசுற ஆளில்லையா நீங்க? அடுத்தவன் பெண்டாட்டின்னு வம்பு டண்ண மாட்டீங்கன்னு நெனைச்சு, விற்கிறதுக்கு வச்சிருந்த தாலிச் சரட்டை எடுத்து இருட்டிலே தனக்குத் தானே கட்டிக்கிட்டா. பிறகு காடா விளக்கை ஏத்தி, அது தெரியற மாதிரி பிடிச்சு, உங்க நியாயம் பேசற 'டயலை'ச் சொல்லியிருக்கா... ஆண்டவன் ஒங்க புத்தியை நேராக்கி வைச்சுட்டான்... இதான் நடந்த கதை...சரி சரி, முகூர்த்த நேரம் நெருங்கிடுச்சி... வாங்க... வாங்க... பொறவு பேசிக்கலாம்....''

மன்னாதி கல்யாண மேடைக்கு முன்புறம் அமர்ந்துவிட்டான்.

தாலி கட்டி முடிந்ததும் எல்லோரும் மொய் எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

சம்பிரதாயத்துக்காகப் பெண்ணுக்கு மாமன் மொய் எழுத வேண்டும். கூப்பிட்டுப் பார்த்தார்கள். யாராவது இருந்தால் தானே வருவார்கள்?

மடியைத் தொட்டுப் பார்த்தான் மன்னாதி. மாடு வாங்கப் போகும் பணம் கனத்துக் கொண்டிருந்தது. அய்யரிடம் போய்க் கொடுத்தான்.

''பொண்ணுக்கு மாமன் மொய் ஆயிரத்தி ஒண்ணு... இந்தாங்க... ஒறக்கச் சொல்லி ஏதிவிடுங்க...''

மொய்யில், மெய் வெளிப்பட்டதாக உணர்ந்த வேலம்மாள், தன் மெய் சிலிர்க்க முதல் முதலாகத் தலையை நிமிர்த்தி மன்னாதியைப் பாசத்தோடு நோக்கினாள்.

அவளோ, எதிரே சந்நிதானத்தில் கற்பூர ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருந்த அம்பாளை விழிநீர் மல்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

கைகடிகாரத்தில் லேட்டஸ்ட்!

டிஜிடால் —

நேரம்:

மணி, நிமிஷம், செகண்ட்:

ஸ்டாப் வாட்ச்:

அலாரம்:

காலண்டர்: மாதம், தேதி:

டுவல் டைம்: அதாவது இந்திய நேரம் மட்டுமின்றி அதே கணத்தில் அயல் நாடு ஏதோ ஒன்றில் என்ன நேரமென்று காணலாம்.

இவ்வளவும் போதாதென்று இப்போது கை கடிகாரத்தில் கால்குலேட்டர்!

காஸியோ ஜப்பானிய கடிகார நிறுவனத்தின் விளம்பரத்திலிருந்து



விசிட்டருக்கு விசிட்டர்கள்!



⌘ இடமிருந்துவலமாக: உஷா, அனந்த், சம்பத்குமார்.

(விசிட்டர் ஆசிரியர் அனந்தை சம்பத்குமார், உஷா இருவரும் சந்திக்கிறார்கள்.)

உஷா: தமிழ்ப் பத்திரிகையான விசிட்டருக்கு ஏன் ஆங்கிலப் பெயர்?

அனந்த்: அகராதியைப் புரட்டிப் பாருங்கள். விசிட்டர் என்றால் மேன்மையானது, தகுதி உடையது என்று அர்த்தம். விசிட்டர் என்றால் மேன்மையுடையவர் என்று பொருள் கொள்ளலாமே! அதற்காகத்தான் எங்களுடைய பத்திரிகைச் சின்னத்தைக் கூட உயர்ந்த மனிதராகவே படைத்திருக்கிறோம். இது ஒரு சமாதானமாக இருந்தாலும் நான் ஏற்கனவே பணியாற்றி வந்த 'துக்ளக்'கில் விசிட்டர் என்ற பெயரிலே பல கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறேன். பெயர் பிரபலமானதால் பத்திரிகைக்கு அதே பெயரைச் சூட்டினேன்.

சம்பத்: இப்படியே ஒவ்வொருத்தரும் தங்கள் பெயரிலேயே பத்திரிகை ஆரம்பித்துக் கொண்டிருந்தால்....?

அனந்த்: பெயர்தான் அப்படியே தவிர என் பத்திரிகை ஒன் மேன் ஷோ அல்ல. என்னுடைய பத்திரிகையை ஒரு பொது மேடையாகத்தான் வைத்திருக்கிறேன். வித்தியாசமான பெயரைச் சூட்டிவிட்டுப் பத்திரிகையை ஒன் மேன் ஷோவாக வைத்திருப்பதை விட இது நல்லதுதான். இது ஒரு வித்தியாசமான பத்திரிகை.

சம்பத்: அப்படி என்ன வித்தியாசமாகச் செய்கிறீர்கள்?

அனந்த்: தமிழ் நாட்டில் ஒரு பார்முலாவிலேயே பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. கதை, கட்டுரை, சினிமா விமர்சனம் இப்படி வழக்கமான பகுதிகள். அதை உடைத்து ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவர் துக்ளக் ஆசிரியர் சோ. இதுமாதிரி பத்திரிகைகள் தமிழ் நாட்டுக்கு அதிகம் தேவை என்று நான் நினைக்கிறேன். Investigative Journalism.

உஷா: நடுநிலைமைப் பத்திரிகை என்று சொல்கிறீர்களே அதைக் கடைசிவரைக்கும் காப்பாற்ற முடியுமா?

அனந்த்: ஏன் முடியாது? 'விசிட்டர்' ஒரு விவாத மேடை. நாலு பேருடைய கருத்துக்களையும் பிரகரித்து வருகிறேன். சில சமயம் உள்ளதைச் சொல்லும்போது கட்சி வர்ணம் பூசப்படலாம். ஆனால் வாசகர்களுக்குத் தெரியும் உண்மை என்னவென்று.

சம்பத்: சமுதாயக் குறைபாடுகள், நிறுவனங்களின் குறைபாடுகள், சில சமயம் தனி மனிதரின் குறைபாடுகளைக் கூடச் சொல்கிறீர்கள். இதனால் இடைஞ்சல் ஏதாவது இருந்ததா?

அனந்த்: இப்படி ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறோம் என்று தெரிந்த உடனேயே மிரட்டல்கள் வர ஆரம்பித்து விட்டன. ஒவ்வொரு இதழ் வெளிவந்ததும் பயமுறுத்தல்கள் இருக்கும். அவற்றை எனக்குக் கிடைத்த வெற்றியாகத்தான் நினைக்கிறேன்.

உஷா: பிரச்னைகளை யார் வேண்டுமானாலும் எழுதிவிடலாம். குறைபாடுகளை எடுத்துக் காட்டிவிடலாம். ஆனால் தீர்வு காண வேண்டாமா?

அனந்த்: இதுவரை வெளிவந்த இதழ்கள் 15. அதன் மூலம் தீர்வு காணப்பட்ட பிரச்னைகள் 25. அரசாங்கமே விசிட்டரை நல்ல எண்ணத்தோடுதான் பார்க்கிறது. இதைத் தவிர பல்வேறு பிரச்னைகளை விசிட்டரில் பிரகரிக்காமலேயே இரு தரப்பினரையும் சந்திக்க வைத்து அவர்களுக்குள்ளே சமாதானம் செய்து அனுப்பியிருக்கிறோம்.

சம்பத்: ஏதோ சமுதாயப் பணியாக நடத்துவது போல் காட்டிக் கொண்டாலும் வியாபார நோக்கில்தானே சினிமா எல்லாம் பிரகரிக்கிறீர்கள்?

அனந்த்: சினிமாவும் சமுதாயத்தில் ஓர் அங்கம்தானே? நாங்கள் கிசுகிசு எழுதுவ

இல்லை. சினிமா உலகப் பிரச்னைகளை விவாதிக்கிறோம்.

உஷா: பெண்களைக் கவருகிற மாதிரி ஒரு அம்சமும் உங்கள் பத்திரிகையில் இல்லையே.

அனந்த்: நான் ஒவ்வொருவரையும் கவருவதற்காக விசிட்டரில் பகுதி என்று வைத்துக் கொள்வதில்லை. சமூகப் பிரக்ஞை உள்ள வாசகர்களை உருவாக்கவே விரும்புகிறேன். அவர்களுக்காகவே விசிட்டர்.

உஷா: அரசியல் கட்சி சாதிக்க முடியாததை ஒரு தனிப் பத்திரிகை சாதிக்க முடியுமா?

அனந்த்: அரசியல் கட்சி என்று சொல்லும் போதே அதற்கு ஓர் உள் நோக்கம் கற்பிக்கப்பட்டு விடுகிறது. அதையே ஒரு பொறுப்புள்ள பத்திரிகை செய்தால் பிரச்னையின் இரண்டு பக்கமும் தெரிகிறது. அநேகமாகத் தீர்வு காண முடியும்.

உஷா: ஸார்! என் கேள்விகள் உங்களை Investigate பண்ணத்தானே ஒழிய உண்மையில் சிந்திக்கத் தூண்டும் உங்கள் பத்திரிகையால் கவரப்பட்டுத்தான் உங்களைச் சந்திக்க வந்தேன். விசிட்டருக்கு என் பாராட்டுக்கள்!

சம்பத்: நீங்கள் கொடுக்கும் பல விஷயங்களை எப்படிச் சேகரிக்கிறீர்கள் என்று யோசித்து மலைத்ததுண்டு. வாழ்த்துக்கள்.

அனந்த்: ரொம்ப நன்றி. வணக்கம்.

உரையாடல் தொகுப்பு: **''சலன்''**

புகைப்படம்: **ஜெயராமன்**

டாக்டர் பேசுகிறர்!

தேவையற்ற பீதிகள்!

ஒரு நாள் காலையில் சுமார் பத்து மணி இருக்கும். நோயாளிகளை டாக்டர் பார்த்துக் கொண்டிருந்தபோது அவருடைய நெருங்கிய நண்பர் உள்ளே நுழைந்தார்.

''டாக்டர்! டாக்டர்! உடனடியாகப் புறப்படுங்கள். மிகவும் கவலைக்கிடமான நிலையில் நோயாளி இருக்கிறர்'' என்றார்.

''இது என்ன? என் பழக்கம் உங்களுக்குத் தெரியாதா? நோயாளியை இங்கு அழைத்து வருவதற்கென்ன?'' என்றார் டாக்டர்.

''நோயாளி கல்யாண மாப்பிள்ளையப்பா. மயக்கமாக விழுந்து விட்டார். முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது'' என்றார் அவர்.

நண்பரின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் டாக்டர் போய்ப் பார்த்தார். ''கவலைப்படும்படி ஒன்றும் இல்லை. இது வழக்கமாக வரும் காக்காய் வலிப்புத்தான்'' என்று கூறித் திரும்பினர். அவர் கூறிய வார்த்தைகள் பெண் வீட்டாரைக் கலக்கி விட்டது.

பெண் வீட்டாருக்குத் தங்களை சம்பந்தி மனிதர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்ற மனக் கசப்பு. ஏதோ ஒப்புக்குக் கணவனும் மனைவியும் குடித்தனம் ஆரம்பித்தார்கள்..

சுமார் இரண்டு வருடங்களுக்குப் பிறகு டாக்டர் அந்தப் பெண்ணைச் சந்தித்தபோது, ''என்னம்மா குழந்தை இருக்கிறதா? என்ன பெயர்?'' எனச் சாதாரணமாகக் கேட்டார்.

''என்ன டாக்டர் இப்படிக் கேட்கிறீர்கள்? என் திருமணத்தன்று நீங்கள்தானே அவரை வந்து பார்த்து மருந்து கொடுத்தீர்கள்?'' என்றாள் அவள்.

''அதனுல் என்ன? குழந்தை பிறக்கக் கூடாது என்று ஒன்றும் இல்லையே?'' என்றார் டாக்டர். அவள் சொன்னதிலிருந்து அவர்கள் மணவாழ்க்கை நடத்தவில்லை என்பதை டாக்டர் புரிந்து கொண்டார்.

அவள் கணவரை வரச் சொல்லி அவருடன் டாக்டர் பேசினர். நன்றாகப் படித்துவிட்டு நல்ல பதவியில் இருக்கும் இளைஞர் தம் வியாதியையே நினைத்துக் கொண்டு அது தீரவேண்டும் என்ற ஒரே நோக்கில் அடிக்கடி மருந்து சாப்பிடுவதால் பாதி நேரமும் மயக்கத்தில் இருக்கிறர்; மனைவியுடன் வாழ வேண்டும் என்ற நினைப்பே இல்லை என்று டாக்டர் கண்டார்.

''எதற்கு டாக்டர் குழந்தை? அதுவும் காக்காய் வலிப்பால் பாதிக்கப்படும்'' என விரக்தியாகக் கூறினர் அந்த இளைஞர்.

''அது தவருன அபிப்பிராயம். நீங்கள் எல்லோரையும் போல் இல்லற வாழ்க்கை நடத்துங்கள்'' எனக் கூறி அவரைப் பரிசோதித்துச் சில மருந்துகளை எழுதிக் கொடுத்தார் டாக்டர்.

இந்தச் சம்பவத்தை விவரித்த டாக்டர் பின்வருமாறு முடித்தார்:

''அவர்களுக்கு நல்ல ஆரோக்கியமான குழந்தையும் பிறந்திருக்கிறது. வைத்தியரை அணுகி ஆலோசனை கேட்டிருந்தால் இரண்டு ஆண்டுகளை அவர்கள் வீணடித்து இருக்க வேண்டாம். தாங்களே மனத்தில் வளர்த்துக் கொண்ட அனுவசிய பீதியால் அவதிப்பட்டிருக்கிறர்கள்.

''காக்காய் வலிப்போ, சர்க்கரை வியாதியோ, ரத்த அழுத்தமோ, இதய பலவீனமோ, தங்கள் குழந்தைகளுக்கும் வரும் என நினைப்பதும் அதற்காக இயல்பான இல்வாழ்க்கையைத் தவிர்ப்பதும் மருத்துவ வளர்ச்சி பற்றி அறியாததால்தான்.

''எந்த வியாதியும் இரண்டு பேருக்கும் இருந்தால்தான் குழந்தைக்கு வர வாய்ப்பு உண்டு. இந்த மாதிரி வியாதி உள்ளவர்கள் டாக்டரிடம் ஆலோசனை கேட்டுத் தகுந்த வைத்தியம் பார்த்துக் கொண்டு எல்லோரையும் போல் இல்வாழ்க்கை நடத்தலாம். குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.''

ஆலோசனை: டாக்டர் **சௌரிராஜன்**


பேட்டி: **குயிலி ராஜேஸ்வரி**





CASPR-728-172 TAM





⌘ விவேகாநந்தா கல்லூரியில் வானசாஸ்திர பிரிவு (astronomy) இருக்கிறது. அண்மையில் நிகழ்ந்த முழு சூரிய கிரகணத்தின் பல்வேறு நிலைகளையும் அவர்கள் திறம்படம் புகைப்பட மெடுத்தார்கள்—

சென்னை விவேகானந்தா கல்லூரி. க்விஸ் போட்டியில் ஆறு மாணவர் பங்கேற்றனர். உதவிப் பேராசிரியர் ஆர். அனந்தன் அவர்கள் 'க்விஸ் மாஸ்டராக' இருந்து செயலாற்ற, 'கல்கி'யின் கேள்விகளைக் கொண்டு போட்டி தொடங்கிற்று.

பங்கேற்ற மாணவர்கள்:

1. எம். மத்வராஜ்
2. ஜி. ஸ்ரீதர்
3. ரகுராமன்
4. வி. ரமேஷ்
5. அசோக் ஸ்ரீனிவாசன்,
6. எஸ்; வி. நாதன்

கேள்விகள்

1. Cubism என்றால் என்ன? அதனைப் பிரபலப்படுத்தியவர் யார்? (அசோக் விடையளித்தார்.)
2. TELEX என்பதன் விரிவு என்ன? (சரியான விடையைக் கூறியவர் ரமேஷ்)
3. A Fragile Man in Literature எனும் புத்தகத்தை எழுதியவர் யார்? (பார்வையாளரில் ஒருவர் விடையளித்தார்.)
4. ஏழு வருடப் போர் (Seven years war) எந்த நாடுகளுக்கிடையேநடைபெற்றது? (பார்வையாளரில் ஒருவர் விடையைக் கூறினார்.)

⌘ மத்வராஜ் பரிசு பெறுகிறார்
⌘ குவிஸ் மாஸ்டரும் உதவிய விரிவுரையாளரும் போட்டியில் பங்கேற்றவர்களும்



5. 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் கொலை செய்யப்பட்ட தென் கொரியாவின் ஜனாதிபதி யார்?
(மத்வராஜ் சரியான விடையைக் கூறினார்.)

6. சுவிட்ஜர்லாந்தின் தேசிய தினம் எந்நாளில் கொண்டாடப்படுகிறது?
(எவரும் விடையளிக்கவில்லை)

7. கம்யூனிஸம் என்ற சொல் ரஷ்யாவில் இன்னொரு விதமாகவும் அழைக்கப்படுகிறது. என்னவென்று கூற முடியுமா?
(மத்வராஜ் பதிலளித்தார்.)

8. மூளை ஜுரம் ஒரு தொற்று நோய் போல் கடையநல்லூரில் பரவுவதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் காணப்பட்டது. மூளை ஜுரத்துக்கு மருத்துவப் பெயர் என்ன என்று கூற முடியுமா?
(மத்வராஜ் சரியான விடையைக் கூறினார்.)

9. இரண்டு தினங்களுக்கு முன்பு பிரகாஷ் படுகோன் நிகழ்த்திய சாதனை என்ன? (போட்டி நடந்த தேதி 15–3–80)
(சரியான விடையை ஸ்ரீதர் கூறினார்.)

10. 'எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ சிந்தாகுலமானவை தீர்த்து எனை யாள்!' இவ்வரிகள் எதில் வருகின்றன?
(பார்வையாளரில் ஒரு மாணவர் கூறினார்.)

11. இந்தியாவில் தயாரான முதல் பேசும் சினிமாப் படம் எது?
(அசோக் சரியான விடையைக் கூறினார்)

12. வாரணாசியில் முதல் இந்தியப் பத்திரிகையாளர் மகாநாடு நாளை நிகழவிருக்கிறது. எந்த விசேஷத்தைக் கொண்டாடுவதற்காக இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது என்று கூற முடியுமா?
(எவரும் விடையளிக்கவில்லை.)

13. ZIMBABWE எந்நாளிலிருந்து சுதந்திரம் பெறுகிறது. அதன் முதல் பிரதம மந்திரி யார்?
(எஸ். வி. நாதன் விடையைக் கூறினார்.)

14. Blitzkrieg என்றால் என்ன?
(ரமேஷ் சரியான விடையைக் கூறினார்.)

15. பின்லாந்து நாட்டின் நாணயம் எது?
(ரமேஷ்தான் இதற்கும் சரியான விடையைக் கூறினார்.)

16. அக்டோபர் 24ம் தேதியின் முக்கியத்துவம் என்ன?
(சரியான விடையைக்கூறியவர் ஸ்ரீதர்.)

17. 'எல்லைப்புற காந்தி' என்று அழைக்கப்படுபவர் யார்?
(மத்வராஜ் விடையளித்தார்.)

18. எத்தியோப்பியாவின் தலைநகரம் எது?
(அசோக் சரியான விடையைக் கூறினார்.)

19. 'மூர்' என்று எவர் அழைக்கப்படுகின்றனர்.?

20. Semibombla என்பதன் விரிவு என்ன?
(அசோக் சரியான விடையைக் கூறினார்)

21. கொய்னா. அணைத்திட்டம் எம்மாநிலத்தில் உள்ளது?
(மத்வராஜ் சரியான விடையைக் கூறினார்.)

22. சமுத்திரத்தின் ஆழத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் என்ன?
(மத்வராஜ் சரியான விடையைக் கூறினார்.)

23. தமிழகத்தில் மிசர்வ் வங்கிக்கு எத்தனை கிளைகள் உள்ளன?
(இரண்டு. மூன்று என்று விடைகள் வந்தன. சரியான விடையைக் கூறியவர் மத்வராஜ்.)

24. Laws of planetary Motion ஐக் கண்டுபிடித்தது யார்?
(ராகவன் சரியான விடையைக் கூறினார்)

25. Bale out என்றால் என்ன?
(ராகவன்தான் இதற்கும் விடையளித்தார்.)

26. ஓய்வு பெற்ற பிறகு இந்திய ஜனாதிபதிக்கு அளிக்கப்படும் 'பென்ஷன்' எவ்வளவு?
(எவரும் விடையளிக்கவில்லை.)

27. சீக்கியர்களின் கடைசிக் குரு யார்?



✖ பார்வையாளரில் ஒரு பகுதி

(ராகவன் சரியான விடையைக் கூறினார்)

28. ஏழாவது நிதிக் கமிஷனின் தலைவர் யார்? (இக்கேள்விக்கான விடையைக் கூறியவர் ஸ்ரீதர்.)

29. 1977ம் ஆண்டுக்கான ஞானபீட பரிசைப் பெற்றவர் யார்? (அசோக் சரியான விடையைக் கூறினார்.)

30. 'கல்யாண் சோனா' என்றால் என்ன? (இக் கேள்விக்கான விடையை அளித்தவர் அசோக்.)

க்விஸ் போட்டியில் கல்கியின் ரூ. 50 பரிசைப் பெற அசோக் ஸ்ரீனிவாசனுக்கும் மத்வராஜுக்கும் இடையே கடுமையான போட்டி. முடிவில் மத்வராஜ் பரிசைத் தட்டிச் சென்றார். உதவிப் பேராசிரியர் அனந்தன் பரிசை வழங்கினார்.

ஆர். சாரங்கன், எஸ். வரதராஜன், என். சாய்ராம், ஜி. ரவி சங்கர், எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்க ஒரு நகைச்சுவை நாடகத்தை மாணவர்கள் நடத்திக் காட்டினர். பிறகு 'ஊமைப் புதிர்' போட்டி நடந்தது. அப்போட்டியில் மூன்று குழுக்கள் போட்டியிட்டன. எஸ். வரதராஜன், சாய்ராம், ரவிசங்கர் ஆகியோரைக் கொண்ட குழு வெற்றி பெற்றது.

விடைகள்

(1) ஜியோமிதி கணித பாணியில் கண் பார்க்கும் வடிவங்களை அடுத்தடுத்து அமைக்கும் புத்தலை ஓவியம். பாப்லோ பிக்காஸோவால் ரொம்பவும் பிரபலமடைந்தது. (2) Teleprinter Exchange (3) ஆண்ட்ரீ மால்ரோ. (4) இங்கிலாந்தும் புரஷ்யாவும் (வட ஜெர்மனி) ஒரு பக்கமும், பிரான்ஸும் ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் மறு பக்கமுமாகச் சண்டையிட்டன. (5) பார்க் — கம் — ஹீ. (6) ஆகஸ்டு முதல் தேதி. (7) போல்ஷிவிஸம் (8) என்ஸைபலைடிஸ். (9) மார்ச் 13ம் தேதி பிரகாஷ் ஸ்வீடன் பாட்மிட்டன் பொது விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றார். (10) கந்தர் அநுபூதி. (11) அலம் ஆரா. (12) இந்தியச் செய்திப் பத்திரிகை தோன்றிய இருநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக. (13) 18—4—80. ராபர்ட் முகாபி. (14) மின்னல் வேகப் போரைக் குறிக்கும் ஜெர்மானிய வார்த்தை. (15) மராக்கா. (16) ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்படுகிறது. (17) கான் அப்துல் கபார் கான். (18) அட்டிஸ் அபாபா. (19) இஸ்லாமைத் தங்கள் மதமாகக் கொண்டு வடமேற்கு ஆப்பிரிக்காவில் வாழ்வோர் (20) Scheme of Economists for Monetary Immobilisation through bond medallions and Blocked Assets. (21) மஹாராஷ்டிரா, (22) Fathometer (23) ஓரே ஒரு கிளை. (24) கெப்லர் (25) பாராசூட்டின் உதவி கொண்டு விமானத்திலிருந்து குதிப்பது. (26) ஆண்டொன்றுக்கு ரூ. 15000. (27) குரு கோவிந்த் சிங். (28) ஜே. என். ஷிலட். (29) ஷிவ்ராம் காரந்த். (30) அதிக விளைச்சலை அளிக்கும் இந்திய கோதுமை வகை.

தொகுப்பு: நாயகன்


புகைப்படங்கள்: மன்னை மூர்த்தி

இருங்கள்...
உங்கள் பணத்தை எடுத்துச்செல்ல அதிக பாதுகாப்பும், வசதியும் கொண்ட வழியொன்றை நாங்கள் சொல்கிறோம்.



பயணம் செய்யுகையில் பாதுகாப்போடு இருத்தல் தேவை. ஸ்டேட் பாங்க் டிராவெலர்ஸ் செக்குகளை எடுத்துச் செல்லுங்கள்.

- ரூ. 50, ரூ. 100, ரூ. 500 ஆகிய மதிப்புகளில் மட்டுமின்றி ரூ. 1000 மதிப்பிலும் இப்போது கிடைக்கின்றன—ஸ்டேட் பாங்க் மற்றும் அதனைச் சார்ந்த பாங்குகளின் 7500க்கும் மேற்பட்ட அலுவலகங்களில்.
- வாங்கவோ, பணமாக மாற்றவோ கட்டணம் எதுமில்லை. உங்கள் கையெழுத்தைப்போட்டாலே போதும், பணம் கையில்.
- காலவரையறையின்றிச் செல்லுபடியாகும்.
- உங்கள் டிராவெலர்ஸ் செக்குகள் இழந்து போனால் கூட, வழங்கிய அலுவலகத்திலிருந்து பணம் திரும்பப் பெறலாம்.
- இந்தியாவிலெங்குமுள்ள 25,000க்கு மேற்பட்ட தலங்களில் (out lets) பணமாக மாற்றிக்கொள்ளக் கூடிய எமது டிராவெலர்ஸ் செக்குகள் மூலம், நீங்கள் உங்கள் ரயில் கட்டணம், ஹோட்டல் பில்கள், ஷாப்பிங் பில்கள் ஆகியவற்றுக்குப் பணம் கொடுக்கலாம்.



ஸ்டேட் பாங்க்
இந்தியாவின் மிகப் பெரிய பாங்க்

ஸ்டேட் பாங்க் பயணக் காசோலைகள்—
எவருமே திருட முடியாத பணம்

SB 5338



ஒரு கனவு ஒரு நிஜம்

சைக்கியாட்ரிஸ்ட் வசீகரனை மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்த — அடர்த்தியாய் இருட்டிக் கொண்டு வந்த —அந்த மாலை நேரத்தில் அவரது கிளினிக்கில் வைத்து அவன் பார்க்கப் போயிருந்தபோது, அவர் சாத்திய கதவுக்குப் பின்னால் சக்கரமாய்ச் சுழலும் ஊதா நிற ஒளி வட்டத்தின் பின்னணியில் நின்றிருந்தார்.

அவருடைய ரிசப்ஷனிஸ்ட் பதினெட்டு வயதில் ஸ்ரீதேவியை நினைவுபடுத்தினாள். இரு புருவங்கள் வில்லாக வளைந்து அவசர அவசரமாக சங்கமிக்கும் நெற்றியின் சந்தனப் பரப்பில் சின்னதாய் — வட்டமாய்ப் பொட்டு வைத்துக் கொண்டு சிக்கனமாய்ப் புன்னகைத்தபடி ''டாக்டர் ஈஸ் இன்... ப்ளீஸ் பீ ஸீட்டட்...'' என்ற வார்த்தைகளுக்குத் தேன் தடவி அவனை நோக்கி வீசினாள்.

உசிலை மணியின் சைஸுக்குச் செய்த மாதிரி இருந்த அந்த நாற்காலியில் அவளைப் பார்த்துக் கொண்டே அவன் உட்கார்ந்தான். மானசீகமாய்க் காதலிக்க ஆரம்பித்தான்.

அரை மணி நேரம் கழித்து—

டாக்டர் வசீகரன் வெளியே வந்தார். டர்க்கி டவலால் முகத்தை அழுந்தத் துடைத்தபடி — காத்திருந்த பேஷண்டுகளை ஆவலாய் மனசுக்குள் எண்ணிக் கொண்டே தம் கன்ஸல்டிங் அறைக்குப் போனார்.

மறுபடியும் அரை மணி நேரம் அந்த ரிஸப்ஷனிஸ்டை மனசுக்குள் காதலித்து — பீச்சுக்குப் போய்... சமுத்திரக் காற்றைச் சுவாசித்து .... சினிமாவுக்குப் போய் அவளை வாசம் பிடித்து .... துணிந்து 'ஓட்டல் அறை எடுத்து... அவள் சிணுங்க... சிணுங்க சாத்திய அறைக்குள் அவன் அவளில் பரவி, சேலையை உருவி... பிளவுஸைத் தளர்த்தி- பிராவின் கொக்கியை நிமிண்டுகையில்....

''ஸார்... இஸ் ஈஸ் யுவர் டர்ன்... டாக்டர் ஈஸ் வெயிட்டிங் ஃபார் யூ....'' ரிசப்ஷனிஸ்ட் கேர்ள் அவனருகே குனிந்து பவ்யமாய்ச் சொன்னாள்.

அவன் எழுந்தான். திரைச் சேலையைத் தள்ளிக்கொண்டு டாக்டரின் அறைக்குள் நுழைந்தான். செவ்வக வடிவ ஸ்டீல் மேஜைக்குப் பின்னாடி — ஆரோக்கியமான முகத்தோடு பணம் பறிக்கும் ஒரு ரெடிமேட் புன்னகையோடு டாக்டர் வசீகரன் அவனுக்காகக் காத்திருந்தார்.

''குட் ஈவினிங் டாக்டர்....''

''குட் ஈவினிங்... உட்காருங்க.''

உட்கார்ந்தான். வசீகரன் தலையைச் சாய்த்து அவனைப் பார்க்க — அவன் மெலிதான குரலில் பேசினான்.

''டாக்டர் என்னோட ப்ராப்ளத்தைச் சொல்லட்டுமா?''

''பிராப்ளம் இருக்கட்டும்... முதல்ல உங்களைப் பத்திச் சொல்லுங்க... ஐ மீன் யுவர் பயோடேட்டா....''

அவன் தலையைக் குனிந்தபடி மேஜைக் கண்ணாடியைப் பார்த்தபடி சொன்னான்:

''டாக்டர்... என் பேர் நீலேஷ்... நான் ஒரு சிவில் எஞ்சினீரா ஒரு பிரைவேட் கன்சர்ன்லே இருக்கேன்... ஆர்க்கிடெக்ட் படிச்சிருக்கேன்.... வயது இருபத்தஞ்சு... நோ மாரியேஜ்....''

வசீகரன் கையமர்த்தினார். ''போதும்! இனி பிராப்ளத்தைச் சொல்லுங்கள்...''

அவனுடைய கண்கள் எங்கோ தொலைவில் நிற்க — உதடுகள் மட்டும் மெல்ல அசையப் பேசினான்.

''டாக்டர்... என்னோட ப்ராப்ளம் கொஞ்சம் வித்தியாசமானது.... நீங்க இதுவரைக்கும் அனுபவிச்சிருக்க முடியாத கேஸ் இது. உங்க படிப்பை முழுசா முதன் முதலா பயன் படுத்தப் போற கேஸ் இது... டாக்டர்! தினமும் ராத்திரி ஒரு மணிக்கு... சரியா ஒரு மணிக்கு ஒரு கனவு வருது... எல்லார்க்கும் மாதிரி இது சாதாரண கனவு இல்லே.... கனவோட பல படிகள்... ஒரு சினிமாவை முழுசா பார்க்கிறதுக்குப் பதிலா தினமும் தியேட்டருக்குப் போய் ஒவ்வொரு சீனு பார்த்தா எப்படி இருக்கும்.. அதே மாதிரிதான் இந்தத் தொடர் கனவும் தினமும் வருது....''

டாக்டர் வசீகரன் நெற்றியைச் சுருக்கி அவனைப் பார்த்தார்.

அவன் தொடர்ந்தான்.

''டாக்டர் மூணு மாசத்துக்கு முன்னாடிதான் இந்தக் கனவோட முதல் சீன் ஆரம்பமாச்சு... ஒரு பழைய கட்டிடத்தை ஒரு நூறு பேர் அசுரத்தனமா இடிச்சுத் தள்ளிட்டிருக்காங்க... மேலே இருந்து கல்லும் மண்ணும் சரமாரியாக் கொட்டுது... திடீர்னு ஒரு செங்கல் அளவுக்குக் கருங்கல் ஒண்ணு மேலேயிருந்து 'சர்'ன்னு இறங்கிக் கீழே நின்னுட்டு வேடிக்கை

பார்த்துக்கிட்டிருக்கிற பள்ளிக் கூடப் பையன் தலைமேல் 'நச்'சென்னு விழுந்து... அவ்வளவுதான்... முழிப்புத் தட்டிடுச்சு...''

''ரொம்ப சாதாரண கனவுதான்....'' வசிகரன் அவன் பிரச்னையைச் சுலபமாகப் பார்த்தார். உதட்டில் கொஞ்சம் புன்னகையை நிற்க வைத்துக் கொண்டார்.

''இல்லே டாக்டர்... இது சாதாரணக் கனவு இல்லே.... மறு நாள் காலையில் நான் ஆபீசுக்குப் போயிட்டிருக்கப்ப ரெனவிபிரவுன் ரோட்டின் மூலையில் நின்றிருந்த ஒரு பழைய காலக் கட்டிடத்தை நான் கனவில் பார்த்த மாதிரியே நிறையப் பேர் இடிச்சுத் தள்ளிக் கிட்டிருந்தாங்க.... நான் கனவில் பார்த்த அதே கட்டிடத்தின் அமைப்பு... அதே மாதிரி ஜன்னல்... கதவு... அதே மாதிரி கல்லும் மண்ணும் நிறையக் கொட்டுது... கட்டிடத்துக்குக் கீழே ஒரு பள்ளிக்கூடத்துப் பையன் வேடிக்கை பார்த்துட்டு... — எனக்குச் சரேலென மண்டையில் கனவின் பொறி தட்ட அந்தப் பையனை நோக்கிப் பாய்ந்து அவனைவிலக்கு வதற்குள்-கருங்கல் ஒன்று அவன் தலையில் 'நச்'ன்னு விழுந்து... அவன் சிவப்பா கீழே சாஞ்சான்...''

வசிகரன் சலனமில்லாமல் அவனைப் பார்த்தார். மெல்லிய குரலில் சொன்னார்,

''ப்ரொஸீட்....''

அவன் தொடர்ந்தான். ''மறு நாள் ராத்திரி கனவோட ரெண்டாம் சீன்... அதே கட்டிடம்... முழுசுமா இடிச்சுட்டாங்க... அஸ்திவாரச் சுவர்கள் மட்டும் நிக்குது... அதைச் செதுக்கிட்டு அதுக்கு மேலே கருங்கல்லே வெச்சுக் கட்டிடத்தை எழுப்புறாங்க. இந்தத் தடவை நிறையச் சித்தாளுங்க... ஏறிப் போகச் சாரம் போட்டு...''

டாக்டர் வசிகரன் குறுக்கிட்டார். ''மறு நாள் காலையில் நீங்க ஆபீசுக்குப் போறப்ப அதே மார்திரியான காட்சியை அந்தக் கட்டிடத்தில் பார்த்தீங்களா?''


''ஆமா டாக்டர்... துளிக்கூட பிசிறில்லாமல் பார்த்தேன்.... போட்டோ எடுத்த மாதிரி அதே காட்சிகள் ....''

''ம்... அப்புறம் சொல்லுங்க....''

''மூணாவது நாள் ராத்திரி... திரும்பவும் அதே கட்டிடம்... சிவப்பு நிறத்திலே புதுசா ஒரு கிரேன். கல் உடைக்கிற மெஷின்... சிமெண்ட் கலவை... குழந்தைக்குப் பால் ஊட்டற சித்தாளு... பீடி குடிக்கிற மேஸ்திரி.. காக்கித் தொப்பி போட்டுக்கிட்டு, சிவப்பா ஒரு என்ஜினியர்... மறு நா காலேல ஸ்பஷ்டமா அதே காட்சிகளைப் பிசிறில்லாமல் பார்த்தேன்...''

நெற்றியைத் தேய்த்தார் வசிகரன். ''சரி இதிலென்ன பிராப்ளம் உங்களுக்கு?''

அவன் வறட்டுத்தனமாய்ப் புன்னகைத்தான். ''டாக்டர், இந்த மூணு மாசமா நான் கனவிலே கண்ட அந்தக் கட்டிடத்தோட. ஒவ்வொரு பிரேமும் அப்படியே நிஜமா உருவாயிட்டே வந்தது. நான் கனவில பார்த்த அதே ஆரஞ்சு வண்ண பெயின்டைத்தான் பூசியிருக்காங்க. நான் கனவில பார்த்த ஜன்னல் டிசைனைத்தான் அந்தக் கட்டிடத்திலேயும் பொருத்தி யிருக்காங்க. காம்பௌண்டுச் சுவரைச் சுற்றியும் லோகோ



போடியம் மரக் கன்றுகளைக் கனவில் நட்ட மாதிரியே நிஜமா நட்டாங்க...'' — அவன் ஓரிரு விநாடிகள் பேச்சை நிறுத்திவிட்டுப் பிறகு கம்மிய குரலில் சொன்னான்: ''நேத்தைக்கு ராத்திரிதான் அந்தப் பயங்கரமான கனவைக் கண்டேன் டாக்டர்....''

சட்டென்று நிமிர்ந்தார் வசீகரன். ''என்ன கனவு?''

''டாக்டர்... புதுசாக் கட்டியிருக்கிற அந்தக் கட்டிடத்தோட நாலாவது மாடி மேலே அதுக்கும் மேலே மொட்டை மாடி மேலே — சுற்றுச் சுவர் இல்லாத மொட்டை மாடி மேலே நான் நின்னுக்கிட்டு இருக்கேன். காத்து 'விர்'ன்னு வீசிட்டிருக்கு. அது ராத்திரி மாதிரியும் தெரியல்ல... சாயந்திரம் மாதிரியாயும் தெரியல்ல. ஆனா மசமசன்னு இருட்டு. மொட்டை மாடியிலிருந்து கீழே எட்டிப் பார்க்கிறேன். கீழே 'ஓ'ன்னு ரோடு தெரியுது. விழுந்தா எப்படி இருக்கும்னு நினைக்கிறேன். திடீர்னு யாரோ என் தோள் மேலே கையை வைக்கிற மாதிரி உணர்ச்சி திரும்பறேன்... சன்னு இளிச்சிக்கிட்டுக் கருப்பா ஒருத்தன் நிக்கறான்... இளிச்சுட்டே. ''நான் ஒண்ணிலிருந்து பத்து எண்ணறதுக்குள்ளாற நீ இங்கிருந்து குதிக்கணும்னு'' சொல்றான். சொல்லிட்டு ஒண்ணு...ரெண்டு மூணுன்னு வேகமா எண்ண ஆரம்பிக்கிறான். அவ்வளவுதான்... எனக்கு முழிப்பு வந்துடுத்து.... முகம் பூராவும் பிசுபிசுன்னு எண்ணெய் மாதிரி வேர்வை....''

டாக்டர் வசீகரன் அவன் முகத்தை உற்றுப் பார்த்தார். அவன் கண்களில் நிஜம் இருந்தது. பொய் சொல்கிறவனாகத் தெரியவில்லை. முகத்தில் உறைந்து கிடந்த பீதி அவருடைய மனசை லேசாய்த் தொட்டது. அவன் கண்களில் பாதரசமாய் நீர் பளபளத்தது. அவன் மறுபடியும் பேசினான்.

''டாக்டர்... என்னோட ஒவ்வொரு நாள் கனவும் நிஜமான மாதிரி நேத்தைக்கு நான் கண்ட கனவும் நிஜமாயிடுமோன்னு பயமாயிருக்கு டாக்டர்! டாக்டர் ப்ளீஸ் ஹெல்ப் மீ... நான் இந்த உலகத்தில வாழணும் டாக்டர்! ஐயாம் ஒன்லி ட்வெண்டி ஃபைவ் இயர்ஸ் ஓல்டு... கல்யாணம் பண்ணிக்கணும், மனைவியோட ஹனிமூன் போகணும். டாக்டர் என்னைக் காப்பாத்துவீங்களா? இந்தப் பயங்கரமான கனவிலிருந்து என்னைக் காப்பாத்தினா நீங்க கேக்கிற பீஸை நான் கொடுக்கிறேன் டாக்டர்.''

அவன் உடைந்து போய் — சின்னக் குழந்தையாய் அழுதான்.

''மிஸ்டர் நீலேஷ்! ஓர் உண்மையைச் சொல்லட்டுமா உங்களுக்கு? உங்களோட கனவுகள் மறு நாள் நிஜம் ஆறதா சொல்றீங்களே அது தப்பு... ஒரு கட்டிடம் கட்டும் போது என்ன நடக்கும்? அந்த நடப்புக்களை நீங்க திங்க் பண்ணியிருக்கீங்க... அந்த நினைப்புக்கள் தினசரி கனவுகளாக வந்திருக்கலாம். மறு நாள் எதார்த்தமா நடக்கிற நிகழ்ச்சிகள் உங்களுக்குக் கனவோட நிஜங்களாகத் தெரிஞ்சிருக்கலாம்.. தட்ஸ் ஆல்...''

அவன் பதற்றமாய் எழுந்தான். தொண்டை நாண்கள் எல்லாம் தாம்புக் கயிறுகளாகத் தெரியும்படி கத்தினான். ''நோ டாக்டர்... கனவுகளை... என்னோட கனவுகளை அவ்வளவு ஈஸியா எடுத்துக்காதீங்க... வெறும் பிரமையினாலோ அல்லது சரியான படி தூங்காததினாலோ இந்தக் கனவுகள் பிரசவமாகலை. பிம்பங்களைக் காட்டற கண்ணாடிமாதிரி நிஜங்களைக் காட்டற கனவுகள் இது... டாக்டர் ப்ளீஸ்... பீ... சீரியஸ்!''

''ஓ கே மிஸ்டர் நீலேஷ்!'' — அவன் தோளைத் தட்டினார் வசீகரன். ''டோன்ட் கெட் அப்செட்... நிச்சயமா நீங்க சாக மாட்டீங்க... சாகவும் உங்களை விட மாட்டேன்... உங்க கனவுகள் நிஜமாகிறது என்பது பொய். அதை இப்ப நிரூபிக்கப் போகிறேன்....''

''எப்படி டாக்டர்?'' — அவன் ஆர்வமாய்க் கேட்டான்.

''முதல் நாள் கண்ட கனவு மறு நாள் பலிக்கும்கிறது உங்க நம்பிக்கை. இல்லையா மிஸ்டர் நீலேஷ்?''

''எஸ் டாக்டர்.''

''உங்க நம்பிக்கைப்படி நேற்றிரவு கண்ட உங்கள் கனவுப்படி நீங்க இந்தச் சாயங்கால நேரம் இறந்தாக வேண்டும். அப்படித்தானே?''

அவன் பயத்தோடு தலையாட்டினான்.

டாக்டர் வசீகரன் உற்சாகமாய்த் தொடர்ந்தார். ''நீங்க இன்னிக்குச் சாகலேன்னா இனி எப்பவும் அந்தக் கனவுப்படி சாக மாட்டீங்க... அப்படித்தானே?''

''யூ ஆர் கரெக்ட் டாக்டர்...''

''அப்போ வாங்க அந்தப் பங்களாவுக்குப் போகலாம்... அந்த மொட்டை மாடிக்குப் போகலாம்....''

''டாக்டர்...'' — அவன் துல்லியமாய் அதிர்ந்தான்.

''பயப்படாதீங்க மிஸ்டர் நீலேஷ்... உங்களோட கனவுகள் அர்த்தமில்லாததுங்கிறதை நிரூபிக்கப்போறேன்... பக்கத்திலே நான் இருக்கேன்.. என்னோட கையைப் புடிச்சுக்கிட்டு அந்த மொட்டை மாடியில நில்லுங்க... இன்னிக்கி ராத்திரி பூராவும் நீங்க நின்னாலும் உங்க கனவுப்படி சாக மாட்டீங்க.. ஐ வில் ஷ்யூரிட்டி ஃபார் யுவர்

ஒருவன்:- நடிகை ஜிகிருதேவி தினமும் காலையில் மூன்று கிலோமீட்டர் உடற்பயிற்சிக்காக ஓடுறாராம்...

மற்றவன்:- அவ நடிக்கிற படம்தான் ஓடமாட்டேங்குது. அவளாவது ஓடட்டுமே..

-ஜி. திருவேங்கடம்



லைஃப்.... க்விக்... என்னோடை காரிலேயே போயிட்டு வந்துடலாம்.''

அவன் இருண்டுபோன முகத்தோடு எழுந்தான். வசீகரன் அவன் தோளைத் தட்டியபடி நடத்திச் சென்றார். 'பையனுக்கு மரண பயம் உடம்பு பூராவும் பரவியிருக்கு'— மனத்துக்குள் சிரித்துக் கொண்டார்.

சாக்லேட் வண்ண பியட் சுகமாய் வழுக்கிக் கொண்டிருந்தது.

வசீகரன் காரை ஓட்ட அவருக்கு அருகில் அவன் உட்கார்ந்திருந்தான்.

நகர எல்லையைத் தாண்டிக் கொண்டிருந்தது கார். சின்னியம்பாளையம் பஞ்சாயத்தின் மஞ்சள் நிறப் பலகை வருக வருக என்று வரவேற்கத் தயாரானது.

''இன்னும் எவ்வளவு தூரம்?'' என்று வசீகரன் கேட்டார்.

''பக்கம்தான் டாக்டர்... அதோ அந்தத் தென்னை மரத்துக்குப் பின்னாடி... ஒரு பாதை திரும்புதே அதில் திரும்பணும்...'' —அவன் சொல்லிவிட்டுப் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்தான்.

தென்னை மரம் அருகில் நெருங்கியதும் காரின் வேகத்தைக் குறைத்தார் வசீகரன்.

அவன் கரகரக்கிற குரலில் சொன்னான்: ''டாக்டர் அந்தக் கட்டிடம் வந்துருச்சு. காரை இங்கேயே நிறுத்திக்கலாம்.''

அவன் கைகாட்டிய பக்கமாய் நின்ற அந்தக் கட்டிடத்தைப் பார்த்தார் வசீகரன். அரை குறையாய் முடிக்கப்பட்ட கட்டிடம் செங்கல்கள் மளமளவென்று உயர்ந்து... சிமெண்ட் பூச்சில் கட்டிடத்தை உருவாக்கிக் கொண்டிருந்தது. சாளரங்கள் பொருத்தப்படாமல் சதுரம் சதுரமாய் நின்றிருந்தன. மூங்கில் சாரங்கள் கட்டிடத்தை மறைத்துக் கொண்டிருந்தன. கார் இருந்த இடத்திலிருந்து 50 கஜ தூரத்தில் அந்தக் கட்டிடம் இருந்தது.

காரைச் செம்மண் பாதையிலிருந்தும் சற்று ஒதுக்கி நிறுத்தினார் வசீகரன்.

''இறங்குங்க மிஸ்டர் நீலேஷ்...''

''வேண்டாம் டாக்டர், எனக்குப் பயமாயிருக்கு. நான் செத்துடுவேன்...''

வசீகரனுக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. ''முட்டாள்தனமா உளறாதீங்க நீலேஷ்... உங்க பயம் பொய்யானது... அதை நிரூபிக்கிறதுக்குத்தான் உங்களைக் கூட்டிட்டு வந்திருக்கேன்... ம்... நடங்க... நான் இருக்கேன்... பயப்படாதீங்க...''

''டாக்டர், என்னைக் காப்பாத்த வேண்டியது உங்க பொறுப்பு. என்னோட கனவு நிஜமாகாமே பார்த்துக்க வேண்டியது உங்க கையிலதான் இருக்கு... உங்களை நம்பித்தான் நான் வர்றேன்...''

''என்னை நம்பித் தைரியமா நீங்க வரலாம்... ம்... வாங்க...''

பெகுலியர் கேஸ்! இந்தக் கட்டிடம் இவனை வெகுவாய்ப் பாதித்திருக்கிறது. எப்படி? கனவுகள் மறுநாள் நிஜமாகிற விசித்திரமான கேஸ்... இப்பப் பார்த்துடலாம்... நேற்றைக்கு இவன் கண்ட கனவு இப்ப எப்படி நிஜமாகப் போகிறது?

கட்டிடத்தின் முன் நின்றார் வசீகரன்.

செங்கல்கள் குப்பல் குப்பலாய்க் குவிக்கப்பட்டிருந்தன. ட்ரம்களில் தண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. ஜல்லியும் மணலும் அம்பாரமாய்க் கொட்டப்பட்டிருந்தன. கட்டிட வேலை கொஞ்ச நாட்களாய் நின்று போயிருந்ததன் அடையாளமாய் மூங்கில் சாரங்களில் ஒட்டடை தெரிந்தன.

''யாருமே இல்லே போலிருக்கே...?''—வசீகரன் உள்ளே நடந்தார்.


கட்டிடம் மௌனமாய் அவரை வரவேற்றது. அவனைத் திரும்பிப் பார்த்தார்.

அவன் கட்டிடத்தின் மேல் மாடியை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன நீலேஷ்... மேலே போகலாமா?''

''இன்னிக்கு வேண்டாம் டாக்டர்! நாளைக்குப் போகலாம்....'' — அவன் அழுகிற குரலில் சொன்னான்.

''படபடாதே... மேலேறி வா...'' வசீகரன் சாரத்தைப் பார்த்துக் கொண்டு மள



போலீஸ்காரர்:-''யோவ்! ராத்திரி எட்டு மணி ஆவுது. சைக்கிளில் லைட் இல்லாமல் வர்றியே! உனக்கு மூளை இல்லியா?

சைக்கிளில் வந்தவர்:- லைட் இல்லாவிட்டால் சார்ஜ் பண்ணுவிங்க சரி; மூளை இல்லாவிட்டாலும் கூட சார்ஜ் பண்ணுவிங்களா? சார்!''

-விஜயா மணாளன்

மளவென்று ஏறினார். அவனும் பின்னாலேயே ஏறி வந்தான்.

மசமசவென்று இருட்டிக் கொண்டு வந்த அந்தச் சாயங்கால நேரத்தில் முற்றுப் பெறாத அந்த மொட்டை மாடியின் மேல் இருவரும் ஏறி நின்றனர்.

''நேத்தைக்கு ராத்திரி உங்க கனவிலே வந்த மொட்டை மாடி இதுதானே?''

''ஆமா டாக்டர்...'' — அவன் குரல் குழறியது.

மொட்டை மாடியின் ஓரத்தைச் சுற்றி வந்தார் டாக்டர். செம்மண் பாதை கீழே 'ஓ' என்றது. ''மிஸ்டர் நீலேஷ் இப்படி வாங்க... தைரியமா வாங்க... என்னோட கையைப் பிடிச்சுக்குங்க... ஒண்ணும் ஆகாது உங்களுக்கு... கம் வித் மீ...''

அவன் முகம் இருண்டது. யாரோ அவனைத் தொட்டாற் போல் சரேலெனத்

திரும்பினான். அடுத்த விநாடி அமானுஷ்யமாய் அலறினான்.

''டாக்டர் அந்த ஆளைப் பாருங்க... என்னையே பார்த்துட்டு.. சன்னு இளிச்சிக்கிட்டு.. என்கிட்ட வர்ரான்....''

''எங்கே? யார்?'' — வசீகரன் பதற்றத்தோடு சுற்று முற்றும் பார்க்க அவர் கண்களுக்கு ஒன்றும் புலப்படாத அதே விநாடியில் இன்னமும் அதிகமாய் அலறினான்.

''டாக்டர்... என்னைக் குதிக்கச் சொல்றான்.... இங்கிருந்து கீழே குதிக்கச் சொல்றான்... ஒண்ணு ரெண்டு மூணு பத்து எண்ணறதுக்குள்ளே நான் குதிக்கணுமாம்... டாக்டர் அவனை விரட்டுங்க...'' — அவன் மொட்டை மாடியின் விளிம்பை நோக்கி மெல்ல மெல்லப் பின்னால் நகர... வசீகரன் அவனைப் பிடிக்க முயல... அவன் அவரை உதறினான்.

''நீலேஷ் பயப்படாதீங்க... இங்கே யாருமில்லே... நான் மட்டும்தான் இருக்கேன்.''

வசீகரன் கத்தினார்.

''என்னுதே... என்னுதே... கீழே குதிச்சுடறேன்... குதிச்சுடறேன்...'' — அவன் வெறித்தனமாய்க் கத்திக் கொண்டு மொட்டை மாடியின் விளிம்பை நோக்கிப் புயலாய் ஓடி... பிடிக்க முயன்ற வசீகரனின் கைகளுக்குச் சிக்காமல்... சரேலெனக் கீழே குதிக்க....

'ஓ' வென்றலறினார் டாக்டர்... ''மை குட்னெஸ்!'' — பரபரப்புடன் சாரங்களைப் பிடித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் கீழே இறங்கினார். மொட்டை மாடியினின்றும் அவன் கீழே குதித்த பகுதியை நோக்கி ஓடினார். அவன் உடலைத் தேடினார்.

அந்தப் பகுதி முழுவதும் வெறுமையாய் இருந்தது.

காலியான ட்ரம்களில் — செங்கல் குவியல்களுக்குப் பின்னால்...

சுற்றிச் சுற்றி வந்து தேடினார் டாக்டர்.

அவனுடைய உடல்? இல்லை... நிச்சயமாய் அங்கே இல்லை.

மொட்டை மாடியை அண்ணாந்து பார்த்தார் டாக்டர். அவன் மேலே இருந்து குதித்த இடம் இதுதான். நிச்சயமாய் இதே இடம் தான்... சந்தேகமில்லை....

அவனுடைய உடலைக் கட்டிடத்தைச் சுற்றிச்சுற்றி வந்து தேடினார் டாக்டர்.

''என்ன சாமி தேடறீங்க?''

தனக்குப் பின்னால் குரல் கேட்டு விலுக்கென்று தலை நிமிர்ந்தார் டாக்டர். திரும்பினார்.

அந்தக் கிழவன் நின்றிருந்தான். அரையில் காக்கி டிராயர், மேலே காக்கி சர்ட். தலையில் முண்டாசாய்ச் சுருண்ட துண்டு. வெள்ளையான புஸ்தி மீசை. புகையிலையை மெல்லும் வாய். கட்டிடத்து வாட்ச்மேனாய் இருக்கலாம். டாக்டர் வசீகரன் தம்மைச் சுதாரித்துக் கொண்டார்.

''ஒண்ணும் தேடலை பெரியவரே... கட்டிடம் நல்லா இருக்கது பார்க்க வந்தேன்.''

''ஹ்ஹும்...'' கிழவன் ஹுங்காரம் விட்டான். ''இந்நேரத்துக்குக் கிரகப் பிரவேசம் நடந்திருக்க வேண்டிய கட்டிடம். இது. நீலேஷ் ஐயா மட்டும் சாகாமே இருந்திருந்தா... ஜாம் ஜாம்னு கட்டிடம் முடிஞ்சிருக்கும்....''

அதிர்ந்தார் வசீகரன். ''நீலேஷ் செத்துட்டாரா?''

''அந்த அநியாயத்தை ஏய்யா கேக்கறீங்க? எங்க நீலேஷ் ஐயா பெரிய என்ஜினீரு. இதுக்கு முன்னாடி இங்கே இருந்த பழைய காலக் கட்டிடத்தை இடிச்சு அவரோட சொந்த பிளான்ல இந்தக் கட்டிடத்தை ரொம்பவும் ஆசையாக் கட்ட ஆரம்பிச்சாரு. ஒவ்வொரு செங்கல்லும் அவரோட மேற்பார்வையில் தான் மேலே ஏறிச்சு... மூணு மாசத்துக்கு முன்னாடி ஒரு நா சாயங்கால நேரம்... இதே மாதிரி மசமசன்னு இருட்டின நேரம்... கட்டிடத்தோட மேல் தளத்தைப் பார்க்கிறதுக்காகச் சாரங்களைப் புடிச்சுக்கிட்டு மேலே ஏறிப் போனார். கட்டிடத்து மேஸ்திரி... நானு... இன்னும் சித்தாளுக... எல்லாருமே கீழே நின்னுக்கிட்டிருந்தோம். மேலே ஏறிப் போன நீலேஷ் ஐயா... தண்ணில ஊறிட்டிருந்த கான்கிரீட் பலகைகளைத்—தாண்டி மாடியோரமா நகர்ந்து வர்றப்ப நீட்டியிருந்த கம்பி யொண்ணு அவரோட காலைத் தட்டிவிட... மேலிருந்து தலை குப்புற... கொட்டி வச்சிருந்த கருங்கல் குவியல் மேல விழுந்து....''

வசீகரனின் இதயப் பகுதியிலும், வயிற்றுப் பகுதியிலும் — ஒரே நேரத்தில் — சில்லென்று கத்தியாய்க் கீறியது.

பிரபல எழுத்தாளர் மார்க் ட்வெயினுக்கு ஒரு சமயம் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. அதற்காக அவர் ஒரு பாங்குத் தலைவரைப் பார்க்கச் சென்றார். அந்த பாங்க் தலைவருக்கு ஒரு கண் பளிங்கு கண்.

பாரிஸ் நகர புகழ் பெற்ற கலைஞர் ஒருவர் பாங்க் தலைவருக்கு அந்தப் பளிங்கு கண்ணைச் செய்து கொடுத்திருந்தார். தன் பளிங்குக் கண்ணைப் பற்றி பாங்க் தலைவருக்கு அளவற்ற பெருமை! ஏனெனில் அது அத்தனை இயற்கையாக இருந்தது.

''ட்வெயின் உமக்கு ஐயாயிரம் டாலர்தானே தேவை. தருகிறேன். ஆனால், நீர் என் கண்களில் பளிங்குக் கண் எது என்று சொல்லிவிட வேண்டும்'' என்றார் பாங்க் தலைவர்.

ட்வெயின் சற்று நேரம் அவர் கண்களை உற்றுப் பார்த்து விட்டு ''இடது கண்தான் பளிங்குக் கண்'' என்றார்.

''எப்படிக் கண்டு பிடித்தீர்?'' என்றார் பாங்க் தலைவர்.

''அதில்தான் கொஞ்சம் கனிவு தென்படுகிறது!'' என்றார் மார்க் ட்வெயின்.

—பி. நாராயணன்



கற்கரை யும்படி கரைவிக்கும் கருத்தே
கண்மணி யேமணி கலந்தகண் ஒளியே
சொற்கரை யின்றிய ஒளியினுள் ஒளியே!
துரியமும் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருள் கடலே
தெள்அமு தேகனி யேசெழும் பாகே
சர்க்கரை யேஅது சார்ந்தசெந் தேனே
தனிநட ராசஎன் சற்குரு மணியே!

— திருஅருட்பா



கடுகு பதில்கள்



✠ சுதா மணிமேகலை, வேலூர்
கே: ஹோட்டலில் மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டு விட்டு பணம் இல்லாமல் திண்டாடிய சுவையான சம்பவம் உண்டா?

ப: பல ஹோட்டல்களில் அசுத்தம் காரணமாக மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் சாப்பிட வேண்டியிருக்கிறது. அதிருக்கட்டும் மற்றவர்கள் திண்டாடுவது உங்களுக்குச் சுவையான சம்பவமாக இருக்குமா?

✠ ப. சின்னகண்ணன், கோபி
கே: ராகி ரங்கராஜனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நல்ல விதமாக!

✠ மயிலை கோபி, சென்னை-4
கே: வறுமையின் நிறம் சிகப்பு... அப்படித் தானே?

ப: சிவப்பு விளக்குப் பகுதி, வறுமையின் காரணமாக உருவாகியது என்கிறாரோ அல்லது வறுமை காரணமாகத் தொழிலாளர்கள் செங்கொடியை நாடுகிறார்கள் என்கிறாரோ அல்லது வளமையின் நிறமான பச்சைக்கு எதிரான வண்ணம் சிவப்பென்கிறாரோ தெரியவில்லை. படம் வரட்டும்.

✠ ராஜாமணி, நெல்லை-1
கே: பணத்திற்காகக் கொள்கைகளைக் கைவிடுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பணத்துக்காகக் கொள்கைகளைக் கைவிடுவது அவர்கள் கொள்கையாக இருக்கலாம். அப்போது அவர்கள் கொள்கைக்காக வாழ்பவர்கள் ஆகிறார்களே!

✠ ஆனைக்கூத்தன், பழவந்தாங்கல்
கே: ''என்னைப் பார்த்ததும் ஏன் 'பொய்' பேசுகிறீர்கள்'' என்றாளாம் காதலி. ''உன்னைக் கண்டதும் 'மெய்' மறந்து போகிறது'' என்றானாம் காதலன். இந்த ஜோக் எப்படி இருக்கிறது?

ப: நன்றாக இருக்கிறது. ஆகவே இவ்வாரத்தில் பரிசை உங்களுக்கு 'மொய்' எழுதுகிறேன்.

✠ சடகோபன், உத்திரமேரூர்
கே: இன்றைய சினிமாக்கள் உண்மையில் கலைத் தொண்டு செய்கின்றனவா?

ப: கலைத் 'துண்டு' செய்கின்றன. ஆம், கலையை இன்றைய சினிமாக்கள் சின்னாபின்னப்படுத்துகின்றன — கலை சினிமாக்கள் என்று தங்களுக்குத் தாங்களே சர்டிபிகேட் கொடுத்துக் கொள்ளும் படங்கள் உட்பட.

✠ ஏ. ஜி. அசோகராஜா, தஞ்சாவூர்-1
கே: இந்த உலகில் யாரைப் பகைத்துக் கொள்ளக் கூடாது?

ப: மனச் சாட்சியை. மனச் சாட்சியின் விரோதம் ரொம்ப ஆபத்தானது. 'அவன் மனத்தில் தானே இருக்கிறோம். போகட்டும்' என்றெல்லாம் பச்சாதாபம் காட்டாமல் தயவு தாட்சண்யம் இல்லாமல் நம்மை வாட்டி வதைக்கும் நம்மிடம் விரோதம் கொண்ட மனச்சாட்சி.

✠ சிகபரண சேஷாத்திரி, சென்னை-10
கே: தாங்கள் அடிக்கடி முணுமுணுக்கும் பாடல் எது?

ப: ''பச்சை மயில் வாகனனே சிவ பாலசுப்பிரமணியனே வா, இச்சை யெல்லாம் உன்மேல் வைத்தேன் — எள்ளளவும் ஐயமில்லையே'' என்று தொடங்கும் பாடல். பித்துக்குளி முருகதாஸ் இந்தப் பாடலைப் பாடுவதை ஒரே ஒரு தரம் கேட்டால் போதும். அது நெஞ்சை விட்டு அகலாது.

✠ குமாரி நா. சுகந்தி, கும்பகோணம்
கே: மிளகாய், புளி, உப்பு என்று எத்தனையோ இருக்க நீங்கள் ஏன் கடுகு என்று பெயர் வைத்துக் கொண்டீர்கள்?

ப: கருப்பாயி, மூக்காத்தாள், காக்கம்மா, அருக்காணி போன்ற நல்ல பெயர்கள் இருக்க நீங்கள் ஏன் சுகந்தி என்ற பெயரை வைத்துக் கொண்டீர்கள்?

✠ கவி ராமநாதன், பெஸண்ட் நகர்
கே: ஒரு சின்ன பொன்மொழி உதிருங்களேன்.

ப: நீங்கள் நட்சத்திரமாக இருக்காவிட்டால் பரவாயில்லை. ஒளியை மறைக்கும் மேகமாகவாவது இல்லாதிருங்கள். இந்தப் பொன்மொழி என் மொழி அல்ல.

ரூ. 5 பரிசு பெறுபவர் :

ஆனைக்கூத்தன்.
26-ஏ, பாரதியார் இரண்டாவது தெரு.
பழவந்தாங்கல், சென்னை-61

✠ எம். ராஜேந்திரன், லால்குடி

கே: லால்குடி என்றதும் சட்டென்று ஞாபகம் வருவது?

ப: லால்குடி ஜெயராமனின் சிறந்த நட்புதான். பெரிய வயலின் மேதை. இருந்தாலும் ஜம்பமோ, அலட்டலோ இல்லாது இருக்கிறாரே! இம்மாதிரி கலைஞர்களிடம் பேச ஆரம்பித்தால், தங்கள் துறையைப் பற்றியே பேசிப் போரடித்து விடுவார்கள். லால்குடியிடம் இரண்டு மணி நேரம் கூட பேசியிருக்கிறேன். சங்கீதத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. மனிதர் மிகச் சிறந்த ரசிகர். நகைச்சுவையாளர்.

✠ வி. சங்கரன், சென்னை-5

கே: ஆணுக்குப் பெண் சமம் என்று பேசும் பெண்கள், பஸ்ஸில் ஏன் உட்கார இடம் கேட்கிறார்கள்?

ப: அடப் பாவமே! அவர்கள் நிற்கக் ''கை'' யாலாகாதவர்களா? (காலில்லாதவர்களா என்று சொல்ல வேண்டுமோ!) பஸ்ஸில் உட்கார்ந்திருக்கும் ஆண்களுக்குச் சமமாகத் தாங்களும் இருக்க வேண்டும் என்று விரும்பித்தான் இருக்கையைக் கேட்கிறார்கள்!

✠ ஆர். பாலசுப்ரமணியன், உடுமலைப்பேட்டை

கே: கோழி முதலில் வந்ததா? முட்டையா?

ப: ஹூம். இது ஒரு கேள்வியா? ஆண்டாண்டு காலமாக இக் கேள்விக்கு விடை தெரியாமல் அறிஞர்கள் தத்தளிக்கிறார்கள். ஒருத்தராவது 'கடுகை'க் கேட்டிருக்கக் கூடாதோ? கோழிக்குப் ''பின்னால்'' தானே முட்டை வருகிறது? ஆகவே கோழி முன்னாலும் முட்டை பின்னாலும் வந்தது என்பது தெளிவு.

✠ ஆ. நரசிம்மன், திருச்செந்தூர்

கே: உமது பதில் அறுவையாக இருந்தும் பலர் மீண்டும் மீண்டும் கேள்வி கேட்பது ஏன்?

ப: உமக்கு அறுவை; அவர்களுக்கு அறுசுவை.

✠ பாலமோகன், சிவகாசி

கே: கவர்ச்சி, ஆபாசம் இவைகளைப் பிரிக்கும் எல்லைக் கோடு எது?

ப: தமிழ் எழுத்தாளர்களில் பலர் ஆபாசமான வார்த்தைகளை ஆங்கிலத்தில் எழுதி விட்டால் அது ''கவர்ச்சி''யாகிவிடுகிறதாகக் கருதுகிறார்கள். ஆகவே மொழி மாற்றம் ஒரு எல்லைக் கோடு — அவர்கள் எண்ணப்படி. என்னைப் பொறுத்தவரை ஆபாசமாக இருப்பது ஆபாசம். கவர்ச்சியாக இருப்பது கவர்ச்சி.

✠ மேஜர்தாசன், ஈரோடு-10

கே: மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியில் பல நாடுகள் புறக்கணிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனவே?

ப: நல்லதுதான். இந்தியாவுக்கு ஒருசில தங்கப் பதக்கங்கள் கிடைக்க இந்த ஒலிம்பிக்கில் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளனவே!

✠ வி. வெங்கட்ராமன், பொள்ளாச்சி

கே: எனக்குத் தலை வழுக்கையாகி வருகிறது. என்ன செய்ய?

ப: ஓய்! இந்தக் குறும்புத்தனமெல்லாம் வேண்டாம். ஓவியர் நடனம் என்னைப் போடும் படத்தைப் பார்த்துத்தானே இப்படிக் கேட்கிறீர்? நடனம் இருக்கிறாரே, மகா சிக்கனப்பேர்வழி. இண்டியன் இங்கை மிச்சப்படுத்த வேண்டும் என்றே என் தலையை இத்தனை வழுக்கையாகப் போடுகிறார்.

✠ கு. அருணாசலம், தென்காசி

கே: சில குறிப்பிட்ட நோய்கள் பணக்காரர்களுக்கு மட்டும் வருவதேன்?


ப: எல்லா நோய்களும் எல்லாருக்கும் வருகின்றன. ஏழைகளுக்கு வந்தால் தெரிவதில்லை. சரியான மருத்துவம் இல்லாமல் அவர்கள் நோய்க்கு இரையாகிறார்கள். ஏழை எவனாவது ஹியரிங் எய்ட் போட்டிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையே. அப்படியானால் பணக்காரர்களுக்கு மட்டும்தான் செவிட்டு வியாதி வருகிறதா?

ரூ. 5 பரிசு பெறுபவர் :

பாலமோகன்,
5-பி ஆறுமுகம் ரோடு,
நடராஜ் காலனி, சிவகாசி









மௌனச்






சிரிப்பு!


JONES


kapadi


JONES


JONES



அத்தியாயம் 39
பதிபக்தி பதியுக்தி

திடீரெனத் தான் எழுந்து மோதிவிட்டதால் மல்லாந்து விழ இருந்த கடல் ராணியை அனந்த் தாங்கிப் பிடித்ததும், உள்ளத்தே எழுந்த கோபத்தாலும் வேகத்தாலும் வேறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்ட சாருவைக் கண்ட கடல் ராணியின் கண்களில் ஏற்பட்ட சினம் சொல்லத் தரமல்லதாயிருந்தது. "என்னடி பாசாங்கு செய்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே அனந்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கடல் ராணி இரு கைகளையும் முஷ்டியாகப் பிடித்த வண்ணம் சாருவை நோக்கிச் சென்றாள். அவள் அருகில் வரும்வரை அசையாமலே படுத்திருந்த சாரு, அவள் அருகில் வந்து நின்று கொண்டு முஷ்டியை ஓங்கியதும் சரேலென்று தன் கால்களிலொன்றை ராணியின் கால்களுக்கிடையில் கொடுத்து ஒரு மடக்கு மடக்கவே ராணி மஞ்சச் சரிவில் புரண்டாள். அடுத்த விநாடி எழுந்து நின்று கொண்ட சாரு, சரிவில் புரண்டு எழுந்து விட்ட ராணியை நோக்கி, "நான் கோர்படே வம்சம் என்பதை நீ மறந்துவிட்டாய்" என்று சுட்டிக் காட்டினாள் கடு சொற்களால்.

ராணியும் சரிவில் நின்ற வண்ணமே சாருவை மிக அலட்சியமாக நோக்கினாள். "நான் கடல் ராணி என்பதை நீயும் மறந்து விட்டாய்" என்று கூறி நகைத்தாள்.

அந்த நகைப்பை அடுத்து நிகழவிருந்த அனர்த்தத்தை அனந்தின் கடுமையான சொற்கள் தடை செய்தன. "ரத்னா! எடு உன் கையை இடையிலிருந்து. அந்தக் கைத் துப்பாக்கியை இயக்கினால் ஆயுளுக்கும் நொண்டியாகக் காலம் கழிப்பாய்" என்ற சொற்களைக் கடுமையாக உதிர்த்தன அனந்தின் உதடுகள். அவன் கையும் அவன் இடையிலிருந்த கைத்துப்பாக்கியில் பதிந்து ராணியின் முழங்காலுக்காகக் குறி வைத்திருந்தது.


இதைக் கேட்ட ராணி மீண்டும் நகைத்தாள். "கடல் வீரரே! நொண்டிகளின் தயவு தங்களுக்கு எப்போதும் தேவையாயிருக்கிறது. நொண்டி லிங்கரை அழைத்துக்கொண்டுதான் சிந்து துர்க்கம் வந்தீர்கள். என்னையும் நொண்டியாக்கி விட்டால் உங்களுக்கு இரண்டு நொண்டிகளின் துணையிருக்கும். ஆகவே சுட்டுவிடுங்கள். ஏன் யோசிக்கிறீர்கள்?" என்று சொன்னாள், நகைப்பின் ஊடே.

இந்தச் சச்சரவில் பேஷ்வா பாஜிராவும் விழித்துக் கொண்டு விட்டதால் அவரும் எழுந்து உட்கார்ந்து மூவரையும் நோக்கினார் மாறி மாறி.

சாரு ஸஹ்யாத்ரி மலை போலவே குடிசைக்கருகில் அசையாமல் நின்றிருந்தாள், சரிவில் நின்ற ராணியும் சாருவின் பக்கத்திலிருந்த அனந்தும் கைகளைத் தங்கள் இடையில் வைத்திருந்தார்கள் கைத்துப்பாக்கிகளை நிமிர்த்திய வண்ணம்.

திடீரென்று பாஜிராவ் துள்ளி எழுந்து, "ராணி! வேண்டாம், நிறுத்து" என்று அதிகாரக் குரலில் கட்டளை யிட்டார். பாஜிராவின் அந்தக் கூச்சலுக்குக் காரணம் புரியாத அனந்த் அவரை நோக்கினான்,

''அனந்த்! முட்டாள்! அதோ பார் ராணி தனது கைத்துப்பாக்கியை எடுத்து சாருவின் முழந் தாளுக்குத் திருப்பிவிட்டாள். நீ ராணியை நொண்டியாக்கும் அதே தருணத் தில் சாருவும் நொண்டியாவாள். இரண்டு நொண்டிப் பெண்களைக் கட்டிக் கொண்டு நீ



காலம் முழுவதும் நொண்டாட வேண்டி யிருக் கும்'' என்று விளக்கினார்.

அப்பொழுதுதான் அனந்தும் கவனித் தான் கடல் ராணி கைத்துப்பாக்கியைத் திசை திருப்பி விட்டதை. அதனால் பெரும் சங்கடத்துக்குள்ளான அனந்த் ''நீங்கள் இருவரும் ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டு ஒழியுங்கள்'' என்று கூறிவிட்டுத் தனது கையிலிருந்த கைத் துப்பாக்கியைச் சாருவின் கையில் திணித்துவிட்டு மலைச் சரி வில் சரசரவென இறங்கிக் காட்டின் முகப்பில் மறைந்தான். அவன் சென்றதும் இரண்டு பெண்களும் ஒருவரை யொருவர் நோக்கிச் சீறிக் கொண்டு நின்றனர். இருவர் கைகளி லும் கைத்துப்பாக்கிகள் பயங்கரமாகக்காட்சி யளித்தன. அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ வேகமாகச் சுடப்பட்ட ஒரு துப்பாக்கியின் இரு ரவைகள் இரு பெண்களின் கைகளிலி ருந்த துப்பாக்கிகளைப் பறித்துச் சென்று விட்டதால் திகைப்பெய்திய இரு பெண் களையும் நோக்கிக் கடகடவென்று நகைத் தார் பேஷ்வா.

''என்ன நகைக்கிறீர்கள்?'' என்று கேட் டாள் பேஷ்வாவை நோக்கி ராணி.

''நகைக்க என்ன இருக்கிறது?'' என்று சாருவும் வினவினாள் கோபத்துடன்.

''கிழவரிடம் உங்கள் ஜபம் பலிக்கவில்லை யென்பதற்காகச் சிரித்தேன்'' என்று பேஷ்வா கூறினார்.

அதைக் கேட்டதும் காட்டுக்குள் நுழை வதை விட்டுத்திரும்பிப் பாஜிராவைநோக்கிய அனந்த் ஏதோ கேள்விகேட்க முற்பட்டபோது காட்டு முகப்பில் அவன் பக்கத்தில் தோன் றிய கனோஜி ''யாரைக் கிழவனென்று சொல்கிறீர்கள் பேஷ்வா?'' என்று வினவிக் கொண்டே குடிசையை நோக்கி வந்தார். வந்ததும் எதிரும் புதிருமாக மலை உச்சி யிலும் சரிவிலும் நின்ற இரு பெண்களையும் நோக்கினார். பிறகு பேஷ்வாவை நோக்கி ''பேஷ்வா! பெண்களின் கைகளில் ஆயுதம் இருந்தால் எத்தனை உபத்திரவம் தெரி யுமா?'' என்று கூறி, ''இவர்கள் கைகளில் ஏன் துப்பாக்கிகளைக் கொடுத்தீர்கள்?'' என்றும் கேட்டார்.

கனோஜி வந்ததும் பேஷ்வா எழுந்து நின்று கொண்டார். ''நான் கொடுக்கவில்லை. ராணியிடம் எப்போதும் துப்பாக்கி உண்டு. சாருவுக்கு அனந்த் கொடுத்து விட்டான், தனது துப்பாக்கியை'' என்று விளக்கினார் பேஷ்வா நின்ற நிலையில்.

''அனந்த் எங்கே?'' என்று வினவினார் கனோஜி. திரும்பிக் காட்டு முகப்பை நோக்கி அனந்த் காணவில்லை பழைய இடத்தில்.

''காட்டுக்குள் ஓடிவிட்டான்'' என்றார் பேஷ்வா.

''கெட்டிக்காரன்'' என்று சிலாகித்தார் கனோஜி.

''எப்படி?'' பேஷ்வாவின் கேள்வியில் வியப்பு இருந்தது.

''என்னைப் பின்பற்றுகிறான் அனந்த். என் சிடறுகிவிட்டான்'' என்று களிப்புடன் கூறி னார் கனோஜி.

''உங்கள் சீடனாகி விட்டானா?'' பேஷ்வா கேட்டார் வேண்டுமென்றே.

''விஜய துர்க்கத்தில் எனது இரு மனைவி களுக்கும் சண்டை.. அதிலிருந்து தப்ப இங்கு வந்தேன். இங்கு தனது மனைவிகளிடமிருந்து தப்ப அனந்த் ஓடிவிட்டான் காட்டுக்குள்'' என்றார் கனோஜி உற்சாகத்துடன்.

இதைக் கேட்டதும் பெண்கள் இருவரும் சீறினார்கள். ''நான் அவர் மனைவியல்ல'' என்றாள் ராணி.

''நானும் அல்ல'' என்றாள் சாரு ராணி யின் வேகத்துடன்.



''அதனாலென்ன முழுகிப் போய்விட்டது?'' என்று கனோஜீ கேட்டுக் குடிசை வாயிலில் உட்கார்ந்து கொண்டார். பேஷ்வாவையும் உட்காரச் சைகை செய்தார்.

பேஷ்வா உட்கார்ந்ததும் ராணி கேட்டாள், ''நீங்கள் சொல்வது புரியவில்லை'' என்று.

''எது புரியவில்லை?''

''மனைவியாயில்லா விட்டால் என்ன முழுகிப் போய்விட்டது என்று கேட்டீர்களே.''

''கேட்டேன்.''

''அதற்கு என்ன பொருள்?''

''மனைவிபோல் இருந்தாலும் போதுமல்லவா? தாலி ஒன்றுதானே வித்தியாசம்'' என்றார் கனோஜீ.

''ஸார்கேல்!'' — சூடாக எழுந்தது ராணியின் அச்சுறுத்தல்.

''ஸார்கேல்!'' சாவதானமாக ஆனால் பயங்கரமாக எழுந்தது சாருவின் குரல். அடுத்து இருவரும் கனோஜீயை நோக்கி வந்தார்கள். ''அட உபத்திரவமே என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? நான் அனந்த் இல்லை''

என்று குடிசைத் தட்டி மேல் சாய்ந்து அங்க வது போல்பாசாங்கு செய்தார் கஜேஜி.

''உங்கள் மனைவிமார் எதற்காக உங்க ளிடம் சண்டை போட்டார்கள்?'' என்று அந்தச் சமயத்தில் அசம்பாவிதமாக பேஷ்வா வினவினர்.

கஜேஜி தரையை நோக்கினர். ''அது ஒரு சின்ன விஷயம்'' என்றார்.

''விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்'' என்றார் பேஷ்வா.

''சில வருஷங்களுக்கு முன்பு ஒரு பெண் ணைச் சந்தித்தேன். அவள் திடீரென விஜய துர்க்கத்துக்கு வந்து விட்டாள்'' என்று மென்று விழுங்கினர் கஜேஜி.

கஜேஜியின் திருவிளையாடல்களைப் பற்றி பாஜிராவ் நேரில் அறியவில்லையாஞலும் அவர் பிரக்யாதி பெரிதும் மகாராஷ்டிரத் தில் பரவியிருந்ததால் ''பழைய வினையா?'' என்று வினவிப் புன்முறுவலும் பூத்தார்.

''அதில் வினை ஏதுமில்லை. ஏதோ வாலிப வயதின் விளையாட்டு. அது இத்தனை ஆண்டுகள் கழித்துப் பிராணனை வாங்குமென்று தெரி யாது.'' என்று கஜேஜி அலுத்துக்கொண் டார். ''பெண்களின் சகவாசமே கூடாது'' என்று தத்துவமும் பேசினர்.

''காலம் கடந்த அறிவு'' என்று பேஷ்வா வும் உபதேசித்தார்.

இந்தச் சம்பாஷணையால் வெறுப்பும் சினமும் அடைந்த சாருவும் ராணியும் பெரும் சங்கடத்துக்குள்ளாகித் தங்கள் கைத் துப்பாக்கிகளை இடையில் செருகிக் கொண்டு குடிசைக்குள் சென்றுவிட்டனர்.

அவர்கள் சென்றதும் ஆசுவாசப் பெரு மூச்சு விட்ட கஜேஜி, ''இந்த அனந்த் எங்கே போய்விட்டான்?'' என்று கேட்டு, ''அனந்த்! அனந்த்!'' என்று கூவினர் இரு முறை.

அனந்த் மெள்ளத் தலையை நீட்டினன் காட்டு முகப்பிலிருந்து. ''பயப்படாதே வா'' என்று அழைப்பு விடுத்தார் கஜேஜி.

அனந்த் மெள்ள அவரை நோக்கி வந் தான். கஜேஜி அவனைத் தமது பக்கத்தில் உட்காரச் சொல்லி மடியிலிருந்த நீண்ட கடிதமொன்றை எடுத்து பாஜிராவிடம் நீட்டினர். ''சாரு! உள்ளே இருக்கும் விளக்கைக் கொண்டுவா'' என்று குடிசைக் குள் கண்களை ஓட்டிக் கூப்பிட்டார். ''ராணி! நீயும் வா'' என்று அவளையும் அழைத்தார்.

சாரு விளக்கைக் கொண்டு வந்து மொட் டென்று தரையில் வைத்தாள். அவளுக்குப் பின் வந்த கடல் ராணி கஜேஜி எதிரில் நின்று ''என்ன விசேஷம்?'' என்று கேட்டு வலது காலைத் தரையில் உதைத்தாள்.

கஜேஜி அந்த இருவர் காட்டிய அவ மரியாதையையும் லட்சியம் செய்யாமல் பாஜி ராவை நோக்கி, ''ஒப்பந்தம் சரியா யிருக் கிறதா பாருங்கள். வீண் ஆலசியம் வேண் டாமென்று நீங்கள் போனவுடன் ஒப் பந்த ஷரத்துக்களை எழுதி மாக்ரேயிடம் கையெழுத்தும் வாங்கிவிட்டேன். இதோ நகலும் இருக்கிறது'' என்று கூறி நகலையும் எடுத்துக் கொடுத்தார் மடியின் இன்னொரு புறத்திலிருந்து.

பாஜிராவ் விளக்கில் படித்தார் ஒப்பந் தத்தை. ''சரியாக இருக்கிறது. நாம் பேசி யதை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கிருன் மாக்ரே'' என்று உற்சாகத்தையும் காட்டி னர் குரலில். ''ராணி! இதில் நீ கையெழுத் திட்டுவிடு'' என்றும் உத்தரவிட்டார்.

கடல் ராணி தரையில் உட்கார்ந்தாள். அனந்தின் பக்கத்தில். ''நீங்கள் படித்துப் பாருங்கள். நீங்கள் கையெழுத்துப் போடச் சொன்னல் போடுகிறேன்'' என்றும் சொன் னள்.

அந்தச் சமயத்தில் குடிசைக்குள்ளிருந்து தலைநீட்டிய சாரு, ''ராஜா சொன்னல் ராணி தட்டமாட்டாள். அடடா! என்ன பதிபக்தி!'' என்று கூறி இகழ்ச்சியாக நகைத் தாள்.

''எனக்குப் பதியுக்தி இல்லை'' என்றாள் ராணி சாருவை நோக்கி.

''பதி யுக்தியா?'' இகழ்ச்சியுடன் எழுந் தது சாருவின் கேள்வி.

''பதியைப் பிடிக்கும் யுக்தி. அதில் நீ வல்லவள்'' என்றாள் ராணி.

''நீயா, நானு!'' வாயிலை விட்டு இரண்டு அடி எடுத்து வைத்தாள் சாரு.

''சாரு! ராணி! உங்கள் சண்டையைப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள். முதலில் ஒப்பந்தம் கையெழுத்தாகட்டும்.'' என்று இடைபுகுந்த பாஜிராவ் இரு பெண்களையும் கடுமையாகப் பார்த்தார்.

அதற்குப் பிறகு யாரும் பேசவில்லை. ஒப் பந்தம் கையெழுத்தாயிற்று. ராணி நகலைத் தான் வைத்துக் கொண்டாள். அசல் ஒப் பந்தக் காகிதத்தை எடுத்துக் கொண்டு கஜேஜி கிளம்பினர் விஜயதுர்க்கத்தை நோக்கி. ''பதிபக்தி, பதியுக்தி, வருகிறேன்'' என்று இரு பெண்களையும் நோக்கி நகைத்து விட்டு மலைச் சரிவில் இறங்கிச் சென்றார்.

அவர் சென்றதும் பாஜிராவ் நகைத்தார். ஏன், அனந்த் கூட நகைத்தான். ஆனால் அதே சமயத்தில் நகைப்புக்குத் துளிகூட இடமில்லாத விபரீதம் சிந்து துர்க்கத்தில் நிகழ்ந்து கொண்டிருந்ததை அந்தக் குடிசை வாயிலிலிருந்த நால்வரும் உணரவில்லை.

(தொடரும்)

ஜோதிடர்: ''ஜாதகப்படி மாங்கல்யப் பொருத் தம் சரி இல்லீங்க!''

வந்தவர்: ''சரி, மோதிரப் பொருத்தமாவது சரியாக இருக்கிறதா என்று பாருங்க!''

— வாசு-ராஜு



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

நேருவின் கருத்துக்கு மாறுபட்டு வேறு விதமாகச் சிந்தித்த மகாத்மா, அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு எதிராக கவர்னர் தமது விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிக்காமல் இருப்பார் என்ற உறுதி மொழியை அரசு அளிக்குமேயானால் பதவி ஏற்கலாம் என்று அறிவுரை வழங்கத் தயாராக இருந்தார். மார்ச் மூன்றாவது வாரத்தில் டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அக்கிராசனரிடமிருந்து கருத்து மாறுபட்டு, காந்தியின் நிபந்தனை ஏற்கப்படுமானால் பதவி ஏற்கலாம் என்று அங்கீகாரம் அளித்தது.

காங்கிரஸின் வெற்றி தெளிவான சில காலத்துக்குள் ஸி. ஆர். சென்னை கவர்னருடன் பேச்சு வார்த்தை தொடங்கியிருந்தார். காங்கிரஸ் பதவி ஏற்க அரசு எந்த அளவுக்கு ஒத்துழைக்கும் என்று கண்டறிவது அவர் நோக்கமாயிருந்தது. பெரும் செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவரும் ஸ்காட்டிஷ்காரருமான எர்ஸ்கைன் பிரபு சுதந்திர உணர்வுள்ளவர். பிரிட்டிஷ் அரசியலில் மேன்மேலும் பெரிய பதவிகளை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். 1935 முதல் சென்னை மாகாணத்தின் கவர்னராக இருந்து வந்தார். காங்கிரஸ் தலைவர்கள் அரசுக்குச் சமதையாக நடந்து கொள்வதையோ அரசுடன் சம அந்தஸ்தில் இருந்து பேசுவதையோ காண்பது அவருக்கு மகிழ்ச்சி தரவில்லை.

காந்தியின் முழு மனச் சீடர் என்றும் அனைவராலும் மதித்து மரியாதை செலுத்தப்படுகிறவர் என்றும் ஆனால் யதார்த்தங்களைக் கவனியாத லட்சிய எதிர் கால நோக்குடையவர் என்றும் அவர் ஸி. ஆர். பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். இருப்பினும், மிகவும் சுமுகமாக நடந்து முடிந்ததாக எர்ஸ்கைனாலேயே கருதப்பட்ட மூன்றாவது சந்திப்புக்குப் பிறகு அவர், ''இம்மனிதரை எனக்குப் பிடித்திருக்கிறது'' என்று வைஸ்ராய்க்கு எழுதினார்.

பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்திலேயே 'வைஸ்ராயோ அல்லது அயல் விவகார மந்திரியோ உத்தரவிட்டாலொழிய கவர்னரின் விசேஷ அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட மாட்டாது என்று எழுத்து மூலம் உறுதி அளிக்க முடியுமா?' என்று அவரை ஸி. ஆர். கேட்டிருந்தார். எர்ஸ்கைன் இது விஷயத்தில் வைஸ்ராயின் அறிவுரையை நாடினார். இம்மாதிரியான உறுதி மொழியை அளிக்க முடியாதென ஒதுக்கிய லின்லித்கோ, வேறு யோசனையை வெளியிட்டார். ஏதாவது ஒரு பொது நிகழ்ச்சியில் கவர்னர் பேசும்போது அரசு அனுதாபத்துடன் இருப்பதை மறுமுறையும் வலியுறுத்தலாம்; அதன் அடிப்படையில் பதவி ஏற்கும் எந்தக் கட்சியுடனும் சேர்ந்து பணியாற்ற கவர்னர் என்ற முறையில் தாம் தயாராக இருப்பதாகக் கூறலாம். இத்தகைய ஓர் அறிவிப்பு காங்கிரஸைத் திருப்திப்படுத்துமா என்று ஸி. ஆரிடம் விசாரித்து அறியுமாறு எர்ஸ்கைனை வைஸ்ராய் கேட்டுக் கொண்டார்.

ஸி. ஆரின் பதில், 'இது போதாது' என்பதுதான். இப்பதிலை அளிக்கு முன் ஸி. ஆர்., அப்போது சென்னைக்கு ஹிந்தி பிரசாரத்துக்காக வந்திருந்த மகாத்மாவைக் கலந்தாலோசித்தார். ஆயினும் ஒரு விஷயம் எண்ணிப் பார்க்க வேண்டியதாயிற்று. புதிதாக அப்போதுதான் அமலுக்கு வந்திருந்த அரசியல் சாஸனத்தில் திருத்தம் கொண்டு வராமல் காந்தியும் ஸி. ஆரும் கேட்பது போன்ற உறுதி மொழியை அரசு அளிக்க முடியுமா?

பிரிட்டனிலும் சரி, இந்தியாவிலும் சரி, இவ்விஷயத்தில் சட்ட நிபுணர்கள் கருத்து மாறுபாடுகளைக் கொண்டிருந்தனர். ஆனால் காந்தி பிடிவாதமாக இருப்பதாகத் தோன்றியது. 'சட்ட மன்றங்களைப் பகிஷ்கரிப்பது என்பது சாசுவதமான கொள்கையல்ல' என அவர் அறிவித்த போதிலும் ஒரு விஷயத்தைத் தெளிவாக்கினார்: சட்ட சபைப் பிரவேசத்தை அவர் ஆதரித்தது. 'ஒத்துழைப்பை அளிப்பதற்கல்ல; ஒத்துழைப்பைப் பெறுவதற்கே.'

இழுபறி நிலைமையே நீடிக்கும்போல் தோன்றியது. ஏழு மாகாணங்களில் கவர்னர்கள் சம்பிரதாயமாகச் சட்ட மன்ற காங்கிரஸ் தலைவரை அரசு அமைக்குமாறு கோரினார்கள். ஸி. ஆரும் அவர் நிலைமையிலேயே பிற ராஜதானிகளில் இருந்தவர்களும் அரசிடம் வாக்குறுதியைச் சம்பிரதாயமான முறையில் வேண்டினார்கள். அந்த வாக்குறுதியை அளிக்க அரசு முன்வராதபோது தாங்களும் மறுதளிக்க வேண்டியதுதான் என்றனர்.

எர்ஸ்கைன், லிபரல் கட்சித் தலைவர் ஸ்ரீனிவாச சாஸ்திரியிடம், அவரால் ஒரு காபந்து சர்க்கார் அமைக்க முடியுமா என்று கேட்டார். தமக்கு வயதாகி விட்டதென்றும் உடம்பு சரியில்லையென்றும் இந்தக்

✖ மகாத்மாவும் ராஜாஜியும்



ராஜ்மோகன் காந்தி

பழமொழித் திரட்டு

✱ மரத்தடியில் ஆளில்லாத போது தான், ஆண்டவன் தேங்காயை விழச் செய்கிறான்.

-அரேபியா

✱ அமைதி வேண்டுமானால், எவரையும் மறுத்துப் பேச வேண்டாம்.

-ஹங்கேரி

✱ சரிகை ஆடைகளுடன் நரகத்திற்குப் போவதை விட, கந்தல்களுடன் சுவர்க்கத்திற்குச் செல்வது மேல்.

-இங்கிலாந்து

✱ தன் உயிரைப் பற்றி அதிகமாகக் கவனமாய் இருப்பவனை ஒரு சருகு விழுந்து கொன்று விடும்.

-ஆப்பிரிக்கா

✱ அதிர்ஷ்டம் கைகளில் வலிமை இல்லாதவள்; அவள் கைதூக்கி விட்டவர்களை விரைவில் நழுவ விட்டு விடுவாள்.

-ஜெர்மனி

✱ மேற்கே பார்த்துக் கொண்டிருந்தால், சூரிய உதயத்தைக் காணவே முடியாது.

-ஜப்பான்

-திரட்டு: டாக்டர் இரா. மோகன்

கோரிக்கையை ஏற்பது தம்மைப் பிராபல்யம் இழக்கச் செய்யு மென்றும் கூறிய சாஸ்திரி மறுதளித்தார். அடுத்தாற்போல் கவர்னர், சர் கே. வி. ரெட்டியைக் கேட்டுக் கொண்டார். அவர் சம்மதித்தார். எதிர்பார்த்தபடியே அவரது தாற்காலிக அமைச்சரவை பரிகாசத்துக்குள்ளாயிற்று.

காந்தியின் குறைந்த பட்சக் கோரிக்கையை விடக் குறைவானதை ஏற்றுத் தீர்வு காணத் தயாராக இருந்த ஸி. ஆர்., அவருடன் பேச்சு வார்த்தை நடத்த குஜராத் கடற்கரைப் பகுதியில் டிதால் என்ற கிராமத்துக்குப் போனார். 'ஒத்துழைப்புக் கரம் தயாராக இருப்பதாக பிரிட்டனிடமிருந்து ஒரு சமிக்ஞை தேவை' என்றார் மகாத்மா. 'அந்த சமிக்ஞை எந்த விதமாக வருகிறது என்பது அவ்வளவு முக்கியமல்ல.'

நல்ல வேளையாக அரசு அசைந்து கொடுத்தது. அயல் விவகார மந்திரி ஜெட்லாண்ட், லண்டன் மக்கள் சபையில் ஓர் அறிவிப்புச் செய்தார். அது உற்சாகமளிப்பதாக இருப்பதாக காந்தி கண்டார். பிறகு வைஸ்ராய் காங்கிரஸுக்கு பிரிட்டனின் சம்பிரதாயமான பதிலைத் தந்தார்.

''கவர்னர் தமக்கு விசேஷமாக வழங்கப் பட்டுள்ள குறுகிய அளவு பொறுப்புக்களை மீறி ஒரு ராஜதானியின் அன்றாட நிர்வாகத்தில் தலையிட அதிகாரம் பெற்றுள்ளார் என்றோ அவருக்கு அந்த உரிமை உண்டு என்றோ அல்லது சுதந்திரம் இருக்கிறது என்றோ கூறப்படுவதற்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது.''

இதைவிடப் பெரிய அளவில் ஒப்புதலைப் பெறலாம் என எதிர்பார்த்த ஸி. ஆர்., ஏமாற்றத்துக்கு உள்ளானார். எர்ஸ்கைனிடம் அவ்வாறே கூறவும் செய்தார். ஆனால் வியப்பளிக்கும் விதமாக மகாத்மா ஏமாற்றத்துக்குள்ளாகவில்லை. கொடுக்கப்பட்டதை ஏற்க அவர் தயாராக இருந்தார். நேருவோ, காரியக் கமிட்டி வார்தாவில் கூடுவதற்கு மூன்று நாட்கள் முன்னதாகவே அங்கு வந்து காந்தியுடன் பேசினார்.

காரியக் கமிட்டி ஆலோசனை நடத்திய போது, ஸி. ஆர்., அரசின் பதில் திருப்திகரமாக இல்லையென்றாலும் ஆட்சிப் பொறுப்பு ஏற்கலாம் என்று அதற்கு ஆதரவாகவே வாதாடினார். அவரை நேரு உள்பட யாருமே எதிர்க்கவில்லை. 1937 ஜூலை 5ம் தேதி மந்திரி சபைகள் அமைக்கலாம் என காரியக் கமிட்டி அனுமதி வழங்கியது.

இரண்டு நாட்கள் கழித்து, அதுவரை ஐந்து முறை அரசினால் சிறைப் படுத்தப்பட்டிருந்த ஸி. ஆரை எர்ஸ்கைன் அழைத்தார். ராஜதானியின் பிரதம மந்திரியாக இருக்குமாறு கோரினார் — அன்று அப்பதவிக்கு அதுதான் பெயர் — மந்திரி சபை அமைக்குமாறு வேண்டினார்.


ஸி. ஆர். ஒப்புக் கொண்டார். அவர் வாழ்க்கையில் அரசுப் பொறுப்பு என்னும் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகி இருந்தது.

யுத்த காலத்தில் அந்தப் பொறுப்பு இடையில் தடைப்பட்டது. 1947ல் சுதந்திரம் பெற்றபோது பொறுப்பு முன்னிலும் அதிகரித்தது. 1954 வரை நீடித்தது. இப்போதைக்கு அவர் அரசுடன் இரட்டை உறவு கொள்ளும் ஓர் அசாதாரணமான பரிசோதனையில் இறங்கி யிருந்தார். இதில் நம்பிக்கையும், போராட்டமும் பங்கேற்பும் எதிர்ப்பும் இணைந்திருந்தன.

''என் நம்பிக்கை உங்களிடம் மையப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும்'' என்று மகாத்மா தந்தி அனுப்பினார். ''கடவுள் உங்கள் முயற்சிகளுக்கு ஆசி நல்கட்டும்.''

தமிழாக்கம்: வெ. ராஜேந்திரன்

[முதல் பாகம் முற்றும்]



சாலை ஓரச்சிற்பம்!

பழைய ஃபோக்ஸ் வாகன் கார் ஒன்றைக்கொண்டு, அமெரிக்காவின் ஃபாம்ப்ரோ என்ற சிற்பி வடித்திருக்கும் பூதாகரமான 'பூச்சி' இதோ!

-'டிட்பிட்ஸி'லிருந்து.
ஆர். சச்சிதானந்தன்

குறைந்த வருமானமுள்ள வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் கடன் நிவாரண நடவடிக்கை

"கிராம மக்களின் கடன்சுமை நீக்கப்படும்" என்பதே 20-அம்சத் திட்டத்தின் 5வது பகுதியின் நோக்கம்

இந்த உறுதிமொழியை நிறைவேற்ற 1976-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் விதிமுறைகளை மேலும் எளிதாக்கி, கிராம ஏழை மக்கள் மேலும் பயனடைய வேண்டுமென்ற கருத்திலும் உடனடி நிவாரணம் விரைந்து கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் 1980-ம் ஆண்டு இச்சட்டத்தின் விதிமுறைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் யார்?

நீங்கள்...

1) 31-12-1975-ல் முடிவடைந்த ஆண்டில் மொத்த குடும்ப வருமானம் ரூ. 2400க்கு உட்பட்ட ஒரு வேளாண்மைத் தொழிலாளியா? கைவினைஞரா?
2) இரண்டு யூனிட்டுக்கு உட்பட்ட நிலமுள்ள மலைவாழ் மக்களினத்தைச் சேர்ந்த சிறு விவசாயியா?
3) ஒரு யூனிட்டுக்குட்பட்ட நிலமுள்ள இதர சிறு விவசாயியா?

மேற்கூறியபடி நீங்கள் இருந்தால் உங்கள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெற இச்சட்டத்தின் மூலம் தகுதி பெறுகிறீர்கள். இந்த நிவாரணச் சட்டத்தின்படி 29-7-76க்கு முன்பு நீங்கள் செலுத்த வேண்டிய வட்டி உட்பட கடன் தொகை முழுவதும் செலுத்தி விட்டதாகக் கருதப்படும். இச்சட்டத்தின் விதிமுறைகளை தாசில்தார்கள் செயல்படுத்துகின்றனர்.

இச்சட்டத்தின்படி தகுதி பெற்றவராயின் நீங்கள் செய்ய வேண்டியதென்ன?


இச்சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து நீங்கள் வசிக்கும் பகுதியின் அதிகார வரம்புள்ள தாசில்தார், துணை தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் (பி.டி.ஓ) கூட்டுறவு சார்பதிவாளர்—இவர்களில் ஒருவர் முன் பிரமாண வாக்குமூலம் செய்து வருமான அல்லது நில உடைமைச் சான்றிதழுடன் உங்கள் பகுதியைச் சேர்ந்த தாசில்தாருக்கு 12-6-1980க்குள் கொடுத்து விட வேண்டும்.

பக்கத்திலுள்ள சம்பந்தப்பட்ட தாலுக்கா அலுவலகத்திற்குச் சென்று, நீங்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். உடனடியாக நிவாரணம் பெறுவதற்கான படிவங்களைக் காலதாமதமின்றி பூர்த்தி செய்து கொடுத்து விடுங்கள்.

உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடுங்கள்.
மனு அளிக்கக் கடைசி நாள் 12-6-1980

வருவாய்த்துறை

இனிய வாழ்வு பெற்றிட
20
அம்சத் திட்டம்



டோக்கன் நம்பர் 4

தமிழினியன்



குந்தலாம்பிகா, வயது இருபத்தெட்டு— முதல் டோக்கன். அது பைசல் ஆகிக்கொண்டிருந்தது. அடுத்து எதுகை மோனைக் கவிஞரைப் போல் ஒரு சில்க் ஜிப்பா. மூன்றாவது ஒரு பட்டிக்காட்டுக் கிராமம். நாலாவது தான் டோக்கன் வாங்கும்போது சுகுமார் என்று பெயர் சொன்ன அந்த இளைஞன். ஐந்தாவது ஒரு சவூதி அரேபியா லுங்கி. அத்துடன் அன்று அந்த பாங்கில் கடன் வாங்குவோரின் கோட்டா பூர்த்தியாகி விட்டது.

மடியில் நகை; சற்று நேரத்தில் அது பணமாகப் போகும் மகிழ்ச்சி. சாந்தமாக அமர்ந்திருந்தார்கள் ஐவரும்.

அவன் — சுகுமாரன், மேலே சந்தனமும் கீழே காப்பியுமாக டெலிகாஸ்டிங் மேக்கப்புடன் ஜொலித்தான். ஆயினும் என்ன? அடுத்த சில நிமிடங்களில் அவனும் ஒரு கடன்காரன்தானே.

அவன் பார்வையின் பெரும் பகுதி பிரதான வாயிலில் நிலைத்திருந்தது. வருவோர் போவோரை ஆராயும் ஆர்வமா, அல்லது பெண் சிட்டுக்கள் வரத் தேடும் ருசியா— தெரியவில்லை.

இடையிடையே கவுண்டர் கம்பிகளுக்கு அப்பால் சிறைவாசியாய்த் தெரிந்த அப்ரைசரையும், அவரது கெடுபிடிக் குரலையும் ரசித்துக் கொண்டிருந்தான் அவன்.

பியூன், "குண்டலாம்பிகா" என்று அந்த இருபத்தெட்டு வயது அரக்குப் பார்டரை எழுத்துப் பிழையுடன் கூப்பிட்டான்.

சமயம் வேறாகி யிருப்பின், தன்னைக் குண்டாக்கிவிட்டானே என்று ஆத்திரம் வெடித்திருக்கும் அந்த அம்மணிக்கு. ஆனால், கடன் பெற வந்த இடத்தில் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளத்தானே வேண்டும்?

நொறுக்குத் தீனி படைத்துக் கொண்டிருந்த இடைச் சிவப்பை அவசரமாய் மூடிக் கொண்டு எழுந்தாள் அவள்.

சேவகர் நீட்டிய படிவங்களில் கையெழுத்துக்களைப் பொழிந்தாள்.

கவுண்டரில் கவிஞரின் முறை.

நகைகள் எடை போட்டாயிற்று.

"எவ்வளவு வேண்டும்?"

"என்ன?"

அப்ரைசர் இரண்டாம் தரம் பேச மாட்டார். "எவ்வளவு ரூபாய் ஐயா, வேண்டும்" என்று அதட்டினார்.

"இரண்டாயிரம்."

"அவ்வளவு வராது.. ஆயிரத்து அறுநூறு தான் கிடைக்கும்."

கவிஞர் மோட்டு வளையைப் பார்த்தார். அந்த யோசனைக்கெல்லாம் அவகாசம் தரவில்லை, கெடுபிடி. "போடட்டுமா?"

"போடுங்கள்."

அப்போது—

வாசலில் அவசரமாக ஒரு நிழல்.

யாரோ ஒரு நடுத்தர வயது வேட்டி, சட்டை. இரட்டைப் பாய்ச்சலில் நெருங்கி, "சார்" என்று குறுக்கிட்டார்.

கோபம் உச்சியில் ஏறியது அப்ரைசருக்கு. "எழுதிக் கொண்டிருப்பது தெரியவில்லை! என்ன ஐயா, வேண்டும்?"

"ஐந்து பவுன் நகைக்கு அவசரமாகப் பணம் வேண்டும்."

"இதற்குத்தான் இவ்வளவு ஆர்ப்பாட்டமா? இன்றைக்குள்ள கோட்டா முடிந்தது. இனி நாளைக்குத்தான்."

"சார்... அப்படிச் சொல்லிடாதீங்க.... நான் உள்ளூர்தான். மளிகைக் கடை. சரக்குப் போட்ட வியாபாரிக்கு இன்னிக்குத் தவணை சொல்லி யிருக்கிறேன். பணம் கொடுக்கா விட்டால் இப்போதிருக்கும் டிமாண்டுக்கு வெல்ல மூட்டையைத் திரும்ப லாரியில் ஏற்றிக் கொண்டு போய்விடுவான். கொஞ்சம் தயவு பண்ணுங்கள், சார்."

கடை வாயில் எச்சில் நுரை கட்டியாய்த் தேங்கி யிருந்தது மளிகைக் கடைக்காரருக்கு.

"சொன்னால் சொன்னது தான். வேண்டுமானால் ஏஜண்டைப் போய்க் கேளும்." சன்னடிக் கண்டைக் காட்டினார் அப்ரைசர்.

மளிகைக் கடை அங்கே ஓடிப் போய்த் தமது கஷ்ட காலத்தைச் சொன்னார்.

"இது மேலிடத்து உத்தரவு. எங்களால் மாற்ற முடியாது. அவ்வளவு அவசரம் என்றால் முன்னால் வந்து டோக்கன் வாங்கி இருக்க வேண்டும்."

"வேறொரு இடத்தில் ரொம்ப நம்பிக்கையாய் எதிர் பார்த்தேன். இப்போதுதான் இல்லை என்று தெரிந்தது."

"உங்கள் பிரச்னை உங்களுக்கு. எங்கள் கடமை எங்களுக்கு."

"தயவு பண்ணுங்க, சார்..."

"இது பாங்க். மளிகைக் கடை இல்லை. என்னைத் தொந்தரவு பண்ணாதீர்கள்." ஏஜண்ட் சிவப்புப் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டார்.

அந்த ஆசாமி.... பாவம்... ஐந்து பவுன் நகை இருந்தும் அவசரத்துக்குப் பணம் புரட்ட முடியவில்லையே!

''ச்சு....ச்சு....'' கடன் வாங்கப் போகிறவர்கள், கடன் வாங்க முடியாதவரைப் பார்த்து அனுதாபச் சூள் கொட்டினார்கள்.

சுகுமாரன் சட்டென்று எழுந்தான்.

''உங்கள் நிலைமையைப் பார்த்தால் எனக்கு வேதனையாய் இருக்கிறது. ரொம்ப அவசரமா சார்?'' என்று இரக்கம் பொங்க விசாரித்தான்.

''மானம் போகிற அவசரம் தம்பி. பணம் கொடுக்கவில்லையென்றால் வெல்ல மூட்டையைத் திரும்ப எடுத்துக் கொண்டு போய்விடுவான். கடை வீதியில் நாலு பேர் பார்க்க... வெட்கக் கேடு.''

சுகுமாரன் ஆழ்ந்து யோசித்தான். ''வேண்டுமானால் என்னுடைய கோட்டாவில் நீங்கள் லோன் வாங்கிக் கொள்கிறீர்களா?''

அடை மழையில் திடீரென்று சூரியன் பிரகாசித்தது போல் அவர் முகம் மலர்ந்தது. ''நிஜமாகவா தம்பி! என் தர்மதுரை. இந்த உதவியை என் ஆயுளுக்கும் மறக்க மாட்டேன்.''

''என் அப்பா எனக்குச் சொல்லிக் கொடுத்த முதல் பாடமே அவசரத்தில் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்பது தான். ஆகவே இது எனக்குச் சாதாரண விஷயம். பெரிது படுத்தாதீர்கள்.'' சுகுமாரன் நிதானமாகவும், பரம்பரை மிடுக்குடனும் பேசினான்.

உடன்பாடாயிற்று.

சுகுமாரனின் முறை வந்தபோது, மளிகைக் கடை — பெயர் புகழியப்பன் — கவுண்டருக்கு ஓடினார்.



''மகா அதிர்ஷ்டசாலி ஐயா, நீர்.'' அப்ரைசர், பாதிப் பொறுமையுடன் சடங்குகளை முடித்தார்.

புகழியப்பனின் மஞ்சள் மடியில் இரண்டாயிரம் ரூபாய் ஏறிக் கொண்டது. ''ரொம்பவும் நன்றி தம்பி''. நாத் தழுதழுத்தார்.

''பரவாயில்லை. ஆனால்....'' தயங்கினான், குமாரன். ''சொல்ல வேண்டாமென்று பார்க்கிறேன்.''

''அடடே... எதுவானாலும் சும்மா சொல்லுங்கள், தம்பி.''

''உதவி பண்ணிவிட்டுக் கேட்பதாக நீங்கள் நினைக்கக் கூடாது.''

''சத்தியமாய் நினைக்க மாட்டேன். சொல்லுங்கள்.''

''பெரிதாய் ஒன்றுமில்லை. இப்போதைக்கு எனக்கு இருநூறு ரூபாய் இருந்தால் போதும் இதில் — ஆறு வளையல் இருக்கிறது. வைத்துக்கொண்டு உங்கள் முகவரியைக் கொடுங்கள். நாளைக்கு வந்து பாங்கில் வைத்துவிட்டு உங்களுக்குப் பணம் கொடுத்து விடுகிறேன்... சிரமம் என்றால் வேண்டாம்.''

''ஐயையோ... அப்படிச் சொன்னால் என் நாக்குப் புழுத்துவிடும், தம்பி. இந்தாருங்கள் இருநூறு ரூபாய்.'' புகழியப்பன் பரவசத்துடன் ரூபாய் தாள்களை எடுத்துக் கொடுத்தார். ''ஆனால், என்னைத் தேடி நீங்கள் அனாவசியமாய் அலைய வேண்டாம். உங்கள் முகவரியைச் சொல்லுங்கள். நாளைக் காலையில் நானே உங்கள் வீட்டுக்கு வந்து ஆகவேண்டியதைச் செய்வோம்.''

''பரவாயில்லைங்க. நானே வருகிறேன்'' என்றான் குமாரன்.

''வேண்டாம், தம்பி, வேண்டாம். உதவியும் வாங்கிட்டு உங்களை அலையவும் வைத்தால் கடவுள் என்னை மன்னிக்கமாட்டார். உங்கள் அட்ரஸையே சொல்லுங்கள்.''

ரொம்பவும் சங்கோஜத்துடன் தன் முகவரியைச் சொன்னான், குமாரன்.

டைம்ஸ் ஆப் இந்தியாவில் வரி, விளம்பரப் பகுதியில் காலமானவர்கள் என்ற தலைப்பில் என்னுடன் வேலை செய்யும் குஜராத்தி நண்பருடைய பெயரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். 'நேற்றுகூட என்னுடன் ஓட்டலுக்கு வந்து டீ குடித்தாரே இவருக்கு எப்படி மரணம் சம்பவித்தது' என்று எண்ணிக்கொண்டு ஆபீசுக்கு அவசரமாகப் போனேன். ஆபீஸில் அவர் குந்துக் கல்லாட்டும் உட்கார்ந்திருந்தார். எனக்கு அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி. அவரிடம் பேப்பரைக் காண்பித்தேன்.

அவர் சிரித்துக்கொண்டே தாம் தான் அந்த விளம்பரத்தைக் கொடுத்ததாகச் சொன்னார். இப்படிச் செய்தால் ஆயுள் விருத்தியாகுமாம்! குஜராத்தியிடம் இப்படி ஒரு நம்பிக்கையா?

—என். சந்திரசேகர்



புகழியப்பனின் முகத்தில் ஆச்சரியம் படர்ந்தது. ''நீங்கள் இந்த இடத்தில் எத்தனை வருஷங்களா இருக்கிறீர்கள்?''

''நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே இங்கேதான் சார். ஏன்?''

''ஒன்றுமில்லை. இது மிகவும் ராசியான தெரு. அதனால்தான் கேட்டேன். இன்னொரு வேண்டுகோள். மறுக்கக் கூடாது. என்னுடன் நீங்களும் வாங்க. ஹோட்டலுக்குப் போய் விட்டுப் பிறகு கடைக்குப் போகலாம்.''

''நான் அவசரமாகப் போக வேண்டும், சார்.''

''இப்படிச் சொல்வீர்கள் என்றுதான் முதலிலேயே மறுக்கக் கூடாது என்றேன்!'' புகழியப்பன் சிரித்துக் கொண்டே குமாருடன் கைகோத்துக் கொண்டார்.

கடச் கட கிரை வடை. முறுகலுடன் ருசியாய் இருந்தது.

புகழியப்பன் திடுமென்று எழுந்தார். ''கடையில் என் மகன் இருக்கிறான். பணம் கிடைத்த விவரத்தை அவனிடம் சொல்லி விடுகிறேன்'' என்று கல்லாவை நோக்கி ஓடினார்.

போனில் பேசிவிட்டுத் திரும்பினார்.

பில் தொகை கொடுத்துவிட்டு ஹோட்டலை விட்டு இறங்கினர். அவர்களின் முன்பு— போலீஸ் ஜீப் ஒன்று வெற்றிச் சிரிப்புடன் வந்து நின்றது.

புகழியப்பன், ''வணக்கம் இன்ஸ்பெக்டர் ஸார்; இந்த ஆள்தான்'' என்று குமாரனைக் காட்டினார்.

ஜவான்கள் குமாரனை வளைத்துக்கொண்டார்கள்.

''ரொம்ப நன்றி மிஸ்டர், புகழியப்பன். இது ஒரு புது வகையான மோசடி. கடன் கொடுக்கும் பாங்குகளில் முன்னதாகப் போய் டோக்கன் வாங்கிக் கொண்டு, யாராவது கடைசி நேரத்தில் அவசரம் என்று வந்தால் இப்படி உதவி செய்வது போல் ஏமாற்றி விடுகிறார்கள். அது சரி. நகையைப் பார்த்ததுமே உங்களுக்குச் சந்தேகம் வந்து விட்டதா?'' என்று ஆர்வத்துடன் வினவினார், இன்ஸ்பெக்டர்.

''நகையை நான் முதலில் பார்க்கவே இல்லை, சார்.''

''பின்னே?''

''நண்பருடைய வீட்டு முகவரியைக் கேட்டேன்.''

''சொல்லவில்லையாக்கும்?''

''சொன்னாரே, ஆனால், அது என் வீட்டு முகவரி.''

''என்ன?''

''ஆமாம் சார். எனக்குச் சந்தேகம் வந்ததே அதனால்தானே? என் வீட்டு நம்பர், தெரு, எல்லாம் அப்படியே ஒப்புவித்துவிட்டார். பிறகு ஹோட்டலில் கைகழுவும்போது நகையைப் பார்த்தேன். ஹைதராபாத் கில்ட் வளையல் என்று தெரிந்தது. உடனே என் மகனுக்கு போன் பண்ணுவது போல் உங்களுக்குப் பண்ணினேன்'' என்று முறுவல் செய்தார், புகழியப்பன்.

டோக்கன் நம்பர் நான்கை ஜீப்பில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.



தானங்களிலெல்லாம் சிறந்தது அன்ன தானம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் எவ்வளவு பணம் கொடுத்தாலும், வஸ்திர தானம் செய்தாலும், பூதானம் கொடுத்தாலும் வாங்குகிறவன் போதுமென்று சொல்வது கிடையாது. ஆனால் அன்ன தானத்தில் எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவு சாப்பிட்டுவிட்டால் போதும் என்று சொல்லிவிடுவான். ஆனால் இந்த தானத்திலும், ஒருவேளை சாப்பிட்ட பின் அப்பொழுது போதுமென்று சொன்னாலும் கூட, அந்தத் திருப்தி அப்போது மாத்திரம் இருக்குமே தவிர, அடுத்த வேளை பசி வரும் போது மறுபடியும் அன்னத்தில் அபேக்ஷை ஏற்பட்டுத்தான் தீரும்.

ஆகையால் மறுபடியும் அபேக்ஷையே இல்லாமல் நித்ய திருப்தி ஏற்படக்கூடியதாக ஒரு தானமிருந்தால் அதையே எல்லாவற்றுக்கும் மேலான தானம் என்று சொல்லலாம்.

அதோடு கூட, எந்த ஒரு தானமும் அந்த ஒரு பதார்த்தத்தின் அபேக்ஷையை மட்டுமே பூர்த்தி செய்கிறது. இதனால் மற்ற பதார்த்தங்களில் ஒருவனுக்குத் திருப்தி ஏற்படாது. (நிறைய வஸ்திர தானம் செய்துவிட்டு ஆஹாரமே போடாமலிருந்தால் ஒருவன் திருப்தி அடைவானா? அல்லது யதேஷ்டமாக அன்ன பானங்களை மட்டும் கொடுத்துவிட்டு மாற்று வஸ்திரமே தராவிட்டால் ஒருவன் திருப்தி அடைய முடியுமா?) எனவே ஒரு முறை ஒன்றைக் கொடுத்தால் மறுபடி அந்தப் பதார்த்தம் வேண்டும் என்று அபேக்ஷியாத நித்ய திருப்தி ஏற்படுத்துவது மட்டுமின்றி எந்தப் பதார்த்தத்திலும் அபேக்ஷை ஏற்படாத ஸகல காம நிவிருத்தி உண்டாகுமானால் அந்த தானமே பரம சிரேஷ்டமானது என்பதில் என்ன ஸந்தேஹம்?

இவ்விதமாக எக்காலத்தும் எவ்விஷயத்தும் திருப்தியை ஏற்படுத்தக் கூடிய ஒரு தானம் இருக்கிறதா என்றால், இருக்கிறது. அதையே ஞான தானம் என்று சொல்கிறார்கள்.

ஸர்வோத்கிருஷ்டமான இந்த ஞான தானத்தைச் செய்கிற ஸத்குருவுக்கு உபமானம் எது என்று நம் ஆசார்யாள் (ஸ்ரீ சங்கர பகவத்பாதர்) சொல்கிறார்கள். சிஷ்யனையும் தன்னொத்த ஞானியாக்கிவிடுகிற ஆசார்யருக்கு, தன்னிடம் வைக்கிற இரும்புத் துண்டையும் ஸ்வர்ணமாக்குகிற ஸ்பரிச மணியை உபமானமாகச் சொல்லலாமா என்றால் அதுகூடப் போதாது என்று ஆசார்யாள் சொல்கிறார். ஏன்? ஸ்பரிச மணி இரும்பைத் தங்கமாகத்தான் ஆக்குமே தவிர இன்னொரு ஸ்பரிச மணியாக ஆக்காது. அதாவது அந்த இரும்புத் துண்டு தன்னால் தங்கமானாலும் மற்ற இரும்புத் துண்டுகளை அதனால் தங்கமாக்க முடியாது. குருவிடமிருந்து ஞான தானம் பெற்று அவர் போலவே ஞானியானவனோ தானும் இந்தத் தானத்தைச் செய்து மற்றோரையும் ஞானியாக்கி விடுகிறான் அல்லவா?

குருவின் பெருமை தன்னைச் சரணடைந்த சிஷ்யனைத் தனக்கு எவ்விதத்திலும் ஸமானமாக்கி, அந்த சிஷ்யனுக்கு ஏற்படும் சிஷ்யர்களையும் அதே பதவிக்கு உயர்த்தும் வல்லமையையும் அவனுக்குத் தருவதே.

(அமைப்பு: ரா. கணபதி)

ஸைபர், ஸைபர், ஸைபர்...


மிக மிகப் பெரிய எண் எது? அப்படி ஓர் எண் இருக்கிறதோ இல்லையோ, அதற்கு ஒருபெயர் இருக்கிறது.

மில்லியன் என்பது (அமெரிக்க முறைப்படி) பத்து லட்சத்தைக் குறிக்கும். அதாவது ஒன்றுக்குப்பின் ஆறு ஸைபர்கள். அத்துடன் மேலும் மூன்று ஸைபர்கள் சேர்ந்தால் அது பில்லியன். இப்படியே மூன்று மூன்று ஸைபர்கள் விதம் சேர்ந்து கொண்டே வரும் எண்களுக்குத் தனியாகப் பெயர்கள் உண்டு.

Trillion — 1க்குப்பின் 12 ஸைபர்கள்
Quadrillion— 1க்குப்பின் 15 ஸைபர்கள்
Quintillion — 1க்குப்பின் 18 ஸைபர்கள்
Sextillion — 1க்குப்பின் 21 ஸைபர்கள்

கடைசியில் இதுபோல் ஒன்றைத் தொடர்ந்து 303 ஸைபர்கள் வரும் மிக நீளமான எண்ணுக்கு Centillion என்று பெயர். இதைவிட பெரிய எண்களைப் பொதுவாக மிக மிகப் பெரிய எண் என்ற பொருளில் Zillion என்று குறிப்பிடுகிறார்கள்.

-எம். சிவசுப்ரமணியன்


தீராத

விளையாட்டுப் பிள்ளை...



அவள் ஓர் ஏழைப்பெண். தினசரி நூல் நூற்று, அதை விற்று வாழ்ந்து வந்தாள். தினமும் அவள் குடிசையின் வழியே பண்டிதர் ஒருவர், ஜயதேவரின் கீத கோவிந்தப் பாடல்களைப் பாடிச் செல்வது வழக்கம். அந்தப் பெண் அப் பாடல்களில் லயித்து, கண்ணனை நினைத்து, நாள் முழுதும் தானும் அப் பாடல்களைப் பாடிய வண்ணமே நூற்றுக் கொண்டிருப்பாள். அவளது தூய பக்தியில் கட்டுண்ட கண்ணன், ஓர் குறும்பு மிக்க சிறுவனாக அங்கே வந்து, அவள் நூற்ற நூல்களை இழுத்தும், அறுத்தும், சிக்கல் செய்தும் விளையாடிக் கொண்டிருப்பான். பால கிருஷ்ணனின் குறும்புகளை மிகவும் ரசித்து மகிழ்வாள் அப்பெண்ணும். கண்ணன் கை பட்ட நூல் கண்டுகள் சந்தையில் நன்கு விற்பனை ஆயின.

வழக்கமாகப் பாடிச் செல்லும் பண்டிதர் ஒரு நாள் அவள் குடிசைக்கு வந்து, அவள் நூற்ற நூல்கள் அறுபட்டுக் குவிந்து கிடப்பதன் காரணத்தைக் கேட்டார். அவள் புன்னகையுடன், ''இதெல்லாம் கண்ணனின் விளையாட்டு" என்றாள். ஆச்சரியம் கொண்ட பண்டிதர் நம்பவில்லை. ''என்ன! அனுதினமும் கண்ணனையே துதிக்கும் எனக்கே காட்சி தராத கண்ணன், படிப்பறிவு இல்லாத உனக்கு காட்சி தந்து விளையாடுகிறானா? எங்கே, எனக்கும் காட்டு அவனை." என உரைத்தார். அதற்கிணங்கி, அவளும் கண்ணனை வற்புறுத்தி, அப்பண்டிதருக்குக் காட்சியளிக்கச் செய்தாள். ஆழ்ந்த பக்திக்கு மட்டுமே கண்ணன் கட்டுப்படுவான் என்பதை அப்பண்டிதரும் உணர்ந்தார்.

—கீத கோவிந்தத்தில் ஒரு உபகதை

நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம், காலம் காலமாக வந்த இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றுகிறது. நேர்மையே இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை. ''செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்" என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம்.

லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்.

தெலுங்கு மொழி தெரிந்திருக்க வேண்டிய தில்லை. மனித இதயம் இருந்தால் போதும் படத்தைப் பார்த்து ரசிக்க.

இந்த வண்ணப் படத்தில் அருமையான கதை இருக்கிறது. பரிசுத்தமான அன்பு இருக்கிறது; கர்நாடக சம்பிரதாயமான இசை இருக்கிறது; பக்தி இருக்கிறது; ஆத்ம நிவேதனம் இருக்கிறது; அற்புதப் பாத்திரப் படைப்பு இருக்கிறது; இதய நெகிழ்ச்சி இருக்கிறது; மகிழ்ச்சியும் இருக்கிறது. வேறு என்ன வேண்டும்?

சங்கராபரணம் சங்கர சாஸ்திரியார் என்ற இசை மேதையின் வாழ்க்கைப் பாதையில் நேர்ந்துவிட்ட ஏற்றத் தாழ்வுகளை நேருக்கு நேர் சந்திக்கும்போது மனம் நெகிழ்ந்து போகிறோம். அவரது தெய்வீக இசையில் ஒன்றிப் பிணைந்துவிட்ட துளசி என்ற விலை மகளின் மாசு மருவற்ற அன்பு, அவள் தன் மகனை அந்த இசை மேதையிடம் சேர்த்த உருக்கமான சம்பவம், சாஸ்திரியாரின் ஏக புத்திரி சாரதா, அவளது கரம் பற்ற விரும்பும் பள்ளிக்கூட உபாத்தியாயர், அவர்களது திருமணத்துக்கு ஏற்படும் தடை, இரைக் கதையோடு இயைந்து நிற்கும் நகைச்சுவை, துளசி மறைமுகமாகச் சாஸ்திரியாரின் கடன்களைத் தீர்க்க உதவுவது எல்லாமே படத்தின் சுவையான பகுதிகள்.

சாஸ்திரோக்தமான சங்கீதத்துக்கு ஆக்கம் அளிக்கும் இப்படம் லய சுத்தமான பரத நாட்டியத்துக்கும் ஊக்கம் அளிக்கிறது.

சங்கர சாஸ்திரியாராக வரும் ஜே. வி. சோமயாஜுலு வின் நடிப்பு பற்றிக் கூறுவதென்றும் நமது கர்நாடக சங்கீதம் எவ்வளவு சிறப்புடையதோ அப்படி அவர் ஆற்றலும் மிளிர்கிறது என்றுதான் கூறவேண்டும்.

மஞ்சு பார்கவி துளசி. துளசி பேசும் வாக்கியங்கள் நாலைந்துதான். — மற்றவைகளை யெல்லாம் அவளது அகன்ற விழிகள் பேசுகின்றன; கண்ணீர் பேசுகிறது. அவள் எந்த ஒரு காட்சியிலும் சங்கர சாஸ்திரியாரிடம் வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நடன அசைவுகளையும் முத்திரைகளையும் நன்கு பிடித்துக் காட்டியிருக்கிறார். கடைசிக் காட்சியில் அந்த இசை மேதையின் உயிர் கச்சேரி மேடையிலேயே பாடிக் கொண்டிருக்கும்போதே பிரிந்துவிடுகிறது; துளசியின் ஆத்மாவும் அந்தப் பரிசுத்த ஆத்மாவைத் தொடர்ந்து விடுகிறது. இதற்கு அப்புறமும் துளசியின் நினைவு, துளசியின் மணமாக நிறைந்து நிற்கிறது.

இந்தப் படத்தின் டைரக்டர், கதாசிரியர் வசன கர்த்தா எல்லாம் கே. விசுவநாத் அவர்கள்தான். ''ஓ சீதா கதா'', ''சீதா மகாலக்ஷ்மி'', ''சிரி சிரி முவ்வா'' முதலிய வெற்றிப் படங்களைப் படைத்தளித்த அதே கே. விசுவநாத் தான்!

மேற்கத்திய பாணி மெல்லிசையை 'வல்லிசை'யாகப் பாடும் இளைஞர் குழுவினருக்கு சங்கர சாஸ்திரியார் நம் கர்நாடக இசைப் பாணியிலேயே ஸ்வரம் அமைத்துப் பாடிக் காட்டிய பாணி மிகவும் சுவையான நிகழ்ச்சி.

துளசியின் மகனாக நடிக்கும் துளசிராம் அருமையாக நடித்திருக்கிறான்.

சங்கராபரணம்



பிரபல பின்னணிப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் பிரபல பின்னணிப் பாடகிகள் வாணி ஜயராம், எஸ். ஜானகி, சைலஜா ஆகியோர் குரல்கள் இந்தப் படத்துக்கு மெருகு சேர்த்திருக்கின்றன.

சங்கராபரணத்தின் சங்கீத டைரக்டர் திரை இசைத் திலகம் கே. வி. மகாதேவன். அவருக்கும் பின்னணிப் பாடகர்களான எஸ். பி. பாலசுப்பிரமணியத்துக்கும் வாணி ஜயராமுக்கும் தேசிய விருது கிடைத்திருப்பதற்காக அவர்களைப் பாராட்டுவதா? அரசைப் பாராட்டுவதா?

ஒரு சிறந்த படம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அந்த மாதிரியே விளங்கும் ''சங்கராபரணம்'' அபூர்வமாக சிலவே மலரும் குறிஞ்சி மலர். **-காந்தன்**

சங்கராபரணத்தில் சம்பந்தப்பட்டவர்கள்





கே. வி. மகாதேவனைப் பற்றி வாணி ஜெயராம்

என்னுடைய சின்ன வயசிலிருந்தே நான் திரு கே. வி. மகாதேவன் அவர்கள் இசையமைத்த பல்வேறு சினிமாப் பாடல்களைக் கேட்டு அதைப் பாடிப் பார்த்துக் கொண்டவள். கந்தன் கருணை, திருவிளையாடல், போன்ற பல படங்களுக்கு கே. வி. மகாதேவன் அமைத்த இசை மறக்க முடியாதவை. அதிகம் பேசமாட்டார். சிறு வயதிலிருந்தே சாஸ்திரீய சங்கீதத்தைக் கற்றவள் என்பதால் சங்கராபரணம் பாடல்களைப் பாடும் போது மனத்தில் ஒரு நிறைவு ஏற்பட்டது. 'அபூர்வ ராகங்கள்' படத்தில் ஏழு ஸ்வரங்கள் பாடல் பாடிய பிறகு இப்படத்தின் பாடலில் தான் எனக்கு மன நிறைவு ஏற்பட்டது.

டைரக்டர் விஸ்வநாத்தைப் பற்றி கே. வி. மகாதேவன்

இது முழுக்க முழுக்க டைரக்டர் விசுவநாத்தின் படம். காரணம் ஒவ்வொன்றையும் அணு அணுவாகச் சிந்தித்து முடிவு செய்திருக்கிறார். ஒரு நாள் ப்ரோசேவா பாடல் பதிவு நடந்து கொண்டிருந்தது. வாணி ஜெயராமும் எஸ். பி. பாலசுப்ரமணியமும் பாடிக் கொண்டிருந்தார்கள். முதல் டேக்கிலேயே ஓ.கே. ஆனாலும் விஸ்வநாத்துக்கு ஏனோ அது சரியாகப் படவில்லை. வாணி ஜெயராமிடம் சென்று ''நீங்கள் சிறப்பாகப் பாடுகிறீர்கள். அதில் சந்தேகமே யில்லை. ஆனால் இந்தப் படத்தின் கதையைப் பொறுத்த வரை நீங்கள் ஒரு குழந்தையாகவும் பாடலை இப்பொழுதுதான் கற்றுக் கொள்வது போலவும் இருக்க வேண்டும்'' என்றார். இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் ஊன்றிக் கவனித்துப் படத்தை எடுத்திருக்கிறார்.

டைரக்டர் விஸ்வநாத் எஸ். பி. பாலசுப்ரமணியத்தைப் பற்றி:

மூன்று வருடங்களுக்கு மேலாக சங்கராபரணத்தின் கதை என்னுள் உருவாகிக்கொண்டிருந்தது. அதில் என் ஒன்றுவிட்ட சகோதரர் எஸ். பி. பாலசுப்ரமண்யம்தான் பாட வேண்டும் என்று நான் அன்றே முடிவு செய்தேன். காரணம் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்பப் பாடுவதிலும் தம் குரலை இஷ்டப்படி யெல்லாம் ஆள்வதிலும் பாலசுப்ரமண்யம் தேர்ந்தவர். தனக்கு சாஸ்திரீய சங்கீதத்தில் ஈடுபாடு இல்லை என்று அவர் கூறினாலும் உண்மை அதுவல்ல. முறைப்படி கற்காமலிருந்திருக்கலாமே யொழிய ஞானம் உண்டு. மற்றப் பின்னணிப் பாடகர்களுக்கு இவர் ஒன்றும் குறைந்தவர் அல்ல.


வாணி ஜெயராம், எஸ். பி. பாலசுப்பிரமணியம், கே. வி. மகாதேவன், இயக்குநர் கே. விஸ்வநாத்.

வாணி ஜெயராமைப் பற்றி எஸ். பி. பாலசுப்ரமண்யம்:

சங்கராபரணத்தில் என்னுடன் பாடிய எஸ். ஜானகி, வாணி ஜெயராம் இருவருமே அனுபவமிக்கவர்கள். சாஸ்திரீய சங்கீதத்தை அப்யசித்தவர்கள். சங்கராபரணம் படத்தில் நான் ஆசிரியராகவும் வாணி ஜெயராம் என்னிடம் கற்றுக் கொள்வது போலவும் ஒரு இடம் வருகிறது. நான் டைரக்டரிடம் சிரித்துக் கொண்டே கூறினேன்: ''படத்தில் வேண்டுமானால் இப்படிக் காட்சி அமைக்கலாம். ஆனால் உண்மையில் அவர் கற்றுக் கொடுக்க நான் கற்றுக் கொள்ளும் நிலையில் அல்லவா இருக்கிறேன்''!

பேட்டி: **சலன்**

3

ரவிக்குக் கை கால் ஓடவில்லை. ரிஸீவரை டெலிபோனின் மீது வைத்துவிட்டுப் பிரமை பிடித்தவன் போல் அப்படியே நின்றுவிட்டான்.

''என்ன ரவி! என்ன சமாசாரம்?'' என்று கேட்டுக் கொண்டே ராமு அவன் அருகில் வந்தான்.

ரவி விஷயத்தைச் சொன்னான்.

''அப்படின்னா புறப்படு. ஏன் நின்னுண்டிருக்கே?'' என்று ராமு கூறியதும்தான் ரவிக்குச் சுய நினைவு வந்தது போலாயிற்று.

ரவி மானேஜரின் அறையை நோக்கிச் செல்வதைக் கண்ட ராமு, ''அதெல்லாம் வேண்டாம், ரவி. நீ போ. நான் மானேஜரிடம் விஷயத்தைச் சொல்லிக்கிறேன்'' என்றான்.

தொடர்ந்து ராமு சொன்னான்: ''சம்பளம் வாங்கிண்டு போ: செலவுக்கு ஏதாவது பணம் வேண்டியிருக்குமோ என்னவோ.''

கேஷியர் ராமானுஜம் அவசரம் அவசரமாக ரவியின் சம்பளத்தை எண்ணிக் கொடுத்து ரிஜிஸ்டரில் அவன் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டான்.

வாசல் வரையில் ராமுவும் ரவியுடன் வந்தான்.

''நீ போ. நானும் கொஞ்ச நேரம் கழிச்சுப் பின்னாலேயே வரேன்...''

ரவி சைக்கிளில் ஏறி அமர்ந்து கொண்டு பெடலை மிதித்தான்.

ராயப்பேட்டை. டவர் கிளாக்கை நெருங்கும்போது ''ரவி'' என்ற குரலைக் கேட்டுச் சைக்கிளை நிறுத்தினான்.

எதிரே பானு நின்றிருந்தான்!

''அண்ணா!'' — ரவியால் மேற்கொண்டு விஷயத்தைச் சொல்ல முடியவில்லை.

''என்னடா, மூணு மணிக்கு நான் வருவேங்கறதுக்காக நைஸா சொல்லாம கொள்ளாமக் கிளம்பிட்டியா? கெட்டிக்காரன்தான். எங்கே போறே?'' என்று குரூரமாகக்கேட்டான்பானு.

ஹேமா ஆனந்ததீர்த்தன்

இரக்கமற்ற இரவுகள்



''இல்லேண்ணா, உனக்குப் பயந்துண்டு நான் ஓடல்லே.''

''பின்னே?''

''அப்பாவுக்குத் திடீர்னு உடம்பு சரியில்லையாம். ஸ்கூல்லேந்து வீட்டுக்குக் கூட்டிண்டு வந்திருக்காளாம். டாக்டர் வந்து பார்த்துண்டிருக்காராம். அதுக்காகத்தான் போயிண்டிருக்கேன்.''

''அசம்பளம் வாங்கிண்டியா இல்லியா?''

ரவியின் உடலெல்லாம் பற்றி எரிந்தது

''அப்பாவுக்கு என்ன உடம்பு?'' என்று அண்ணா விசாரிக்கவில்லை. ''சரி, நீ போ வீட்டுக்கு. பின்னாலேயே நானும் வரேன்'' என்றும் சொல்லவில்லை. ''சம்பளம் வாங்கிட்டியா?'' என்று கேட்கிறான்!

''இல்லேண்ணா'' என்று துணிந்து பொய் சொன்னான் ரவி.

''ஏண்டா பொய் சொல்றே? வாங்கியிருப்பே. மஜா பண்றதுக்குத்தான் சீக்கிரமா பர்மிஷன் கேட்டுண்டு வீட்டுக்குப் போயிண்டிருக்கே. நான் கேட்ட நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு எங்கே வேணுமானாலும் போ. அநாவசியமாப் பொய் சொல்லாதே'' என்றான்.

ரவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் தமையன் இவ்வளவு இதயமற்றவனாகவா போக வேண்டும்? அங்கு நின்று அவனோடு தர்க்கம் புரிந்து கொண்டிருக்கவும்நேரமில்லை. பணம் கொடுக்காவிட்டாலும் பாலு விடமாட்டான்.

''இல்லேண்ணா, நிஜமாத்தான் சொல்றேன். சம்பளம் கொடுத்திண்டிருந்தா. வாங்கப் போயிண்டிருக்கச்சே இப்படி ஃபோன் வந்ததனாலே நான் அவசரமாப் புறப்பட்டுட்டேன். நான் வரட்டுமா?'' என்று சைக்கிளில் ஏறப் போனான்.

''அப்பநாளைக்குச்சம்பளம் வாங்கிடுவே?''

''ஊம்!''

''டேய்.''

''என்னண்ணா?''

''உங்கிட்ட இப்ப வேறே ரூபாய் ஒண்ணுமே இல்லியா?''

மேலும் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்க ரவிக்கு மனம் பொறுக்கவில்லை. பாலுவின் பிடியிலிருந்துவிடுபட்டுப் போக வேண்டுமானால் அவனுக்கு ஏதாவது காணிக்கை அர்ப்பித்தே ஆக வேண்டும் என்பதை உணர்ந்தான்.



''இருபது ரூபாய் இருக்கு அண்ணு. வேணும்னு எடுத்துக்கோ. நான் போகணும்'' என்ருன்.

''சரி அதை எடு. பாக்கி எண்பது ரூபாய் நாளைக்கு பாங்குக்கு வந்து வாங்கிக்கிறேன்'' என்று கூறி ரவி கொடுத்த இருபது ரூபாயைப் பெற்றுக் கொண்டான்.

''அண்ணு நீ வீட்டுக்கு வர்லியா? அப்பாவுக்கு உடம்புக்கு என்ன ஏதுன்னு பார்க்க வேண்டாமா?''

''என்ன ஆயிருக்கப் போறது அவருக்கு? ஒரு மண்ணும் இருக்காது. நாளைக்கு நான் பாங்குக்கு வரேன்'' என்று பாலு போய் விட்டான்.

ரவி வீட்டை நோக்கிக் கிளம்பினன்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

ராகவன் கட்டிலில் படுத்திருந்தார். அவரது கால்மாட்டில் ஜானகி உட்கார்ந்து கொண்டு அவரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. முகமெல்லாம் வீங்கியிருந்தது. நன்ருக அவள் அழுதிருக்க வேண்டும் என்பதை அந்தக் கோலம் தெளிவாகக் காட்டியது.

பலராமனும் உமாவும் கூடத்தில் ஆளுக்கொரு தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தனர். பலராமன் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது. உமா கண்களைக் கசக்கிக்கொண்டிருந்தாள். இன்னும் அழுது கொண்டிருப்பதாகத் தோன்றியது.

ரவி கட்டிலின் அருகில் சென்று தகப்பனரைப் பார்த்தான். அவனைக் கண்டதும் அவருடைய கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் பெருக்கெடுத்து விட்டது. தம் வலது கையால் அவனது இடது தோளைப் பற்றிக் கொண்டார்.

''அழாதீங்கப்பா. டாக்டர் என்ன சொன்னர்? உங்களுக்கு என்ன ஆச்சு? இப்ப எப்படி இருக்கு?'' என்று தொண்டை அடைக்கக் கேட்டபடி ரவி அவரது கண்களைத் துடைத்தான். அவன் துடைக்கத் துடைக்க அவர் கண்களிலிருந்து மேலும் மேலும் நீர் பெருகிக்கொண்டே இருந்தது. அவர் ஏதோ சொல்ல முற்படுவதையும் ஆனல் வாயிலிருந்து வார்த்தைகள் ஒன்றும் வெளி வராததையும் கவனித்தான்.

''டாக்டர் வந்தாரா? என்ன சொல் விட்டுப் போனர்?'' என்று தாயாரைக் கேட்டான் ரவி.

''உன்னை டிஸ்பென்சரிக்கு வரச் சொல்லியிருக்கார்.''

''என்ன ஆச்சாம்?''

''ஸ்கூல்லேந்து வந்தவா சொன்னது தான். உங்கப்பா இதுவரைக்கும் வாயே திறக்கலே. பாடம் நடத்திண்டே இருக்கச்சே உடம்பெல்லாம் அநியாயமாய் வலிக்கிறதுன்னு சொல்லி உட்கார்ந்துட்டாராம். பொறுக்க முடியாத வலின்னு சொன்னராம். ஹார்ட் அட்டாக்கா இருக்குமோன்னு பயந்து உடனே டாக்டருக்குச் சொல்லி அனுப்பிச்சிருக்கா. டாக்டர் வர்றதுக்குள்ளே ஃபிட்ஸ் மாதிரி வந்ததாச் சொல்ருசிலபேர். சிலபேர் அதெல்லாம் இல்லேங்கரு. சரியாத் தெரியலே. மயக்கமா விழுந்துட்டாராம். டாக்டர் இன்ஜெக்ஷன் போட்டிருக்கார். அவருக்குப் பேச வரலியா. வேற என்னமோ ஒண்ணும் தெரியலே'' என்று ஜானகி அழுது கொண்டே கூறினள்.

''யாரு டாக்டர்?''

''ராமசாமிதான்.''

''சரி, நான் போய்க் கேட்டுண்டு வரேன்'' என்று கூறி உடனே ரவி டாக்டரின் டிஸ்பென்சரிக்குப் புறப்பட்டான்.

நல்ல வேளை டாக்டரின் டிஸ்பென்சரியில் இன்னும் கூட்டம் வர ஆரம்பித்திருக்கவில்லை. ஐந்து மணிக்கு மேல்தான் சாதாரணமாக நோயாளிகள் வர ஆரம்பிப்பார்கள்.

''குட் ஈவினிங் டாக்டர்.''

''வா ரவி. கம் இன்.''

''வரச் சொன்னேளாம். அப்பாவுக்கு உடம்புக்கு என்ன?''

''ஐ ஆம் அஃப்ரெய்ட் இட் ஈஸ் எ கேஸ் ஆஃப் பராலிடிக் ஸ்ட்ரோக்.''

ரவி துணுக்குற்ருன்.

''பரவாயில்லே. பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லேன்னு நினைக்கிறேன். ஆனு ரொம்ப நாளைக்கு பெட்லேதான் இருக்க வேண்டியிருக்கும்.''

''பேசவே யில்லையே.''


''நாக்கும் அஃபெக்ட் ஆகியிருக்கலாம். ஆனு ட்ரீட்மெண்டுக்கு அப்புறம் பேசினலும் பேசலாம். ஒண்ணும் இப்ப நிச்சயமாச் சொல்ல முடியாது. அப்படிப் பேச்சு வந்தாலும் முன்னைப் போல ஸ்பஷ்டமாப் பேச வரும்னு சொல்ல முடியாது. எனவே, உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லே. அது நிச்சயமா நான் சொல்ல முடியும்.''

ரவிக்கு மேற்கொண்டு என்ன கேட்கவேண்டும் என்று புரியவில்லை. பிரமை பிடித்தவன் போல டாக்டரின் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

திமிங்கிலங்கள் மனிதரைப் போலவே வாழ்க்கை முறை கொண்டவை. காதல் தோல்வி வாழ்வில் சலிப்பு இவையெல்லாவற்றையும் சந்திக்கின்றன. விரக்தியுற்ற வாழ்வுக்கு மனிதன் தற்கொலையை மருந்தாகக் கொள்வது போல அவைகளும் தற்கொலை செய்து கொள்கின்றன.

—அனிமல் வொர்ல்டு

—முத்து



''ஐ ஆம் வெரி சாரி ரவி'' என்றார் டாக்டர்.

''எழுந்து நடமாடறதுக்கு ரொம்ப நாள் ஆகும்னு நெனைக்கிறேளா?'' என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டான்.

''எஸ். லெப்ட் ஸைட் அஃபெக்ட் ஆகியிருக்கு. ஹி மே பிகம் என் இன்வேலிட். கவலைப்படாதே. ஐ வில் டு வாட் ஆல் இஸ் பாஸிபிள்.''

''வர்றேன் டாக்டர்'' என்று விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான் ரவி.

ஓராயிரம் கவலைகள் அவன் மண்டையைக் குடைய ஆரம்பித்தன. தன் தகப்பனாரால் இனிப் பேச முடியாது! அவனால் அதை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. விஷ்ணு சகஸ்ரநாமம், சுந்தர காண்ட சுலோகங்கள், உபநிஷத்துகள், கீதை இவைகளையெல்லாம் கணீரென்ற குரலில் அட்சர சுத்தமாக அர்த்தம் தெரிந்து பாராயணம் செய்து வந்த அவர் நாக்கு இனிப் புரளாது! ஆண்டவனே, இது என்ன சோதனையா, விளையாட்டா? நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு சம்ஸ்கிருதமும், கணிதமும், விஞ்ஞானமும் போதித்து அறிவை மூட்டிய அவர் நாக்கு இனி என்றுமே அசையாதாமே? ஐயோ, இதென்ன கொடுமை!

''ஹி மே பி என் இன்வேலிட்'' — டாக்டர் கூறிய இந்தச் சொற்கள் அவன் மண்டையைப் புழுக்கள் போல் அரிக்கத் தொடங்கின. அப்படி யென்றால் இனி காலத்துக்கும் அவர் படுக்கையில் கிடக்க வேண்டியவர் தானா?

அப்படி யென்றால் அவருடைய உத்தியோகம்? மாதம் முந்நூற்றி ஐம்பதோ நானூறோ சம்பளமாயிற்றே! அவனுக்குச் சரியாகத் தெரியாது. அது குறைந்துபோய் விட்டதென்றால் குடும்பம் எப்படி நடக்கும்? அவனுடைய சம்பளத்தில் மட்டுமே இனிக் குடும்பச் செலவுகளை நிர்வகிக்க வேண்டும். முதல் மாதம் தான் சம்பளம் வாங்கியதுமே அப்பாவின் சம்பளம் நின்றுபோக வேண்டுமா?

உமா, உஷா இவர்களின் படிப்பு, கல்யாணம் இதெல்லாம் எப்படி நடக்கும்? அப்பாவுக்கு ஃப்ராவிடண்ட் ஃபண்டு, கிராச்சுவிடி என்றெல்லாம் ஏதாவது கிடைக்குமா? அது இரு சகோதரிகளின் கல்யாணத்துக்குப் போதுமா? அவன் தன் தகப்பனாரிடம் அவருடைய பொருளாதார நிலைமையைப் பற்றி ஒரு நாள் கூடப் பேசியதே இல்லை. அவரும் அவனிடம் சொன்னதில்லை. ஆனால் அவருக்குச் சேமிப்பு ஒன்றும் கிடையாது என்பது மட்டும் அவனுக்குத் தெரியும்.

அப்படியானால் எவ்வளவு பெரிய பொறுப்பு இப்போது தன் தலைமீது விழுந்திருக்கிறது.! தகப்பனாரின் வைத்தியம், தங்கைகளின் படிப்பு அவர்களின் கல்யாணம் இவைகளையெல்லாம் தன்னால் நிர்வகிக்க முடியுமா?

அப்படியானால் தன் கல்யாணம்? ராதாவைத் தான் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? உமா, உஷா இவர்களின் கல்யாணம் ஆவதற்கு முன்னால் தான் கல்யாணம் செய்து கொண்டால் நன்றாயிருக்குமா? அவர்கள் கல்யாணம் ஆகும்வரையில் ராதா தனக்காகக் காத்திருப்பாளா? அவள் காத்திருக்கத் தயாராக இருந்தாலும் அவள் பெற்றோர்கள் அனுமதிப்பார்களா? தனக்கு மன உறுதி இருக்குமா? ராதாவின் மனம் மாறாமல் இருக்குமா?

கேள்விகள், கேள்விகள், கேள்விகள். ஒன்றன் பின் ஒன்றாகக் கேள்விகள்தான் எழுந்



அதிர்ஷ்டசாலி ரூபா!

ரூபா அதிர்ஷ்டசாலி. எப்படி என்று கேளுங்கள்.

உத்ரா ஒரு குடும்ப நிகழ்ச்சியைப் படம் பிடிக்க அழைப்பின்பேரில் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தார். அங்கு வந்திருந்த பக்கத்து வீட்டுக்காரர், ''இங்கு காரியம் முடிந்ததும் வாருங்களேன்; நம் வீட்டிலும் ஒன்றிரண்டு படங்கள் எடுக்கணும்'' என்றார். உத்ராவுக்கு வேறு ஒரு காரியம் இருந்தது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. இருந்தாலும் அன்பான அழைப்பைத் தட்ட முடியாமல் போனார். அவர்கள் விரும்பிய படங்களை எடுத்தார். ரூபாவைப் பார்த்தபோது, அட இவ்வளவு கலர்ஃபுல்லாக டிரெஸ் செய்து கொண்டிருக்கிறார். ஒரு வண்ணப் படம் எடுத்து வைப்போமே என்று கலர் ஃபிலிம் 'லோட்' பண்ணியிருந்த வேறு காமிராவை எடுத்துக் கிளிக் செய்தார்.

ஜஸ்ட் லக் தட். இதில் ஒரு ஸெட் அப்பும் இல்லை! ஆனாலும் பாருங்கள், இன்று அப்படம் கல்கி மேலட்டையை அலங்கரிக்கிறது!

ஆந்திரா பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ள ரூபா அணிந்திருப்பது கண் பார்வையை நேராக்கும் மூக்குக் கண்ணாடி அல்ல. வெய்யிலுக்கான கூலிங் கிளாஸ்தான். கண்களை மறைத்துவிடாத லைட் நிறமாக இருந்தாலும் வெய்யிலுக்கு நல்ல பாதுகாப்பு தருகிறது.

புடவைக்கு மாட்ச் ஆகும் பிளவுஸ் அணிவது போல டிரெஸ்ஸுக்கு மாட்ச் ஆகும் தொப்பி அணிவது இந்தக் கோடைக்கு அவசியம்தானே!

தனவே யொழிய ஒரு கேள்விக்காவது பதில் இடைக்கவில்லே.

வீட்டுக்குத் தான் மூத்த பிள்ளையாகப் பிறக்கா விட்டாலும் மூத்த பிள்ளைக்கு இருக்க வேண்டிய பொறுப்புக்கள் எல்லாம் தன்மீது வந்து விழுந்துவிட்ட நிலையை எண்ணிப் பார்த்தான். வீட்டுக்கு மூத்த பிள்ளையான பாலுவிடமிருந்து இந்த நிலே யில் தான் ஏதாவது உதவியை எதிர்பார்க்க முடியுமா? அவனிடமிருந்து எந்த வகை யிலும் உபத்திரவம் இல்லாமல் இருந்தால் போதும். அதுவே பெரிய உதவியாக எடுத் துக்கொள்ள வேண்டியதுதான்.

''என்ன ரவி! டாக்டர் என்ன சொன் ஞர்?'' என்று கேட்டபடி ராமு அவன் எதிரே வந்து நின்றதும் ரவி திடுக்கிட்டுத் தன் நினைவுகளிலிருந்தும் விடுபட்டுச் சூழ் நிலேயில் கவனத்தைப் பெற்ருன்.

டாக்டர் கூறியதை ரவி ராமுவிடம் சொன்ஞன். ராமுவின் முகமும் அதைக் கேட்டுக் கறுத்து விட்டது. இருவரும் பேசா மல் வீட்டை நோக்கி நடந்தனர்.

''உனக்கு ஒரு ஃபோன் கால் வந்தது. நீ புறப்பட்டுப் போனதுக்கப்புறம்'' —ராமு சொன்ஞன்.

''யார் கிட்டேந்து?''

''ராதா'' — ராமுவின் முகத்தில் புன்னகை அரும்பிய போதிலும் சந்தர்ப்பத்தை உத் தேசித்து உடனே அதை மறைத்துக்கொண் டான்.

காலேயில் தான் அவளேக் கோயிலில் சந் தித்தபோது சாயங்காலம் ஃபோன் செய்வ தாகச் சொல்லியிருந்தது ரவியின் நினைவுக்கு வந்தது.

''என்ன சொன்ஞள்?''

''ஒன்ஞும் சொல்லலே. நல்ல வேளே கால் வந்ததும் நான்தான் அதை ரிஸீவ் பண்ணினேன். வேறு யாராவதா இருந்தா நீ இல்லேன்னு சொல்லி ரிஸீவரை வெச் சுட்டிருப்பாங்க.

''ஊம்.''

''சமாசாரம் ஒன்ஞும் இல்லே. நான் ரிங் பண்ணதாச் சொல்லுங்கோ போதும்னு. உங்கப்பா சமாசாரத்தைக் கேட்க ரொம்ப வருத்தமா யிருப்பதாகச் சொன்ன. நாளைக்கு நீ ஆபீசுக்கு வருவியான்னு கேட்டா''

''அதுக்கு நீ என்ன சொன்னே?''

''நான் என்ன சொல்ல முடியும்? தெரி யாது. அவுங்கப்பாவுக்கு உடம்பு எப்படி இருக்கோ அதைப் பொறுத்திருக்கு அப் படின்னேன்.''

பிறகு இருவரும் ஒன்றும் பேசவில்லே. வீடு வந்ததும் உள்ளே நுழைந்தனர்.

உஷாவும் காலேஜிலிருந்து திரும்பி வந்து விட்டிருந்தாள். கூடத்தின் ஒரு மூலேயில் அவள் உட்கார்ந்து கண்களேக் கசக்கிக் கொண்டிருந்ததை ரவி கவனித்தான்.

''டாக்டர் என்ன சொன்ஞர்?'' என்ற கேள்வி பலராமன் வாயிலிருந்தும் மற்ற வர்கள் கண்களிலிருந்தும் வெளிப்பட்டது. ரவி வேறொன்றும் சொல்லாமல் ''உயிருக்கு ஒன்ஞும் பயமில்லேன்னு சொன்ஞர்'' என்று மட்டும் சொல்லிவிட்டுத் தன் அறைக்குச் சென்றுவிட்டான். ராமுவும் அவன் பின்ஞ லேயே சென்ருன். இருவரும் இரு நாற் காலிகளில் அமர்ந்தனர்.

வெகு நேரம் வரை அவர்கள் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லே. ராமுவிடம் அது ஒரு விசேஷ குணம். மணிக் கணக்காக வேண்டுமாஞலும் பேசாமல் உட்கார்ந்திருப் பான். எல்லாரிடமும் அப்படி அல்ல. ரவியிடம் மட்டும்தான். 'கம்யூனிகேஷன் வாய் வார்த்தைகளிஞல் மட்டும் அல்ல. கண் பார்வை போதும். நெருக்க உணர்ச் சியே போதும்' என்று ராமு சொல்வான்.

ராமு, ரவி இவர்களின் நட்பு இன்று நேற்று தொடங்கியதல்ல. ஆறுவது வகுப் பில் இருவரும் படிக்கத் தொடங்கியபோது முளைத்தது அவர்களின் சிநேகம்.

ரவி சேர்ந்த கல்லூரியிலேயே எப்படியோ முண்டியடித்துக் கொண்டு சிபாரிசுகள் பிடித்து ராமுவும் சேர்ந்து விட்டான். இரு வரும் ஒரே இஷ்ட பாடங்களேத்தான் தேர்ந் தெடுத்துக் கொண்டார்கள்.

கல்லூரி வாழ்க்கை முடிந்து உத்தியோக வாழ்க்கை தொடங்கியதும் இருவருக்கும் ஒரே நிறுவனத்தில் வேலே கிடைத்ததுதான் அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது.

ரவி, ராமுவைப் பார்த்து ஏதோ சொல்ல முற்பட்டான். அப்போது வாசலில், ''மிஸ் டர் ரவி வீட்டிலே இருக்காரா?'' என்ற குரல் கேட்டது.

ரவி, ராமு இருவரும் ஆச்சரியத்தோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண் டனர். ''ராதாவோட குரல் போல இருக்கே!'' என்ற ரவி பரபரப்புடன் வெளியே வந்தான். (தொடரும்)

குதிரைப் பந்தயம் தொடங்கியதும் கிராமவாசி கேட்டார்: ''குதிரைகளே ஏன் இப்படி விரட்டிக் கொண்டு போகிருர்கள்?''

அதற்குப் பட்டணவாசி சொன்ஞர்: ''அதோ முதலில் ஓடி வருகிறதே அந்தக் குதிரையின் சொந்தக்காரருக்குப் பரிசு கிடைக்கும். அந்தக் குதிரையின்மேல் பணம் கட்டியவர்களுக்கு நிறையப் பணம் கிடைக்கும்.''

மீண்டும் ஒரு சந்தேகம் நாட்டுப் புறத்தாருக்கு: ''அது சரி. முதலில் வருகிறவருக்கு மட்டும் தானே பரிசு கிடைக்கும்? மற்ற குதிரைக்காரர்கள் ஏன் விரட்டிக் கொண்டு போகிருர்கள்?''

—பிரியாபாலு





என் தாய்

ருக்மிணி பார்த்தசாரதி

நடந்து கொண்டிருந்த நிர்மலா சட்டென்று நின்றாள். எதிரே ஒரு போர்டு: ''டாக்டர் தாஸ் — மனோதத்துவ வைத்தியர்''

'உள்ளே நுழையலாமா' என்று ஒரு கணம் யோசித்தாள். நுழைந்து? அவளுக்கே தெளிவில்லாத தன் மன நிலையை அவளால் எப்படிப் பிறருக்குப் புரிகிற மாதிரி எடுத்துச் சொல்ல முடியும்?

'இப்போது வேண்டாம்' என்று தீர்மானித்தவள் மேலே நடந்தாள். இதோ, வீடு வந்துவிட்டது. பூட்டிய கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். முகம் கழுவிக் கொண்டு காப்பி போட்டுக் குடித்தாள்.

நிம்மதியான, நிசப்தமான சூழ்நிலையே இதமாக இருந்தது. ஆனால் அப்படி இதமாக இருப்பதே குற்றம் என்ற எண்ணம் தோன்றி மறைந்தபோது, அவள் மறுபடியும் 'நான் அந்த மனோ தத்துவ வைத்தியரைக் கண்டு பேசியிருக்க வேண்டுமோ?' என்று நினைத்தாள்.

அன்று மத்தியானம் அவள் ஆபீஸில் வேலையாயிருந்தபோது விஜயன் டெலிபோன் செய்திருந்தான். — 'இன்றிரவு என் வீட்டில் ஒரு சின்ன பார்ட்டி. நெருங்கிய நண்பர்கள் சிலரை மட்டும் அழைத்திருக்கிறேன். நீ கட்டாயம் வரவேண்டும்!'

''நான் எதற்கு? உன் வயதுக்குரிய நண்பர்கள் நடுவில்...''

''இந்த டயலாக் வேண்டாம். நீ வரா விட்டால் நான் ரொம்பவும் வருத்தப்படுவேன்!''

''அப்படியானால் வருகிறேன்!''

''நான் வந்து அழைத்துப் போகட்டுமா?''

''வேண்டாம் நான் ஆட்டோ பிடித்து வருகிறேன். சாப்பாடு ஆனதும் நீ என்னை உன் காரில் டிராப் பண்ணிவிடு!''

''சரி!''

விஜயன் — அவள் மகன்.

இருபத்தெட்டு வயதான அவளுடைய ஒரே மகன்.

அவனைப் பார்க்கப் போகிறோம் என்று நினைத்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. பார்த்துவிட்டுத் திரும்பிவிடப் போகிறோம் என்ற எண்ணத்தில் நிம்மதியும் இருந்தது. கூடவே, இப்படியெல்லாம் நினைப்பதைப் பற்றிக் குழப்பமாகவும் இருந்தது.

'நான் ஏன் சாதாரணத் தாய்மார்களைப் போல் இல்லை? மகனைப் பிரிந்தால் துயரத்தில் மூழ்க வேண்டாமா தாய்? எனக்கு அப்படி இல்லையே! என்னிடம் ஏதாவது குறை இருக்கிறதா?....

நிர்மலா காப்பி தம்ளரை வாஷ் பேஸினில் வைத்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள். சற்று நேரத்தில் சமையல்கார அம்மாள் வந்தாள், இரவுச் சாப்பாடு தயாரிக்க.

''இன்று சமையல் வேண்டாம்!'' என்றாள் நிர்மலா.

''வெளியில் சாப்பாடோ?''

''ஆமாம். விஜயன் வீட்டில் விருந்து!''

''பாவம். 'பிள்ளை வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போகிறீர்கள். பிள்ளை மருமகள் தன்கூட இல்லை என்று பெத்த மனம் துடிக்கத்தான் செய்யும். நீங்களோ இந்தக் குறையை வெளியே காட்டிக் கொள்வதே இல்லை. ஒரே ஊரில் பிள்ளை தனிக் குடித்தனம் வைத்தாலும் நீங்கள் விவேகத்தோடுதான் இருக்கிறீர்கள்!''


சமையல்காரி போய்விட்டாள். ஆனால் அவளுடைய வார்த்தைகளின் எதிரொலி செவியை விட்டுப் போக மறுத்தது. ''பிள்ளை மருமகள் தன்கூட இல்லை என்று பெத்த மனம் துடிக்கத்தான் செய்யும்!''

'ஏன் என் மனம் அப்படித் துடிக்கவில்லை? அவன் தனிக் குடித்தனம் வைத்தது பற்றி எனக்கு நிம்மதிதான் என்று எப்படி வாய் விட்டுச் சொல்வேன்? ஒருவேளை அவன்மீது எனக்கு உண்மையில் அன்பில்லையோ? நான் தாயாக இருக்கவே தகுதியற்றவளோ?'

சமையல்காரியை அனுப்பிவிட்டு வந்தவள் அப்படியே சுருண்டு சோபாவில் அமர்ந்தாள். மாலை மெள்ள மெள்ள இரவுக்குள் நழுவிற்று.

''ஏன் அந்த பாங்க் மானேஜர் கிரிக்கெட் மைதானத்துக்குள் ஓடுறார்?''

''ரன்னிங் காமென்டரி சொல்லுபவர் 'Gavaskar is yet to open his account' என்று சொன்னாராம் அதுதான்.'' —உதகை பந்து



அவள் எண்ணங்களும் நிகழ் காலத்தை விட்டு இறந்த காலத்துக்குள் நழுவிற்று.

திருமணமானபோது நிர்மலாவுக்குப் பதினெட்டு வயது. விஜயன் பிறந்தபோது இருபது. விதவையானபோது இருபத்தொன்று.

மகனைத் தன் பெற்றோரிடம் விட்டாள் நிர்மலா. இரண்டாண்டுகள் மேலே படித்தாள். பின் அரசாங்கப் போட்டிப் பரீட்சை எழுதி ஆபீஸரானாள்.

இந்த நிலையில் அவள் தந்தை காலமானார். தாயைத் தன்னிடம் அழைத்துக் கொண்டாள் நிர்மலா. விஜயன் தன் பாட்டியின் பராமரிப்பில் வளர, நிர்மலா அலுவலகம் சென்று வந்தாள்.

தாயும் காலமானபோது அவள் தனி மரமாக நின்றாள். அந்த நிலையிலும் குன்றாத உறுதியோடு மகனை வளர்த்தாள்.

அலுவலகம் சென்று வந்தாள். மகனைப் படிக்க வைத்தாள். அவன் சரியாக உண்கிறானா என்று கவனித்தாள். போதுமான அளவு அவனுக்குத் துணி மணிகள் இருக்கின்றனவா என்று பார்த்துப் பார்த்து வாங்கினாள். படிப்பில் அவனுக்கிருந்த ஆர்வத்தைக் கண்டு உளம் மகிழ்ந்தாள். அவனுடைய வளர்ச்சியில் பெருமை கொண்டாள். அவன் தவறுகள் செய்யும்போது அவனைத் திருத்தினாள்....

தாயாகவும் தந்தையாகவும் இருந்தாள்.

அவன் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுக் கல்லூரியில் சேர்ந்தான். வாழ்க்கை தொடர்ந்தது. மெள்ள மெள்ள அவன் தனித்துவம் பெற்று வருவதாக அவள் உணர்ந்தாள். தன்னின்று விலகி வேறொரு உலகுக்குள் அவன் புக ஆரம்பித்து விட்டதை அவள் புரிந்து கொண்டாள். இப்போதும் அவன் ஆடைகளுக்கு அவள்தான் இஸ்திரி போட்டாள். அவனுக்குப் பிடித்த உணவாகச் சமைக்கச் சொன்னாள். ஒவ்வொரு சமயம் ஆங்கிலப் பாடங்களை அவனுக்கு விளக்கவும் செய்தாள். ஆனால் குழந்தையாக அவனை நினைப்பதை அவள் — தனி முயற்சி எதுவுமின்றி எதிர் நீச்சல் போடாமலேயே — குறைத்து வந்தாள். அவனுடைய உலகம் விரிகிறது. அப்படி விரிவதுதான் முறை... விரிவதுதான் அவனுக்கும் — ஏன், அவளுக்கும் — நல்லது.

கல்லூரி நண்பர்களோடு அவன் எப்போதாவது பிக்னிக் போவான் — ஒரு வாரம், பத்து நாட்கள் .... அவனைப் பிரிந்திருப்பதில் அவளுக்கு எந்த விதமான ஏக்கமும் ஏற்பட்டதில்லை.

இப்படி, தன் எண்ணங்களோடு முரண்பாடே இல்லாமல் அவள் இருந்தபோது முதன் முதலில் குழப்பத்தின் விதையைச் சமையல்கார அம்மாள்தான் விதைத்தாள். ''பாவம், பிள்ளை இல்லாமல் உங்களுக்குக் கஷ்டம்தான். அவன்தானே உங்களுக்கு ஊன்றுகோல், துணை எல்லாம்?''

அந்த வார்த்தைகள் அவளைச் சிந்திக்க வைத்தன. இத்தனை நாட்கள் மகனை அவள் ஊன்றுகோலாகவோ, துணையாகவோ நினைத்ததே இல்லையே, ஏன்? கணவனை இழந்த

போதுதான் அவள் தன் ஊன்றுகோலை, துணையை இழந்ததாக நினைத்தாள். விஜயன் அவள் குழந்தை... அவளை நம்பிப் பிறந்தவன். அவள் இந்த உலகுக்கு அளித்த பரிசு அவன்.... அவன் எப்படி அவளுக்கு ஊன்றுகோலாக முடியும்?

இந்த எண்ண ஓட்டம் அவளுக்கே வியப்பளித்தது. ''ஒருவேளை என்னிடம் ஏதாவது குறைபாடு இருக்கிறதோ? விஜயன் தன் எதிர்காலத்தை வளமாக அமைத்துக்கொள்ள என்னைப் பிரிந்துவிட்டுப் போகத்தானே வேண்டும்? அப்படிப் போய்விடுவான் என்ற நினைப்பில் எனக்கேன் எந்த விதமான பயமும் தோன்றவில்லை?''

''இப்போது நான் அலுவலகம் செல்கிறேன். நாள் மேல் நாளாகக் கரைகிறது. ஒரு நாள் நான் ரிடையர் ஆகவேண்டுமே, அப்போது தனிமை வாட்டுமா? ஏன் வாட்ட வேண்டும்? ஏதாவது ஹாபி... ஏதாவது சமூக சேவை. என் நாட்கள் ஓடிவிடும்...''

இப்படித்தான் அவள் நினைத்தாள். இப்படி நினைக்கத்தான் அவளால் முடிந்தது.

கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு விஜயன் மேல் படிப்புக்காக அமெரிக்கா சென்றான். அவள் தனியாகத்தான் இருந்தாள். ''விஜயனைப் பார்த்து நாளாகிறது!'' என்றும், ''பார்த்தால் நன்றாக இருக்கும்!'' என்றும் நினைத்தாளே தவிர அவன் இல்லாத நாட்கள் வெறுமையானவை என்று நினைக்கவில்லை. ''அவனுடைய வாழ்க்கை வளமாக அமைய வேண்டும் என்பதுதான் முக்கியம். என் அருகிலேயே அவன் இருக்க வேண்டுமென்பது முக்கியமல்ல.''


''விஜயன் சீக்கிரம் படிப்பை முடித்துவிட்டு நல்லபடியாகத் தாய்நாடு திரும்ப வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்'' என்று சமையற்கார அம்மாள் சொன்னபோது, அவள், ''கட்டாயம் திரும்புவான். இதில், என்ன சந்தேகம்?'' என்றாள்.

''அதற்கில்லை... வெளி நாடு போகிற பிள்ளைகள் எத்தனையோ பேர் எவளையாவது இழுத்துக் கொண்டு வந்து நிற்கிறதுகளே!''

அவள் பதில் சொல்லவில்லை. ''விஜயனும் தனக்குப் பிடித்த பெண்ணை மணந்து கொண்டு வருவானோ?'' என்று நினைத்தாள். ''நல்ல பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அதில் என்ன தவறு?'' என்றும் நினைத்தபோது, அந்த நினைப்பே குழப்பத்தைத் தந்தது. தன் விருப்பப்படி மருமகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பெரும்பாலான தாய்மார்கள் நினைக்கும்போது அவளுக்கு மட்டும் எப்படி இத்தனை விவேகத்தோடு இருக்க முடிகிறது? நிஜத்தில் இது விவேகம் இல்லையோ? அடிமனத்தில் அவளுக்கு விஜயனிடம் அன்பே இல்லையோ?

மேல் படிப்பை முடித்துவிட்டுத் தாய்நாடு திரும்பிய மகனைப் பார்த்து அவளே பிரமித்துவிட்டாள். போகும்போதுகூட சிறுவன் போல் இருந்தவன் இப்போது முற்றும் வளர்ந்த ஆண்மகனாகக் காட்சி தந்தான். நிர்மலாவுக்குப் பெருமை பொங்கிற்று.

விஜயனுக்கு உள்ளூரிலேயே நல்ல வேலை கிடைத்தது. ஒரு நாள் அவன் தயங்கியவாறு



''என் மனைவி நான் கிழித்த கோட்டை....''
''அட, தாண்டவே மாட்டாளா?''
''ஊஹூம், தைக்கவே மாட்டாள்!''

—உதகை பத்து

அவளிடம் சொன்னான்.... ''ஆபீஸ் பக்கத்திலேயே ரூம் எடுத்துக் கொண்டிருக்கிறேன், அம்மா! தினம் ஆபீஸ் போய் வருவது கஷ்டம்...''

அவன் தன் சுதந்திரத்தைப் பறிகொடுக்க விரும்பவில்லை என்பதை அவள் உடனேயே புரிந்து கொண்டாள்.

''உன் இஷ்டம், விஜயா!'' என்றாள் நிர்மலா.

''யூ டோன்ட் மைண்ட்?''

''நாட் அட் ஆல்!''

''உனக்கு லோன்லியாக இருக்குமா?''

அவள் மெத்தென்று முறுவலித்தாள். ''நீ மேல் படிப்புக்காகப் போனபோது நான் தனியாகத்தானே இருந்தேன்?'' என்று கேட்பது போல் இருந்தது அந்த முறுவல்.

''உன்னை விட்டுவிட்டுப் போக வேண்டும் என்று நான் நினைக்கவில்லை அம்மா... ஆனால், இந்த ஏற்பாட்டில் ப்ராக்டிக்கலாகப் பார்த்தால்....'' அவன் மென்று விழுங்குவதைப் பார்த்தபோது அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''புரிகிறது விஜயா! உன் நிலையில் நானும் இதைத்தான் செய்திருப்பேன்!''

• • •

விஜயன் சென்றுவிட்டான்.

''நீங்கள் செய்கிறது நன்றாகவே இல்லை!'' என்றாள் சமையல்கார அம்மாள் ஒரு நாள்.

''எது?''

''வாட்ட சாட்டமாக இருக்கிறான் பிள்ளை, கைநிறையச் சம்பாதிக்கிறான்.... அழகாக, அவனுக்கு ஏற்ற மாதிரி, உங்களுக்கும் அடங்குகிற மாதிரி ஒரு பெண்ணாகப்பார்த்து அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்காமல் இப்படி ஆபீஸ் ஆபீஸ் என்று தேய்கிறீர்களே!''

அடுத்த தடவை தன்னைப் பார்க்க விஜயன் வந்தபோது அவள், ''கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா? பெண் பார்க்கட்டுமா?'' என்றாள்.

அவன் சிரித்தான். ''ஆஹா! பண்ணிக் கொள்கிறேன். ஆனால் உனக்குப் பெண் பார்க்கும் சிரமம் வேண்டாம். நானே பார்த்து விட்டேன்.''

''என்ன?''

''என்னோடு வேலை செய்கிறாள். கலா என்று பெயர்!''

அவன் பதில் சொல்லவில்லை. மனத்தில் மெத்தென்று ஓர் இதம், ஒரு வெது வெதுப்பு. கலா.... அழகான பெயர்... விஜயனின் காதலி....

''அம்மா! ஏன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்? உனக்கு வருத்தமா?''

வருத்தமா? மகனின் திருமணத்தில் தாய்க்கு வருத்தமா? ''இல்லையில்லை, விஜயா...கலா எப்படி இருப்பாள்? என்ன ஜாதி? என்ன வயது?''

''அழகாக இருப்பாள். இருபத்து நான்கு வயது. நம் ஜாதி இல்லை. ஆனால் உனக்கு அவளைப் பிடிக்கும்!''

கலாவை அவளுக்குப் பிடித்து விட்டது. மாநிறம், மலர்ந்த முகம், பேச்சில், செயல்களில் தன்னம்பிக்கை, நிதானம். அடிக்கடி அவள் கண்கள் விஜயனைப் பார்ப்பதையும் அடிக்கடி விஜயன் அவளைப் பார்த்து முறுவலிப்பதையும் கண்டபோது நிர்மலாவின் நெஞ்சம் ஆறுதலடைந்தது.

வாழ்க்கை தொடர்ந்தது. விஜயன் எப்போதாவது அவளைப் பார்க்க வருவான். சில சமயம் தனியாக, சில சமயம் மனைவியோடு... சற்று நேரம் பேசிக் கொண்டிருப்பான். அவளை அன்போடு விசாரிப்பான். விடை பெறுவான்.

சமையல்கார அம்மாள் நிர்மலாவிடம் சொன்னாள்: ''நீங்கள் மிக தைரியசாலி.''

''ஏன்?''

''பிள்ளை தனியாகப் பிரிந்து போய்விட்டான். உங்களுக்கிருந்த துணை, பலம் எல்லாமே போய்விட்டது.... இருந்தும் நீங்கள் ஒடிந்து போகாமல், வாய் விட்டுப் புலம்பாமல் இருக்கிறீர்களே!''

அவள் அதிர்ந்தாள். ''பிள்ளை தனியே போனால் என்ன? அதற்காக நான் ஏன் வாய் விட்டுப் புலம்ப வேண்டும்? அவன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுதானே முறை?''

சமையல்காரி தொடர்ந்தாள்: ''ஆனால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்று எனக்குப் புரிகிறது. என்னதான் பாசத்தைத் துடைத்தெறிந்து விட்டாற்போல் நீங்கள் இருந்தாலும் உங்களுக்குள்ளேயே நீங்கள் துடிக்கத்தான் செய்கிறீர்கள், பாவம்.''

பாசத்தைத் துடைத்தெறிந்து விட்டாற்போல — அப்படியா நான் இருக்கிறேன்? இது உண்மை யென்றால் என் மனத்தில் பாசமே இல்லை என்று அர்த்தமா? மகன் மீது அன்பே இல்லாதவளா நான்? தாயாக இருப்பதற்கே தகுதியற்றவளா?

தாயின் கடமைகளைச் செய்ய நான் தவறி விட்டேனா? நான் தோற்று விட்டேனா?

மெல்ல மெல்ல இந்த எண்ணங்கள் வலிமை பெறலாயின. அவள் நெஞ்சம் தெளிவற்றுக் குழம்பலாயிற்று.

கடிகாரம் ஒரு முறை அடித்துவிட்டு ஓய்ந்தபோது நிர்மலா தன் எண்ணங்களிலிருந்து விடுபட்டாள். மணி ஏழரை...தன் வீட்டு பார்ட்டிக்கு எட்டு மணிக்குள் வந்து விடும்படி விஜயன் சொல்லியிருந்தானே!

அவசரமாகப் புடவையை மாற்றிக் கொண்டு, தலை முடியைச் சீராக வாரிக் கொண்டாள். கைப் பையை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டினபோது மணி ஏழே முக்கால்.

அவள் விஜயனின் வீட்டுக்குள் நுழைந்த போது அங்கே சுமார் பத்துப் பேர் குழுமியிருந்ததைக் கண்டாள். எல்லோரும் விஜயன் கலாவின் வயது கொண்டவர்கள்... ஏறத்தாழ.... விஜயனும் கலாவும் அவர்களோடு பேசி, இன்முகத்தோடு உபசரித்துக்கொண்டிருந்தார்கள்.

தாயைக் கண்டதும் விஜயன் ஓடிவந்தான். அவளை எதிர்கொண்டழைக்க... அன்புடன், மரியாதையுடன், அவளை ஹாலுக்குள் அழைத்துச் சென்றான்.

அறையில் சட்டென்று மௌனம் கவிழ்ந்தது. எல்லோரும் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ''ஜஸ்ட் ஃப்ரெண்ட்ஸ்'' என்று சொல்லியிருந்தானே விஜயன்! இந்த வயதானவள் யார்?

தாயினருகே தலை நிமிர்ந்து நின்றான் விஜயன். ''ஃப்ரெண்ட்ஸ்! மீட் மை பெஸ்ட் ஃப்ரெண்ட்!'' என்றான்.

மௌனம் கலையவில்லை. விஜயனின் குரல் கணீரென்று ஒலித்தது.


''ஆமாம். இவள்தான் நான் என் வாழ்க்கையில் கண்ட மிகச் சிறந்த ஃப்ரெண்ட். தன் அன்பைச் சங்கிலியாக்கி என்னைப் பிணைக்கப் பார்த்ததே இல்லை இவள். மாறாகத் தன் அன்பை உரமாக்கி என்னை வளர்த்தவள். அவளைக் கண்டுதான் நான் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கற்றுக் கொண்டேன். பதிலுக்கு எதையுமே எதிர்பார்க்காமல் இவள் தன் அன்பை எனக்கு முழுதாக அளித்தாள். ஆம். இவள் என் பெஸ்ட் ஃப்ரெண்ட்.''

விஜயனின் குரல் மிருதுவாயிற்று. ''இவள் என் தாய்!'' என்றான்.

நெஞ்சமெல்லாம் பெருமை நிறைய நிர்மலா தன் மகனைப் பார்த்தாள். ''மனோதத்துவ வைத்தியர் உனக்கு அவசியமில்லை!'' என்று அவள் உள் மனம் கிசுகிசுத்தது.

பாலத்திலிருந்து ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்வதற்காக நின்றிருந்தான் ஒருவன். அவனுடைய நோக்கத்தை அறிந்த, அந்த பக்கமாக வந்த இன்னொருவர் அவனைத் தடுத்து அவ்வாறு செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தினர். அவன் தன் கஷ்டங்களையெல்லாம் அவரிடம் சொன்னான். எதிர்காலம் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கிறது என்று விவரித்தான். பத்து நிமிட விவாதத்திற்குப் பிறகு 'தொப்', 'தொப்' என்று ஆற்றில் இரண்டு சத்தம் கேட்டது'

—பிரபு



அஸ்ஸாம் பிரச்னைக்குத் தீர்வு அவ்வளவு எளிதல்ல

கே. ஸ்ரீனிவாசன்



1960ல் டலாய் லாமா திபேத் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு விரைந்து கொண்டிருந்த சமயம். நானும் இன்னும் சில நிருபர்களும் அஸ்ஸாம் தலைநகரமான ஷில்லாங்கில் முகாம் செய்திருந்தோம். அப்பொழுது கவர்னராக இருந்த ஸ்ரீ பஸல் அலியின் அந்தரங்கக் காரியதரிசி, ஸ்ரீ டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி. தினம் பல நாகா யுவர்கள் அவரிடம் வந்து அமெரிக்காவுக்கு கல்லூரிகளில் படிக்கச் செல்ல அரசின் உதவி கோருவார்கள். இந்தியாவில் தகுந்த கல்லூரிகள் இல்லையா என்று கேட்டால் அவர்கள்முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

அஸ்ஸாம் மாநிலம் பலவிதப் பிரச்னைகளுக்கு உறைவிடம். ஒரு பக்கம் நாகர்கள், மற்ற பக்கம் மிஜோக்கள். இன்னும் ஒரு பக்கம் காசி, ஜயந்தியா மக்கள். இவர்கள் ரோமன் லிபியில்தான் படித்தது பாஸ் செய்தது எல்லாம். ஹிந்தி கூட நாகரி எழுத்துக்கள் மூலம் அல்ல. மதமோ கிறிஸ்துவ மதம். வெளிநாட்டுப் பிரசாரகர்கள் இவர்களுக்கு தூபம் போட்டு அவர்களுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லி வந்தது எல்லோருக்கும் தெரியும். நாகர்கள் தலைவர் ஸ்ரீ பிஜோ இங்கிலாந்துக்குத் தப்பியோடிய பிறகும் கலகம் குறைந்தபாடில்லை.

நாகர்கள், மலை மக்கள் மகாநாடு மற்றும் பழங்குடி மக்கள் எல்லோருக்கும் அஸ்ஸாமில் அஸ்ஸாமியர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. நாகர்கள் கலகத்தை அடக்க ராணுவம் இயக்கப்பட்டது. சமுதாய, பொருளாதார பிரச்னைகள் விஷமத்தனமான பிரிவினைப் பிரச்னைகளுடன் கலக்கப்படும்பொழுது அரசியல் சக்திகள் அவைகளைச் சந்திக்க வேண்டும். துப்பாக்கியைக் காட்டினால் படுவேகமாக வீசும் கைக்குண்டுகளுக்குப் பதில் ரகசிய திராவக வீச்சு ஏற்படும், ஏற்பட்டது.

இத்துடன் நின்றால்தான் தேவலையே! முன்னாள் ஜனாதிபதியாக இருந்த காலஞ்சென்ற ஸ்ரீ பக்ருதீன் அலி அகமது அஸ்ஸாமில் மந்திரியாக இருந்தபொழுது அம்மாநிலத்துக்குள் அப்பொழுது கிழக்கு பாகிஸ்தானாக இருந்த இன்றைய பங்களா தேஷிலிருந்து முஸ்லீம்கள் ஊடுருவினார்கள். 100 அல்லது 200 பேர்வழிகள் அல்ல, லட்சம் லட்சமாக அலை அலையாக. இது காரணமாக எல்லைப் பகுதியில் ஜனத் தொகை கணிக்கப்பட்ட பொழுது வருடத்துக்கு 20 சத உயர்வு காணப்பட்டது. இது தெளிவாக ஊடுருவல் எவ்வளவு என்பதை எடுத்துக் காட்டியது.

திருட்டுத்தனமாக அஸ்ஸாமில் புகுந்தவர்கள் மாநிலத்தை விட்டு அகற்றப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்பட்டபொழுது தகுந்த பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக எப்படி இனி ஊடுருவலைத் தடுப்பது என்பது பற்றி மத்திய அரசு பேசிற்று. இது அஸ்ஸாம் மக்களிடையே கசப்பை உண்டாக்கியது.

இன்று நடக்கும் கிளர்ச்சி புதிதாகத் தோன்றும்; ஆனால் புதிதல்ல. 1960-61ல் மேற்கு வங்காளிகளுக்கு எதிராக இயக்கம் தோன்றி, அம்மாநிலத்தில் உள்ள வங்காளிகள் அவதிக்குள்ளானார்கள். ஆனால் நிலைமை முற்றுமல் பிரதமர் நேரு, ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரியை அனுப்பினார். ஸ்ரீ சாஸ்திரி உருவத்தில் சிறியவர், சாதனையில் உயர்ந்தவர், தேசியத் தலைவர் என்ற அந்தஸ்து இருந்தது. அண்மையில் அஸ்ஸாம் அல்லோலகல்லோலப்பட்டபொழுது அனுப்பப்பட்டவர் யார்? ஸ்ரீ யஷ்பால் கபூர். பிரதமர் காந்திக்கு அந்தரங்க காரியதரிசியாக இருந்தவர்.

மேற்கு வங்காளத்தவர்கள் பேராசிரியர்களாகவும், டாக்டர்களாகவும் மற்றும் நிர்வாகிகளாகவும் அஸ்ஸாமில் இருக்கிறார்கள் என்பது உண்மை. இவர்கள் அங்கு சென்றது சரித்திரபூர்வமான உண்மை. வங்காளிகள் ஆங்கிலத்தை முதலில் கற்றவர்கள் என்பது ஞாபகம் இருக்க வேண்டும். அந்த

ஜாபிதாவில் அவர்கள் பஞ்சாப் முதல் அஸ்ஸாம் வரை பரவினார்கள். இது கிழக்கிந்தியக் கம்பெனி காலத்திலிருந்து நிகழ்ந்த ஒன்று.

இன்று அஸ்ஸாம் கிளர்ச்சி மாணவர்கள் கைக்குப் போய்விட்டது என்றால் அது எதைக் குறிக்கிறது? அரசியல் தலைமை என்பது அஸ்தமித்துவிட்டது என்பதை. ஸ்ரீ சாலிஹா முதல்வராக இருந்தபொழுது அம்மாநிலத்தின் குரலாக இருந்தார். அவருக்குப் பின் வந்த ஸ்ரீ மன்மோஹன் சௌத்ரியும் நல்ல தலைவர். அவருக்கு என்ன ஆயிற்று? அவரை பஞ்சாபுக்கு கவர்னராக அனுப்பினார் ஸ்ரீமதி காந்தி. அவருக்குப் பதில் ஸ்ரீ சின்ஹா என்ற அனுமதேயம் முதல்வரானார். 1977க்குப் பிறகு அங்கு அரசியல் குழப்பம். நன்கு அறியப்பட்ட தலைவர்களை அப்புறப்படுத்தி விட்டு, தனக்கு இஷ்டமான ''தலைவர்களை'' நியமித்தால் என்ன ஏற்படும் என்பதற்கு எடுத்துக்காட்டு அஸ்ஸாம்.

வாக்காளர்கள் ஜாபிதாவில் உள்ள சட்ட விரோதமான ஊடுருவல்காரர்களை நீக்கி, அவர்களை மாநிலத்திலிருந்து அகற்ற வேண்டும் என்பது மாணவர்கள் கெடுபிடி. 1951க்குப் பிறகு வந்தவர்கள் பெயர்கள் அகற்றப்பட வேண்டும் என்று வாதித்தார்கள் அஸ்ஸாம் மாணவர்கள். மத்திய அரசு 1971தான் அடிப்படை என்றது. இடையே அஸ்ஸாம் கவர்னர் 1967க்கு இந்த அடிப்படையைக் கொண்டு செல்லலாம் என்றார்.

பிரதமர் காந்தியின் விஜயம் புஸ்வாணமாகிவிட்டது. மூன்று லட்சம் மக்கள் ஒரே நாளில் சிறை செல்லத் தயார் என்றால் மத்திய அரசின் அவல நிலையை இது எடுத்துக் காட்டுகிறது. மேற்கு வங்கத்தில் உள்ளது மார்க்ஸிஸ்ட் அரசு. அதற்கு இன்னல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் முட்டுக்கட்டை போட்டதால் அஸ்ஸாமில் ஆத்திரம் அதிகரித்துள்ளது.

இன்று உள்ள நிலைமையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஸ்தம்பித்து விட்டது. அதுவே தாக்குதலுக்கும் உள்ளாகலாம். அது நின்றதாலேயே தினம் பல கோடி நஷ்டம். பிரிவினை சக்திகளுக்குக் கொண்டாட்டம்.

தங்கள் கட்சி எப்படியாகிலும் உயர வேண்டும் என்ற மனப்பான்மையைக் கைவிட்டு, எதிர்க் கட்சிகள் நடத்தும் அரசு முதல் பஞ்சாயத்து வரை எல்லாவற்றையும் கலைக்கும் பணியை மறந்து எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் பிரதமர் காந்தி நாடினால்தான் அஸ்ஸாம் பிரச்னை தீரும். நாட்டை ஆள அடியாட்கள் இருந்தால் மட்டும் போதாது. ஆற்றல் வேண்டும், ஆழ்ந்த அனுபவமும் வேண்டும்.



புதுசு! புதுசு!

மேற்கு ஜெர்மனியில் புதிய கண்டு பிடிப்புகள் பல கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் இந்த மடக்கு நாற்காலியும் ஒன்று. பிரித்தால் கூடைநாற்காலிபோல் வசதியாக இருக்கும் இது. மடித்தால் கார் டிக்கியுள் எளிதாய் அடங்கிவிடும். பக்கத்தில் வரும் சைக்கிளில் விரித்த குடையைப் பற்றிக் கொள்ளும் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. இதர நூதன கண்டு பிடிப்புகள்: இரவில் பாட்மின்டன் ஆட ஒளிரும் ஷட்டில்காக் பந்து: திருடன் வந்தால் நாய் போல் குரைக்கும் எலெக்டிரானிக் சாதனம்!

இந்திய சமுத்திரம் 7,50,00,000 சதுர கி. மீட்டர் பரப்புடையது. உலக நீர்ப்பரப்பில் இது ஐந்தில் ஒரு பாகம். இருந்தும் உலகில் அதிகம் ஆராயப் படாமல் இருக்கும் கடல் இந்திய சமுத்திரந்தான்.

அலெக்ஸாண்டர் கோன்ட்ராடோவ்
'தி ரிடில்ஸ் ஆஃப் த்ரீ ஓஷன்' ஸில்

17

பால்மர்ஸன் ஏறிய சிறு படகு அலைகளில் அடி பட்டு, பல முறை மூழ்கும் நிலைக்கு வந்தது.

ஆனால் அதிசயமாக அதன் நுனி மேலே எழுந்து அலையில் பிரயாணம் செய்தது.

பால்மர்ஸன் எந்த யத்தனமும் செய்யாமல் ஓய்ந்து விட்டார்.

புயல் இன்னும் வடியவில்லை.

சிறிதே திறந்த வானம் மீண்டும் மூடிக் கடல் இருட்டாகிவிட்டது.

இனி எதுவும் செய்வதற்கில்லை கடவுளின் கருணை தான் துணை என்று நினைத்தார்.

எலிஸா பாதி உயிராகி, படகின் அடித்தளத்தில் தண்ணீரோடு தண்ணீராகப் படுத்து விட்டாள்.

அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

வெகு நேரத்திற்குப் பின்னர் பால்மர்ஸன் கண்ணை விழித்தார்.

அவர் முன்னால் அந்தக் கோபுரம் மேலும் கிழமாக ஆடியது.

கரைக்குச் சமீபங்களில் வந்து விட்டதை உணர்ந் தார்.

கரை நெருக்கத்தால் அலைகள் அதி வேகமாகப் புரண்டுகொண்டிருந்தன.

அந்தக் கோபுரத்தை வெறித்துப் பார்த்தார். கடவுள் எந்த உருவில் இருந்தால் என்ன!

இந்தக் கோபுரத்தில் இருக்கும் கடவுள் என்னைக் காப்பாற்றுவாரா!

நினைக்கும் போது பளிச் பளிச் சென்று கரையில் ஏதோ மின்னியது.

கோவிலிலிருந்து வரும் மின்னலா அது?

படகு அரைமணியில் கரையில் ஒதுங்கியது.

ராம்சந்த் சொன்னதைக் கேட்டு மல்லிக் கொந்தளிப்பானுள். —ஜூலி இருப் பாளா? என்று சந்தோஷம் குதிக்கக் கேட் டான்.

—வா, இப்படி. என்று காபின் முன்னால் போனார் ராம்சந்த். திரையக் கடிகார முகங்கள். வெவ்வேறு கோணங்களில் முட்கள். குரோமியம் பிடிகள், ஸ்விட்ச்கள், ராடார் ஸ்கிரீன், வயர்லஸ் டிரான்ஸ்மிட் டர்கள். எல்லாம் களேபரமாக

கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை



அமைந்து ஒரு மாய பிரமிப்பை உண்டாக்கின.

—இது எக்கோ ஸவுண்டர். இதை இயக்கறு கூடாதுக்கு அடியிலே ஏதாவது இருக்கான்னு தெரியும்.

—இயக்குங்க! என்று சீறினான் மல்லிக்.

ராம்சந்த் விசைகளைத் தட்ட, ஒரு சண்ணுடி முகப்பில் முன் நகர்ந்து, அத்துடன் ஒரு கிராஃப் மெள்ள இடம் பெயர்ந்தது.

கிராஃபை வெளியே ஆவலுடன் ராம்சந்த் எடுத்தார்.

அவர் முகத்தையே மல்லிக் பார்த்தான்.

சம்பகா சின்னக் குழந்தை போல் இருவரையும் பார்த்து நின்றாள்.

ராம்சந்தின் முகம் வெறுமை காட்டியது.

—என்ன? என்று இடுக்கிட்டுக் கேட்டான் மல்லிக்.

—இதப் பாரு! கீழே எதுவும் இல்லே. வெறும் தரைதான் இருக்கு.

படம் அவன்கையில் வந்தது. வரிசையாகக் கிராஃி வளைவுகள். அதுதான் தரை என்றார். வளைவுகளில் எந்த மாறுதலும் இல்லை.

—எக்கோ சவுண்டர் எதிரொலித் தத்துவத்தில் இயங்குவது. சமதளமாக இருந்தா இந்த மாதிரிதான் எதிரொலி பதிவாகும். சமதளம் இல்லாம, தரையிலே ஏதாவது கிடந்தா எதிரொலியில் அது வித்தியாசம் உண்டாக்கிடும்.

—அப்போ ஜூலி இல்லேன்னு சொல்லுங்கோ.

—இந்த 10.00 டிகிரி வடக்கு, 79.51 டிகிரி கிழக்குலே இல்லே.

—அங்கே இருக்கிறதாத்தானே சார்ட்லே குறிச்சிருக்கு.

—இருக்கலாம். ஆனா கப்பல் மூழ்கி 140 வருஷம் ஆச்சு. இந்த இடைவெளியிலே புதுசா மண் வந்து அதை மூடியிருக்கலாம்.

—அப்படியா? என்று திகைத்தான் மல்லிக்.

—இல்லாட்டி கப்பல் உடைஞ்சு சிதறிப் போயிருக்கலாம். அல்லது கப்பலே நீரோட்டம் இழுத்துப் போய் எங்காவது தள்ளியிருக்கலாம்.

—அது முடியுமா?

—நிச்சயம் முடியும். நீரோட்டம் பெரிய பெரிய மலைகளையே புரட்டும்.

மல்லிக்கிற்குக் கிட்டத்தட்ட அழுகை வந்தது. —அப்போ என்ன செய்யலாம்?

—சுற்று வட்டாரத்தைத் தேட வேண்டியது தான்.

மல்லிக்கின் முகம் வெளிச்சம் போட்டது.

—முடியுமா?

—முடியும். ஆனா கஷ்டம்.

எவ்வளவு கஷ்டம் என்பதை ராம்சந்த் விவரித்தார். படகுக்கும் நேர் கீழாக உள்ள பகுதியைத்தான் எக்கோ ஸவுண்டர் கணித்துக் கொடுக்கிறது. படகுக்குச் சில அடிகள் தள்ளி இருந்தாலும் அது கணிப்பில் எடுத்துக் கொள்வதில்லை. ஒரு இரண்டு மைல் சுற்றளவில் ஜூலியைத் தேட வேண்டுமானால், படகு கிட்டத்தட்ட ஒரு வயல் காட்டை உழுவது போல் வரி வரியாக உழ வேண்டியிருக்கும். கடலில் அப்படி உழுவதானால் எவ்வளவு சிரமம்?

மல்லிக் சோர்ந்து உட்கார, ராம்சந்த் அந்தச் சார்ட்டின் போட்டோஸ்டட் காப்பியை விரித்து வைத்து யோசனை செய்தார்.

—இன்னொரு விஷயம் மல்லிக்! அந்த நாளிலே இப்போ இருக்கிறதைப் போல நுண்ணிய கருவிகள் எல்லாம் கிடையாது. கப்பல் இருக்கும் இடத்தைக் குறிக்க அஸ்ட்ரோலாப், ஸெக்ஸ்டண்ட் ரெண்டுந்தான் உண்டு. இதிலே நிறையத் தவறு வர்றதுக்குச் சந்தர்ப்பம் இருக்கு. இந்தச் சார்ட்டை பாமர்ஸன் எப்படித் தயார் பண்ணினாரோ தெரியாது. ஆனா அவர் குறிச்சிருக்கிற இடம் இதுதான், என் கருவிகள் எல்லாம் அதைக் கரெக்டாகக் காட்டுகின்றன. இருந்தாலும்....

என்று சொல்லிப் படகை இயக்கி ஒரு குறுகிய அளவு வட்டமடித்து எக்கோ ஸவுண்டரில் ஆழங்களைப் பதிவு செய்தார்.

இருவரும் ஆவலுடன் பார்க்க, கிராஃபில் வெறும் சம தளந்தான் தெரிந்தது.

—சரி ஒன்று செய்வோம் என்றார் ராம்சந்த்.

மல்லிக் அவரை ஏறிட்டான்.

—இந்தப் படகிலே ASDICனு கருவி இருக்கு அதைப் பெரும்பாலும் மீன் கூட்டத்தைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தறோம். படகைச் சுத்தி ஒரு மைல் வட்டாரத்திலே ஏதாவது சின்ன வித்தியாசம் இருந்தாக்கூடக் கண்டு பிடிச்சுச் சொல்லிடும்.

எக்கோ ஸவுண்டரையும் அஸ்டிக்கையும் உபயோகித்து இரண்டு நாள் கடலைக் கோதினார்கள். சின்ன அளவு வித்தியாசங்கள் தெரிந்தன தவிர, வேறு எதுவும் தெரியவில்லை.

கரை வந்ததும் சம்பகாவுக்குப் பிரமையாக இருந்தது. மூன்று நாள் கடலில் உலாவியது கனவு போல் இருந்தது. படகா அது? மாளிகை! மாய மாளிகை! பட்டனை அமுத்தினால் சமைக்கிறது. காப்பி போடுகிறது. பாடுகிறது. சூடு கொடுக்கிறது.

என் மனைவி என்றாரே! மனைவியேதான்! எத்தனை வேலை செய்கிறது!

வீட்டுக்கு வந்ததும் கால் பாவவில்லை. மனம் பாவவில்லை. மிதுமிது என்று தேகத்தில் ஒரு பறப்பு. அயர முடியவில்லை. உள்ளே சங்கீதமாகக் கேட்கிறது.

ஒரே ஒரு வருத்தம். நாகலாபுரீசுவரரை மூணு நாள் பார்க்கவில்லை. அவருக்கு உணவு படைக்கவில்லை. எவ்வளவு பெரிய தப்பு அது!

''என்னய்யா கைரேகை பார்க்கச் சொன்னா என் கன்னத்தையே பார்க்கறே?''

''நடிகை 'ஜமாஸ்ரீ'யின் கைரேகை உங்க கன்னத்திலே எப்படி வந்தது?''



மாலையின் சாய்வுக் கிரணங்கள் இறங்கும்போது அவள் கோயிலில் இருந்தாள்.

சுவாமிக்கு அன்னம் படைத்துவிட்டு, ஈஸ்வரி முன் போனபோது அழுகை குமுறிக்கொண்டு வந்தது.

நாளை நான் போட்ட அரளி கருண்டு கறுத்திருந்தது.

—உன்னைக் கவனிக்காமல் போயிட்டேன் இல்லே! ரொம்ப வருத்தப்பட்டேன்! ஆனா, நான் என்ன செய்யறது? எனக்கு வாழ்க்கை வறட்சியாகிட்டு வருது. வருமானம் இருந்தாத்தானே வாழ்க்கை! என்னை உதவிக்குக் கூப்பிட்டாங்க. பணம் தரேன்னாங்க. போனேன். ஒரு ஆம்பிளையை நம்பிப் போகலாமான்னு கேட்பே நீ! அவரைப் பார்த்தா நம்பும்படியா இருக்கார். தனிமையிலே எத்தனை நாள் அவரோட இருந்திருக்கேன். ஒரு நொடி கூட என்கிட்ட அசம்பாவிதமா நடந்துக்கல்லே. அதனாலேதான்....

சன்னதியைவிட்டுத் திரும்பியதும் மல்லிக் மேலே நோக்கிஅவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஏன் இவ்வளவு சோர்ந்திருக்கிறான்? ஒவ்வொரு படியாக இறங்கினாள். கடைசிப் படியில் நிற்க, அவன் முதலில் உட்கார, அவளும் உட்கார்ந்தாள்.

—களைப்பா இருக்கீங்க... என்றாள், குரலில் அக்கறை துளும்ப.

—ஏமாத்தமா இருக்கு சம்பகா!

—ஏது?

—ஜூலி கிடைக்காமல் போனது...

இரக்கமுடன் பார்த்தாள். —இனிமே பிரயோசனமே இல்லையா?

—சந்தேகம்தான் எனக்கு.

—அவர் என்ன சொல்றார்?

—ராம்சந்தரா?

—ஆமாம்.

—முயற்சி இன்னும் பண்ணணும்கிறார்.

—எப்படி முடியும்?

—கடலுக்குள்ளே முக்குளிக்கப் பார்க்கணும்கிறார்.

—ஐயோ!

ஆச்சரியத்தில் கண்களை விரித்தாள் அவள். —நீங்களா முக்குளிப்பீங்க?

—நான் மட்டுமில்லே! அவரும்கூட! முடிஞ்சால் உனக்கும் கத்துக் கொடுக்கணுங்கறார்.

—முக்குளிக்கவா?

—ஆமாம்.

அச்சோ என்று கண்ணில் ஒரு ஆச்சரியம். வாய் சின்னதாகத் திறந்தது.

—நீஞ்சுவியா நீ?

—நீஞ்சத் தெரியும். இந்தக் கிராமத்திலே எல்லாருக்கும் தெரியும்.

—அதுவே போதும். இப்போ ராம்சந்த் மெட்ராஸ் போயிருக்கார். வந்ததும் நமக்குப் பாடம் ஆரம்பமாகும். பயமா?

—பயமில்லே! ஆபத்து இல்லே?

—ஆபத்துதான். ஆனா வாழ்க்கையிலே எதிலேதான் ஆபத்து இல்லே?....

அவள் மௌனமானாள்.

....ஆபத்திலே இறங்கி, சாகசம் பண்ணினாத்தான் பெரிய லட்சியங்களைச் சாதிக்கலாம். ராம்சந்த்தைப் பாரு. நம்மை மாதிரி இருந்தவர். பணத்திலே மிதக்கிறார்.

—நீங்க ரெண்டு பேருந்தான் இருக்கீங்களே! நானும் முக்குளிக்கணுமா?



''வண்டிகளைச் சாராயத்திலே ஓட்டப்போறாங்களாம்! ஆண்டவனே, என்னை அடுத்த ஜன்மத்திலே லாரியாகப் பொறக்க வெச்சுடு!''

—டார்ன் போடணும் சம்பகா! வெளிலேர்ந்து ஆளை அமர்த்தலாம். ஆனா இது எவ்வளவு ரகசியமான விஷயம்!

அவள் கண்கள் வளரும் இருட்டைப் பார்த்திருந்தன. விரல்கள் படிமீது ஸரிகம வாசித்தன.

—சரி.

டைவர்கள் மேலே கொண்டு வந்தது மதுபுட்டிகள். கழுத்து நீண்டு, வயிறு பருத்திருந்தவை. சில இன்னும் கிலம் ஆகவில்லை. கருநீலத் திரவம் உள்ளே தாலாடியது.

வொய்ட்டும், லாரன்ஸும் ஆளுக்கொரு பாட்டில் எடுத்தார்கள்.

முகத்தில் மகிழ்ச்சி வந்தது. ஆனால் எதிர்பார்த்த பரவசம் வரவில்லை.

—இதுதான் கண்டுபிடிப்பா? என்றார் டாரின் ஏளனத்துடன்.

—இதுவும் கண்டுபிடிப்புதான். இது ஜூலியாகவும் இருக்கலாம்; என்றார் வொய்ட்.

வழக்கமான முறையில் வாக்கு வாதம் அவர்களைத் தொடர்ந்தது.

லாரென்ஸ் அவர்களைச் சமாதானப்படுத்த மிகவும் சிரமப்பட்டார்.

நாள் முழுதும் டைவர்கள் சிறு சிறு சாமான்களை மேலே அனுப்பினார்கள். அரித்துப்போன வாள்கள், காலிப் பெட்டிகள், குண்டுகள், தளவாடங்கள்...

சென்ற நூற்றாண்டு யுத்தக் கப்பல் அது என்று அவர்கள் அனுமானிக்க வெகு நேரம் ஆகவில்லை.

வொய்ட்டுக்கு கஷ்டமாக இருந்தது.

லாரென்சும் அவரும் தனியாக விவாதித்தார்கள்.

வெறும் கடலை இப்படி உத்தேசமாகக் கோதுவதில் பயனில்லை என்று லாரென்ஸ் தெரிவித்தார்.

வொய்ட்டுக்கு அது சரியாகத்தோன்றியது.

அவருக்கு இப்போது தம் முயற்சியில் ஒரு வெறுப்புத் தோன்றியிருந்தது.

இரவு முழுதும் யோசித்தார். மல்லிக்கின் நினைவும், அவன் ராமநாதபுரம் கடற்கரைக்குப் போயிருப்பதாக அவனது நண்பன் சொன்ன செய்தியும் நினைவுக்கு வந்தன.

இப்போது அந்தச் செய்தி முற்றிலும் புதிய கோணத்தில் தெரிந்தது. —ஒருவேளை அவன் ஜூலியைத் தேடித்தான் போயிருப்பானோ?

மறுநாள் அவர் லாஞ்சில் கரை நோக்கி விரைந்தார். (தொடரும்)

கடைசி பக்கம் ✲✲✲



வாழ்க்கையின் ஒரே தேவை

கண்ணதாசன்

சென்னை நகரம் முழுவதிலும் பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கும் மனிதர்களைப் பார்த்து, ''ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டுப் பாருங்கள். என்ன சொல்வார்கள்?

''வேலை பார்க்க வேண்டாமா?''

''எதற்காக வேலை பார்க்க வேண்டும்?''

''சம்பாதிக்க வேண்டாமா?''

''எதற்காகச் சம்பாதிக்க வேண்டும்?''

''நிம்மதியாக வாழ வேண்டாமா?''

— விஷயம் இவ்வளவுதான்.

மனிதனுக்கு நிம்மதி தேவை. அதைத் தேடி நிம்மதி இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறோம்.

நிம்மதி எங்கே வருகிறது? மரத்தடிச் சாமியாருக்கு இருக்கும் நிம்மதி, மாளிகையிலுள்ள செட்டியாருக்கு இருக்கிறதா?

இல்லாதவருக்குத்தான் இல்லையே என்ற கவலை; இருப்பவனுக்குக் கவலையே இல்லை என்றுதான் பல பேர் கருதுகிறார்கள்.

உண்மையில் எவனுக்கு வசதிகள் அதிகமோ, அவனுக்கே கவலைகள் அதிகம்.

அடர்த்தியான காட்டுக்குள்ளேதான் பாம்புகள் ஆனந்தமாகக் குடியிருக்கின்றன.

வசதியான மனிதனைச் சுற்றிலும் நன்றி கெட்ட கூட்டம் ஒன்று எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது.

உயிருள்ள மனிதனைப் பார்க்கும் போது கழுகு என்ன நினைக்கும்? 'இவன் எப்போது பிணமாவான், எப்போது சாப்பிடலாம்?' என்று தானே.

'பருத்த தொந்தி நம்மதென்று நாமிருக்க, நாய்நரிகள் பேய் கழுகும் தம்மதென்று தாமிருக்கும் தான்' என்கிறார் பட்டினத்தடிகள்.

பசி எடுத்த நாய் செத்துப் போன சடலங்களை மட்டும் கவ்வுவதில்லை; உயிருள்ள கோழியையும் தான் கவ்வி விடுகிறது.

அந்த நாய்களுக்கும் பேய்களுக்கும் நடுவே, வெறும் பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு தூக்கமில்லாமல் புரண்டு கொண்டிருக்கும் மனிதனைப் பார்த்து, நிம்மதியான மனிதன் என்று, உலகம் கணக்கிடுகிறது.

நிம்மதி, ஏழடுக்கு மாளிகையிலும், ஏர் கண்டிஷன் ரூமிலும் இனிப்பதல்ல. அது சிந்தனைகள் நிறைவேறுகிற இடத்தில் பூத்துக் குலுங்குவது. ஆசைகளும் கனவுகளும் பலிக்கும் இடத்தில் உற்பத்தியாவது.

குற்றாலத்தில் அருவி விழுவது தெரிகிறது. அது எங்கிருந்து வருகிறதென்பது எல்லோருக்கும் தெரியாது.

பகவான் ரமண மகரிஷிக்கு ஒரு கோவணத்தில் இருந்த நிம்மதி, பருக் மன்னனுக்குப் பட்டுப் பீதாம்பரங்களில் கிடைக்கவில்லை.

காஞ்சிப் பெரியவருக்குக் கால் நடையிலே கிடைக்கும் நிம்மதி, கடன்காரன், சினிமாக்காரனுக்கு கார் சவாரியில் கிடைப்பதில்லை.

புள்ளிகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான் கோலங்களாகின்றன. எண்ணங்கள் பூர்த்தியடையும் போது, அதற்கு நிம்மதி என்று பெயர் வருகிறது.

என் வாழ்வில் சலனம், சபலம், சஞ்சலம் பலமுறை வந்திருக்கிறது. தற்கொலை நினைவும் தலைதூக்கி யிருக்கிறது. ஒருநாள் ஆனந்தமாகக் கழிந்து விட்டால், வாழ்க்கையில் நம்பிக்கை; நிம்மதி.

டசி தாங்காமல் சாகலாம் என்று நினைப்பவனை அழைத்து, ஒருவேளை கலையான சாப்பாடு போடுங்கள். 'ஏன் சாக வேண்டும்?' என்று உங்களையே கேட்பான்.

வாழ்க்கை, சட்டத்துக்குக் கட்டுப்படாத, பலசரக்குக் கடை சாமானைப் போன்றது. எல்லாம் கலந்துதான் இருக்கும்!

வாழ்ந்தே தீரவேண்டிய நிர்ப்பந்தத்தில் மன உளைச்சல் என்ன பலன் தரும்?

தண்ணீரில் விழுந்தவன் நீந்தித்தான் ஆக வேண்டும்.

ஒரேயடியாகத் தூக்கிப் போட்டுவிடுவது சுலபம்தான். அதற்கு இவ்வளவு காலம் வாழ்ந்திருக்க வேண்டாமே!

இந்தப் போதனை எனக்கும் கூடத்தான்!



கால் சுடும்போது கை தலையில் அடித்துக் கொள்கிறது. காரணம், காலும் தலையும் ஒரே உடம்பில் இருக்கின்றன.

தண்ணீர் தாகம் எடுப்பவனுக்கு காப்பி ருசியாக இருக்காது.

எது தேவையோ அதைப் பெற்றுவிட முயற்சி செய்வோம்; இல்லையேல் விட்டு விடத் தயாராவோம்.

காரணம், நமக்குத் தேவை நிம்மதி.

''கோடி ரூபாய்களையும் அழகான மகாராணிகளையும் இரண்டு வருட காலம் அனுபவித்துவிட்டு, இருபது வருட காலம் நிம்மதி இல்லாமல் அலைகிறாயா, நிரந்தர நிம்மதி வேண்டுமா?'' என்று இறைவன் என்னைக் கேட்டால், நான் சொல்லக் கூடிய பதில், ''எதையும் எடுத்துக் கொண்டு நிம்மதியைக் கொடு'' என்பதே.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of M...



CHAITRA-G-108-TA

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

